உ

சிவமயம்.

கடவுள்துணை.

திருச்சிற்றம்பலம்.

எயினனூர், சந்தானபுரியென்று வழங்கும்

# ஆதிபுரதலபுராணம்.

இஃது,

ஷெ ஊர்

ப்ரம்மஸ்ரீ சு. விசுவநாத குருசுவாமிகளது

வேண்டுகோளிற்கிசைய,

வளவனூர

ப்ரம்மஸ்ரீ - கச்சிசாஸ்திரியாரவர்களால்

வடமொழியினின்றும் மொழிபெயர்த்துத்தர

ஷடாந்த சமரசவேத சுத்தசன்மார்க்க சங்க

வித்வான்களுள்

ஒருவராய

பண்ணுருட்டி

த. க. சுப்பராயசெட்டியாரவர்களால்

இயற்றப்பட்டது.

ஷெ தலமான்மியத்தை

சிதம்பரம்

அ. சாமிநாதபிள்ளையால்

சுருக்கமான வசனரூபமா யெழுதி முதற்கணமைத்து

சென்னை:

வை. புஷ்பரதசெட்டி அண்டு கம்பெனியாரது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

துர்முகி௵ ஆடிமீ. 1896

# முகவுரை.

1. ஸ்ரீகைலாசபதி நந்திதேவருக்கும், நந்திதேவர் சனற்குமாரருக்கும், சனற்குமாரர் வியாசருக்கும், வியாசர் சூதருக்குமாக அருளிச்செய்த புராணங்க ளறுமூவகைப்படும்.

2. அவைவருமாறு:—சைவம், இலிங்கம், காந்தம், மார்க்கண்டேயம், கூர்மம், வாமனம், வராகம், பௌடிகம், மச்சியம், பிரமாண்டம், வைணவம், நாரதீயம், பாகவதம், காருடம், பிரமம், பதுமம், பிரமகைவர்த்தம், ஆக்கினேயம் என்பவைகளாம்.

3. இவற்றுள் சைவபுராணமுதல் பிரமாண்டபுராண மீறுகவுடைய கம-ம் சிவபுராணங்களாம்.

4. இப்பத்தினுள்ளும் இவ்வாதிபுர ஸ்தலபுராணமானது பிரமாண்ட புராணத்தின் உத்தரபாகத்துள் க்ஷேத்திரவைபவகாண்டம் கூஅ - வது அத்தியாயத்தில் கூ - அத்தியாயங்களாகவுள்ளது.

5. இஃது சனகாதி மகரிஷிகள் காசிக்ஷேத்திரத்தின் கங்கைக்கரையிலுள்ள முத்திமண்டபத்திலேஎழுந்தருளியிருந்துகொண்டு சூதமகாமுனிவரை நோக்கி "திராவிடதேசத்திலே இப்பதிக்கொப்பாயதோர் நற்பதியைச் செப்பவேண்டு" மென்றுகேட்க, அவராற் கூறப்பட்டது.

6. இதில் மூர்த்திதலந்தீர்த்த மென்னு மூன்றினது மகாத்மியங்களும் குறைவற அமைந்திருக்கின்றன.

7. இப்புராணமானது உரையின்றி மூலமாகமாத்திரம் ஆக்கப்பட்டுள்ளதால் இலக்கிய விலக்கணங் கற்றறிந்தவர்க்கன்றி மற்றவர்க்குப்பய னற்றதாகுமென இதன்மான்மியத்தைத் தெள்ளிய வசனரூபமாய் சுருக்கியெழுதி முதற்கண்ணே யமைத்திருக்கின்றனன்.

8. இஃதைப் பத்தியாற் படிப்போர் கேட்போர் முதலியயாவரு முத்தியைப் பெறுவர்கள்.

இங்ஙனம்,

சி. அ. சா.

# சூசிகை.


| அத்தியாய எண். | அத்தியாயங்களின் பெயர். | பக்கம். |
|---|---|---|
| ௧ | சிவதல வத்தியாயம் ... ... ... | ௨௩ |
| ௨ | திரிபுராதியர் சிவபூசாவிதி அத்தியாயம் ... | ௪௭ |
| ௩ | திரிபுராதியர்சிவபூசாவிதி பங்கவத்தியாயம். | ௫௨ |
| ௪ | திருவாலி சிவபூசாவிதி அத்தியாயம்... ... | ௬௩ |
| ௫ | பிரமனூர் சிவபூசாவிதி அத்தியாயம் .. ... | ௬௯ |
| ௬ | சூரியபகவான் சிவபூசாவிதி அத்தியாயம் . | ௭௨ |
| ௭ | சரஸ்வதி சிவபூசாவிதி அத்தியாயம்... ... | ௭௭ |
| ௮ | பத்மதளநாயகியார் திருநாம வத்தியாயம் . | ௯௧ |
| ௯ | பிரதக்ஷணவிதி அத்தியாயம் ... ... | ௯௩ |
| | ஆக அத்தியாயம் ௯-க்கு கவி .. | ௩௮௫ |


## பிரகடனம்.

இத்தலபுராணமானது, சிவதலமகிமையைச் செப்பாநின்றும், திரிபுரர்பலியைத் தேர்ந்திட தெரித்தும், முப்புரமெரித்ததை யொப்புற வுரைத்தும், வாலிபூசையை வளம்பெற வகுத்தும், நான்முகன் பலியை நயம்பெற வுரைத்தும், ஆதவன்பூசையை யறிந்திட வறைந்தும், நாமகள்பலியை நலம்பெற நவின்றும், பத்மதளாம்பிகை நற்பெயர் பகர்ந்தும், பிரதக்ஷணத்தைப்பெரிதும் பேசியும் வருதலால் விசேடித்த பெருஞ்சிறப்புப் பொருந்தியதாகும்.

இதனைப் பத்திமான்களான ஒவ்வொரு கனவான்களும் வாங்கி வாசித்து இத்தலத்தி னற்புதப்பெருமைகளை யறிந்து ஆதிபுரா தீசர்பா லன்புபூண்டொழுகுமாறு பன்முறையும் பிரார்த்திக்கின் றனன்.

இப்புராணத்தைப் பெற விரும்புவோர் கூடலூர் தாலூகா நெல்லிகுப்பத்துக் கடுத்த எய்தனூர் மகாசிவக்ஷேத்திரத்தில் ஆதி புராதீச ராலயத்தின் சர்வசுதந்தரரும் தர்மகர்த்தரும் பூசாகைங் கரியருமாகிய பக்திமான் ப்ரம்மஸ்ரீ சு. விஸ்வநாத குருசுவாமிக ளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,

இ. [illegible]

# சாத்து கவிகள்.

சென்னையில் வசிக்கும்

சோடசாவதான முத்தமிழ்க்கவிஞராகிய

யாழ்ப்பாணம்

## வே. சுப்பிரமணியப்பிள்ளையவர்கள் இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பாரோங்குநவகண்டத்தெழுதீவின்வளங்கொண்டபரதகண்டப்
பேரோங்குநாவலந்தீவிதுவெனவுமடிகளாற்பிறங்குகின்ற
*தாரோங்குமாரியமெஞ்ஞானவர்த்தமாமிதனிலவதரித்துச்
சீரோங்குசிவஞானமுறுவர்சிவமெனமறையுஞ்செப்புமன்றே. (க)

செப்புமறை யாகமங்கட் டெளிவோங்க நெறித்தமிழின் செய லுமோங்க, வொப்புவமை யிலியரசு நம்பியுதித்தற் குறுதியுடனு மோங்க, முப்புவன மும்புகழு முனைப்பாடித் தனைநாடி மூர்த்தி தன்றற், றிப்பியங்கொ ளதிகைக்குந் தென்கங்கைக் கெடிலத்துக்கு தக்கின் மேற்பால். (உ)

பல்வளங்கொள் பண்ணுருட்டிக் கண்வளர் சேனைத்தலைவர் பண்பிற்சைவ, நல்வளங்கொ டாய்க்கிட்ணிக் கஞ்சமலைத் தாதை யா னவிலவெய்தி, இல்வளங்கொ ளிருவர்க்கோ ரொச்சமிது வென க்கொடுக்க விசைந் துதித்தான், சொல்வளக் கண்மணி சுப்பராய மணி யிவனெனவுஞ் சொலவுந் தானே. (ங)

சொல்லரிய மறைமிருதி யாகமங்க ளெல்லாமுந் தோன்று தொட்டே, வெல்லரிதென் றுரைவழங்க வெகுகலைகள் கற்றுணர்ந் த வீறுநோக்கி, எல்லவருங் கேட்குமாவிய விசைக்கும் நாடகத்தி னெழிற்கு மெல்லாம், வல்லவனு யாறந்தச் சமரசத்தின் மாபினனுய் வழங்கிச் சின்னுள். (ச)

---

* ஆர் - நிறைவு.

மயிலாப்பூர்ஞானிபுகல்மலையாளிமன்விருத்தமங்கலங்கொட்
பயில்வேள்வியமுதநாயகபதிகம்வெள்ளிவேற்பதிகமாகுப்
புயல்பதிகமணிமாலைக்காளிதிருவிருத்தங்கட்புகழ்வீரட்டச்
செயமருநல்லந்தாதிப்பெரியநாயகிப்பவந்தத்தமிழுஞ்செப்பி. (ரு)

குதர்க்கவிலக்கணக்கீதகோடோத்திரமொகரக்குன்றந்தாதிப்
*புதர்க்கடொழுமாகமவேதாங்கமனுபவநிலையிற்புகுத்தம்யோகச்
†சிதர்க்கணிலக்கணச்சுருதியாறினொடுதிருச்சந்தத்தேவிமாலை
யதர்க்கணெழுமாருடநூலச்சமையாதுளதனையறியுமாறே. (சு)

புந்திநிலைதரமிசரபுண்ணியத்தாலாறந்தப்பொருளுங்கண்டோர்
சிந்தனைசெய்கௌமாரத்திருவருட்பாவேணுதித்தேவர்தோன்றி
வந்தனைகொள்சந்தானந்தாதிபுரிமாதவர்க்கோராரமாகத்
தந்தபுராணம்மிதனைப்பதின்மூன்றாமுறையெனவுஞ்சாற்றுவோமால்.

---

தஞ்சைவித்துவான் டாக்டர்

ம-ா-ா-ஸ்ரீ

## சண்முகப்பிள்ளையவர்க ளியற்றியது.

---

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

உலகமடந்தைக் குறுநற் றிலகம்போல வொப்புவமை யின்றி நடு நாட்டி லோங்கும், இலகுபண் ணுருட்டியினற் பிறவிதோறு மியற்றுதபோ பலங்களோ ருருவாச் சேர்ந்து, நலமல்கு சேனைதலை வணிகத்தார்க ளன்மரபிற் கஞ்சமலைச் செம்மற் றன்பாற், குலம் விளங்கத் தோன்றி சுப்பராயச் செல்வன் குழவியாய்ப் பிறந்தேறி வளருநாளில். (க)

கலைபயிலுந் தாத்தவர்பாற் கருதிக்கல்லாக் கன்னிமுத்த மிடேர்ந்து கவின்சேர் ஞான, நிலைபயினல் விதிதவறுத் தவத்தர்வீறு நீர்மையினிற் பிறழாது நிமல முத்தத், தலையாயார் தம்வழிக்கீ ழொழுகி மேலாஞ் சடாந்தசம ரசவேத சுத்தமார்க்கத், தலையாத தெய்வச்செந் தமிழ்க்குட்டேரு மரியபுல மைத்தொழிலை நடத்திப் பின்னும். (உ)

---

* புதர் - புலவர். † சிதர் - பூந்தாது.

புகழ்பெருகுந் தெய்வமறைத் தமிழினேங்கும் போற்றுமெ ழிற் பெரியநாயகி யம்மன்றன், றிகழ்பிள்ளைத் தமிழோடும் நாலைந் தொன்றுத் திகழ்பிரபந் தங்களைச் செப்ப லோடு, மகழ்கணித சோதிடநூற் கடலைமாந்தி யவ்வழியா யுலகவுபகார மாக, நிகழெதிர்செல் காலவகை யாதியங்கை நெல்லியங் கனியென்ன நெறியிற் றோன்ற. (௩)

அழுத்தமா யாருடநூற் சாத்திரத்தை யணிபெறவே செய்த லொடு மமைதி யுற்றுப், பழுத்தபுரா ணங்கள்பதி னெட்டிற் றேறும் பண்புபெறும் பிரமாண்ட புராணந் தன்னில், வழுத்து சந் தானத் தாதிபுரி யென்றும் வழங்குமெழி லெயினனூர் புராணந் தன்னை, எழுத்திலக் கணமிசை நாடகமுந் தோன்ற வினியபொ ருட் சுவையுஞ்சொற் சுவையுந் தோன்ற. (௪)

நவநவமா யலங்கார ரசமுந்தோன்ற நாட்டணியு நகரணியும் நலத்திற் றோன்ற, சிவமிடத்திற் றோன்றுசிறப் பாயமைந்த செம் மையருட் சத்திகளுந் தெளிவிற் றோன்ற, தவமுளார் தங்களுக்கே யுரியதாகுஞ் சைவசித் தாந்தநெறி தழைத்துத் தோன்றப், பவக் கடலை நீந்தவரும் தோணியென்னப் படியின்மிசை யியற்றியருட் பண்புற் றானே. (௫)

---

அரன்வாயல்

## தங்கவேலுப் பிள்ளையவர்கள்

இயற்றியது.

---

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

நவசரிதங் கைக்கணி மின்னூர் நடஞ்செய் சந்தான நகர்க்குரி தாஞ், சிவசரிதம் வடமொழியிற் சூதமுனி குயிற்றலெனச் செவ் வ வெள்ளான், றவசரித மிஃதெனத்தென் மொழியினிற் சொற் றுன் விழைந்த துணிவான் மானுந், தவசரித மம்மவெனத் திகழ் கழிச் சுப்பராய னுயர்தமிழ் வல்லோனே.

சாத்துகவிகள் முற்றிற்று.

---

இஃது சிதம்பரம்,

"அ. சாமிநாதபிள்ளையா லெழுதப்பட்டது".

உ

சிவமயம்.

கடவுள் துணை.

எயினனூர், சந்தானபுரியென்றுவழங்கும்

# ஆதிபுரமான்மியச் சுருக்கம்.

## ஆதிபுரச்சருக்கம்.

சிறப்புப்பொருந்திய நைமிசாரணிய வாசிகளான சனகாதி மகரிஷிகள் ஓர்நாள் மத்தியானத்திலே தத்தமக்குரியநித்தியகருமங்களை முடித்துக்கொண்டு பலரும் ஒருங்குசேர்ந்து கிடைத்தற்கரிய முத்திப்பேற்றினைத் தரத்தக்கக் காசி க்ஷேத்திரத்தை யடைந்து விசாலாக்ஷிசமேத விஸ்வநாதப பெருமானைத் தரிசித்துவணங்கிப் பின்கங்கைக்கரையிலுள்ள முத்திமண்டப மத்தியில் எழுந்தருளியிருந்தார்கள். அப்பொழுது திருக்கயிலாயத்திலே சிவபெருமானைத்தரிசித்துக்கொண்டு முத்திமண்டப மார்க்கமாகவரும் மகாதபோ சிரேஷ்டரான சூதமகாமுனிவரை யாவரும் எதிர்கொண்டு வணங்கி அழைத்துவந்து அம்மண்டபத்தில் வீற்றிருக்கச்செய்து அவரை நோக்கி, சர்வசாஸ்திர புராணமர்மதர்மங்களை யுள்ளபடியுணர்ந்த ஏமுனி சிரேஷ்டரவர்களே! இகபரசுகங்களை யெளிதில் தரத்தக்கதாயும், இக்காசிமுதலான சிவக்ஷேத்திரங்கட்குச் சமமாயும், ஸ்ரீ நாராயணமூர்த்தியுடன் பார்வதி சமேதரான பரமசிவன் எழுந்தருளியிருக்குந் திவ்யஸ்தலமாயும், எம்மொழியினும் நன்மொழியாய தென்மொழிவழங்குந் திராவிடதேசத்திலே உள்ள ஓர் சிவக்ஷேத்திரத்தின் பிரபாவத்தை அடியேங்களறிந் துய்யுமாறு தேவரீர் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று யாவரும் பன்முறையும் நன்மனதாய் வணக்கத்துடன் கேட்க, சூதபுராணிகர் சொல்வாராயினர்.

பத்திசிரத்தையில் நித்தமும் விரைந்து முத்திதலத்தினில் மெய்த்தவம்புரிந்த உத்தம சீலர்களான ஏ தபோதனர்காள்!! பிறந்து இருந்து இறந்து பலியேற்று உண்டுழைத்துழலும் பசுத்துவமுடைய பல்வகைத்தேவர்கள்வசிக்கும் வெறுநாடுகளில் எட்டுணையு மிட்டமிராது பரத்துவமுடைய எம்பரமகருணாநிதியாகிய பரமேசுரன் அன்பர்கட் கருள்செய்வான் வேண்டித் திருவுருக் கொண்டெழுந்தருளியிருக்குந் திவ்யஸ்தலங்களில் திரிகாலத்தும் திரிகரணசுத்தியோடு மன்பு மீதுறக் கேட்டலால் மிகமகிழ்ந்து கூறுகின்றோம், கேட்பீர்களாக:—

ஒருவிதத்தானு மொப்பற்று விளங்குந் திராவிட தேசத்திலே சோழமண்டலத்திலே நடுநாட்டிலேயுள்ள அதிகாபுரியென்னுந் திருவதிகை க்ஷேத்திரத்திற்குக் கிழக்கில் ௫ - கடிகை தூரத்திலும், மாணிகாத புரமென்னுந் திருமாணிக்குழிக்கும் கெடிலநதிக்கும் வடக்கே க - கடிகை தூரத்திலும், எய்தனூர், சந்தானபுரியென்று வழங்கும் ஆதிபுரமென்னு மகாசிவக்ஷேத்திர மொன்றுண்டு. அதில் சாக்ஷாத்கார சுத்தசாட்குண்ணிய பரிபூரணரான பரமசிவம் திருக்கோ

யில் கொண்டு ஆதிபுராதீசர ரென்னும் திவ்ய திருநாமமுடையராய் பத்மதள நாயகி யென்னும் அருட்சத்தியோடு தோன்றி அன்பர்கட் கருள்சுரந்தருளி விளங்குகின்றார். அன்றியும் ஆங்கே ஸ்ரீ வைகுண்டநாதரும் எழுந்தருளியிருக்கின்றார். அத்தலத்தின் கீழ்த்திசையில் பிரமதீர்த்தமும், தென்றிசையில் வாலிதீர்த்தமும், தென்மேற்குத் திசையில் பத்மதீர்த்தமும், மேற்றிசையில் ஞானதீர்த்தமும், வடதிசையில் சோமதீர்த்தமும், அக்கினிதிசையில் சூரியதீர்த்தமும், வாயுதிக்கில் சக்கிரிதீர்த்தமும், ஈசானியதிசையில் இருடிதீர்த்தமும், அம்பிகை சந்நிதியில் வாணிதீர்த்தமு மாகிய நவதீர்த்தங்களும் அமைந்திருக்கின்றன.

பௌர்ணமிதிதி விடியற்காலத்திலே விதிப்படி பிரமதீர்த்தத்தில் சங்கல்ப பூர்வமாக ஸ்நானஞ்செய்து பின் மற்றைத்தீர்த்தங்களி லெல்லாம் ஸ்நானஞ்செய்து மத்தியானத்திலே தர்ப்பணக் கிரியைகளோடு பிருகினிநதியில் மூழ்கி அதன்பின் மாலையில் கெடிலநதியில் ஸ்நானஞ்செய்து ஆதிபுரீச ரடிபணிந்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை நூருருச் செபிப்பவர்கள் கிடைத்தற்கரிய * சாருபபதமடைவார்கள். பிசாசால் துன்பமுறுவோர் வாணிதீர்த்தத்தில் இடைவிடாமல் ௩0-தினம் மூழ்கி ஆதிபுராதீசர், இலக்ஷ்மி நாராயணமூர்த்தியையும் தரிசிக்கின் மேற்கூறிய துன்பநீங்கி பரிசுத்தராவார்கள். பங்குனிமீ பௌர்ணமியன்று சக்கிரிதீர்த்தத்தில் கங்கைகலந்து வருவதால் பக்திசிரத்தையோடு ஸ்நானமுதலியன செய்வார் † சாயுச்சியபதவி யடைவார்கள்.

வேண்டுவார் வேண்டியவண்ணம் அருளும் எமதையன் ஆதிபுராதீசருக்குச் சந்தான நகராதீசரென்றும், விட்டுணு வல்லபரென்றும்பெயருமுண்டு. அச்சாம்பமூர்த்தியைவாலி, பிரமன், சூரியன், சரஸ்வதி, சப்தரிஷிகள் மற்றும் அநேக தேவர்களும் பூசித்திருக்கிறார்கள். சப்தபிரகாரங்களுடன் நவதீர்த்தங்களோடும் விளங்குகின்றமையால் பூலோக கைலாசமாய் விளங்குகின்றது. பிரம தீர்த்தத்தினின்றும் திருமஞ்சனங்கொண்டு அரன்முடிக் கபிஷேகித்து பூசைநைவேத்தியாதிகளை விதிப்படி செய்வித்து வணங்கினோர் ௯-அஸ்வமேதயாகம் செய்தபலனை அடைவார்கள். யேகாதசருத்ர வபிஷேகத்தை விதிப்படிசெய்தவர்கள் நான்கு சமுத்திரத்திற் குட்பட்ட பூமியைத் தானஞ்செய்த பலனடைவார்கள். காமிகாகம விதிப்படி சூரியன்முதலிய பரிவாரதேவர்களைப் பூசித்து அதன்பின் ஆதிபுராதீசருக்குப் பஞ்சகௌவிய பஞ்சாமிர்தங்களினாலே "வியோமவியாபினி" முதலான வேதாகம மந்திர பாராயணங்களுடன் அபிஷேகித்து சோடசோப சாரங்கள் செய்து அருச்சித்து வழிபட்டோர் சிவசாக்ஷாத்காரமாவார்கள். அன்றியும் அரன்அரி இருவரும் அவ்வாலயத்துள் எழுந்தருளியிருப்பதால் கைலாயம் வைகுண்டம் என்னு மிரண்டினுக்கும் சமானமா யிருக்கின்றது. இன்னும் அதன்பெருமையை இரண்டாயிரம் நாவுடைய ஆதிசேடனாலும் அளவிடல் அரிதாமெனில் இங்கு யான் புகல்வதென்னே! இன்னும் அத்தலத்தில் ஒவ்வோரமயங்களில் ஆதிபுராதீசரால் நடந்த பல அற்புதத் திருவிளையாடல்களை வியாசர்பால் கேட்டறிந்தவண்ணம் விளம்புகின்றேன்; கேட்பீர்களாக.

---

* சாருபம்-தேவாம்சம். † சாயுச்சியம்-சிவத்தில் இரண்டறக்கலத்தல்.

## திரிபுரதகனச்சருக்கம்.

முன்னொரு காலத்திலே தாரகன், தாருகாக்ஷன், வித்தியுன்மாலி என்னு மூன்று அசுரர்கள் அநேக சைன்னியங்களோடு சிவபூசா பலத்தினாலே மகா புஜபலபராக்கிர மிகளாயிருந்து பிரமதேவனைநோக்கி அநேகவருடகாலம் அதிகோர தவம்புரிந்து இரும்பு, வெள்ளி, தங்கம், என்னு மூன்று லோகங்களினாலேயும் தனித்தனியே ஆக்கப்பட்ட மூன்று பட்டணங்களையும், நினைத்தபோதெல்லாம் அவைகளோடும் திரிலோகங்களுக்கும் பறந்து செல்லத்தக்கதாக அப்பட்டணங்களுக்கு வெகுவிநோதமான சிறகுகளையும், அதில் வசிப்பவர்களான அசுரர்களுக்குத் தேவர் மனிதர் முதலானவர்களால் மரண முதலிய தீங்குகள் உண்டாகாமையும் ஆகிய இவ்வரத்தைக்கேட்க, பிரமதேவன் அதற்கிசைந்து "அப்படியே ஆகுக ; ஆனால் எக்காலத்தில் உங்களால் சிவபூசை செய்யத் தடைப்படுகின்றதோ அப்போது மரணமடையப் படுவீர்களாக" வென்று வரமளிக்கப் பெற்றுப் பின் திரிலோகங்களிலேயுஞ் சஞ்சரித்து ஆங்காங்குள்ள இந்திரன் முதலான அஷ்டதிக்குப் பாலகர்களையும் பலவித யுத்தங்களால் பாதித்துவந்தார்கள். இப்படி சிலகாலந் துன்பமுற்றுவந்த இந்திராதி தேவர்கள் பிரமதேவனிடஞ்சென்று அசுரர்கள்செய்த இம்சைகளைக்கூறி வேண்டிநிற்க, பிரமதேவன் அவர்களை உடன்கொண்டு வைகுண்டத்திற்குச்சென்று இலக்ஷ்மிபதியைக்கண்டு வணங்கிநின்று அவர்பால் தேவர்களுக்குத் திரிபுராதிகள் செய்த இம்சைகளையெல்லா மெடுத்துரைக்க, அவர் தேவர்களுக்கெல்லாம் அபயங்கூறி அனைவரையு மழைத்துக்கொண்டு கைலயங்கிரிக்குச்சென்று பார்வதிசமேதரான பரமசிவனடிபணிந்து தேவர்களது குறைநீக்கியருள வேண்டிக் கொள்வாராயினர். அதுகேட்ட கருணைசொரூபியாய கண்ணுதற்பிரான் தேவர்களை நோக்கி "தஞ்சமென்றருளி இனிநீங்கள் கொஞ்சமு மஞ்சவேண்டாம்; ஆனால் அனைவரும் அதிமேன்மைபொருந்திய "உபசத்" என்னும் யாகத்தைச் செய்யக்கடவீர்கள்; நாம் அதன்பின் உங்கட்கிடர்செயும் திரிபுராதியர்களைச் சம்ஹரிப்போம்" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். உடனே கமலக்கண்ணன் மனமகிழ்ந்து தேவர்களை யாகஞ்செய்யுமாறு ஆக்கியாபித்து, தாம் காஷாயவஸ்திரம், விபூதி, உருத்திராக்ஷமுதலிய சிவசின்னங்களணிந்து கையில் மயில்தோகைபற்றி இந்திரமாயா ஜாலகோலத்தராய் நாரதரை தமக்கு இன்றியமையாத சீடராக உடன்கொண்டு திரிபுரத்தையடைந்து அங்கே ஓர் தடாகதீரத்திலே ஆசிரம மமைத்துக்கொண்டு அதிலிருந்தார். இங்ஙன மிருக்குநாளிலே தம்மைக்காண வந்த திரிபுராதியர்களை மாயாதந்திர சாஸ்திரோப தேசங்களால் மயக்கித் தன் வசப்படுத்தி சிவபூசையினின்றும் பிறழ்ந்து பௌத்தம், சமணம், பாஞ்சராத்திரம், லோகாயதம், பாசுபதமுதலிய பல பொய்ச்சமயத்தராகச் செய்து பின் கைலயங்கிரியடைந்து சிவபெருமானைத் தரிசித்துவணங்கித் தாம் திரிபுர பட்டணத்தி லியற்றியவன்னை மெடுத்துரைத்தார். அதுகேட்ட பரமசிவம் "மிக மகிழ்ந்து நீவிர் செய்தது மிக நன்று நன்று" என்று தேவர்களால் "உபசத்" என்னும் யாக முடிந்தமைகண்டு மூப்பத்து மூக்கோடி தேவர்களையும் உடன்

கொண்டு கைலையினின்றும் எழுந்தருளி திருவதிகையென்னுஞ் சிவக்ஷேத்திரத்
திற்கு வடகீழ்த்திசையில் விளங்கும் ஆதிபுரத்தையடைந்து ஆங்கே தேவர்களை
யெல்லாம் சைன்னியங்களாகவும், பூமியைத்தேராகவும், நான்கு வேதங்களைக்
குதிரைகளாகவும், பிரமதேவனை சாரதியாகவும், மகாமேருவை வில்லாகவும், வா
சுகியென்னுஞ் சர்ப்பத்தை நாணாகவும், விட்டுணுவை பாணமாகவும் அமைத்தரு
ளித் தாம் திரிபுர சம்மார வீரசொருபத்தராய் அம்பில் பாணத்தைப்பூட்டி அதி
அற்புதத் தெய்வத்தேரை நடத்தமுயன்றார். அப்பொழுது அத்தேர் சிறிதுதூரஞ்
சென்று சாரத்தியரது பராமுகத்தால் மார்க்கத்தைவிட்டுப் பிறழ்ந்து செல்லாது
நிலையுற, அப்பொழுது நீலபாவதம்போன்று வடதிசையினின்றுவரும் வாலியைக்
கண்டு ஏ இந்திரபுத்திரா! நீ இங்கே போந்ததெதுகொண்டென்றார். அப்பொழுது
வாலிசம்ஹாரமூர்த்தியைநோக்கி, அண்டாண்டங்களையும் ஆண்டு அனுக்கிரகித்து
வரும் அண்ணலே! அடியேன் தமது திவ்யானந்தத் திருக்கோலக்காக்ஷியைக்
கண்டுகளிக்குமாறேயன்றி வேறின்று; ஆதலால் இத்திரிபுரசம்ஹாரத் திருக்கோ
லக்காக்ஷியை யான் யெப்போதுந் தரிசித்திருக்கக் காக்ஷிகொடுத்தருளல்வேண்
டுமென் றடிபணிந்து மானஸிகபூசையால் மகிழ்ந்துநிற்க; சிவபெருமான் வாலி
யைநோக்கி, ஏ பக்தசிரேஷ்டா! நீ கோரியவண்ணம் இச்சொருபத்தோடு நீண்
டகாலம் ஈண்டிருக்க விசையோம். என்னெனில், இனித் திரிபுராதியர்களைச் சம்
ஹரித்துத் தேவர்களுக்கு அனுக்கிரகிக்கவேண்டிய பிரதோடகாலம் சமீபித்
தது. இப்போது நீசெய்த மானஸிகபூசையால் மிகமகிழ்ந்தோம். நாம் முப்போ
தும் விளங்கும் கைலாசம், சிதம்பரம், மதுரை, திருவாரூர், காசி, அன்பரகம்
என்னு மிவ்விடங்களைவிட இவ்வாதிபுரியில் எவ்வாற்றானு மளவிடப்படாத ஆன
ந்த சொரூபியாயளவு கடந்த நெடுங்காலம் அமர்ந்து எண்ணுவார் எண்ணியவ
ண்ண மிசைத்தருளுகின்றோம்; அன்றியும் விசுவாமித்திரர் வசிட்டர் என்னு
மிவ் விருவரும் ஒருவருக்கொருவர் நாம் வல்லோம் நாம் வல்லோம் என்று
கொண்ட விவாதத்தில், சூரியன் ஆக்ஞையின்றி சென்று மத்தியஸ்தம்செய்த
மையா லடைந்த சாபத்தை, இவ்வாலயத்துள் சகளத் திருமேனிகொண்டு ஆதி
புராதீசுரரென்னு நாமத்தோடு விளங்கும் நம்மைப்பூசித்து நீக்கிக்கொண்டமை
யாலும், இன்னும் ஏறுதி நாதன் என்னும் ஓர் பக்தனுக்கு இங்கே அனுக்கிர
இக்கவேண்டுவதாலும் இந்தஸ்தலமானது மகாவிசேடம் பொருந்தியதாகும்.
இதில் யாம் ஆதிபுராதீசுரரென்னுந் திருநாமத்தராய் பத்மதள நாயகியென்னும்
அருட்சத்தியோ டமர்ந்திருக்கின்றோம். இங்கே நம்மைப்பத்தியாற்பணிந்து ஈற்
றில் சின்னகரடைந்து முத்தியைப் பெறுவாயாக; ஆயினும், நீ இச்சித்தவண்ண
ம் திருவதிகையில் இவ்வதிகரே உக்ரகோர வீரசொரூபத்தரா யெழுந்தருளியிரு
க்கும் நம்மை வைகாசிமாதச் சுக்கிலபக்ஷ அக்ஷயதிரிதியையன்று பானகபூசை
முதலியவைகளா லருச்சித்துத் தரிசிக்கக்கடவாய். நின்னையன்றி இன்னும் யா
ரொனும் அத்தினமே அத்தலத்தில் அங்ஙனஞ்செய்து வேதியர்களுக்குப் பழம்,
புஷ்பம், தாம்பூலம், பக்ஷணம், குடை, பாதரக்ஷை முதலியவைதந்து உபசரி
த்தவர்கட்கும் அறம்பொருளின்பம் வீடென்னும் புருஷார்த்தம் நான்கையுந்
தந்தருளுகின்றோம் என்று திருவாய் மலர்ந்தருள, வாலி விடைபெற்றுச் சென்

றான். அதன்பின் சிவபெருமான் அவ்விடத்தினின்றும் எழுந்தருளி திருவதிகைக்குத் தென்பாலாகச்சென்று திரிபுரத்தைச் சமீபித்து இறுமாப்பு வசத்தர்களாயெக்களித்திருக்கும் திரிபுராதியர்களைக்கண்டு புன்னகைகொண்டார். அதனால் அப்புரம் அக்கினிபற்றியழிய, பின் சிவபெருமான் தேவர்களோடும். திருவதிகையை மருவியிருந்து தேவர்களுக் கருள்சுரந்து பிறகுதத்தம் நிலையைப் பொருந்தினார்கள். இவ்வித அற்புதங்களுக் ககமாயிருந்த ஆதிபுரி, அதிகாபுரி என்னு மிப்பதிகளைத் தரிசித்தவாகள் சகலபோக பாக்கியங்களையும் பெறுவாகள்; நிற்க, இப்பதியில் சகலதேவாகளும் ஒன்று கூடினமையால் ஆதிபுரமென்றும், பாணசந்தானஞ் செய்ததால் சந்தானபுரியென்றுந் திருநாமம் விளங்கலாயிற்று. இன்னும் இதைப்பற்றி பிரமாண்ட புராணத்தின் உத்தரபாகத்துள் கூஅ-வது அத்தியாயத்தில் விரிவாய்க்காணலாம்.—முற்றும்.

## வாலிபூசைச்சருக்கம்.

விந்திய பாவதத்திற்குத் தென்பாலோங்கும் கிஷ்கிந்தை யென்னும் பட்டினத்துக் கரசனும் வாலியானவன் மோக்ஷாபேக்ஷையால் நித தினமும் நான்கு சமுத்திரத்திலும் ஸ்நானஞ்செய்து விதிப்படி நித்தியகரும முடித்துப் பின் கைலைக்குச்சென்று முந்தி முந்தி நந்திகேசுரனை வந்தித்து அவரனுமதிபெற்றுப் பாாவதிசமேதராய சந்திர சடாதர மூாத்தியைத் தரிசித்து மனவாக்குக் காயங்களினாலே வழிபட்டு அதன் பின்னரோ தன்னகரடைந்து அதிக நீதியுடனும், பிரஜைகளிடத்தில் பிரீதியுடனும் ராச்சிய பரிபாலனஞ் செய்து வருவான். இங்ஙன நிகழுநாளிலே ஒருநாள் தென் சமுத்திரத்திலே ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தன முதலிய நித்திய கருமங்களை முடிக்கையில், திக்குவிஜயஞ் செய்துவரும் ராவணன் வாலியைக் கண்டு அவனருகிற் சென்று பின்புறம் நின்று குறும்புத்தனங்கொண்டு அவனக்குளில் தனது கைகளை விட்டுப் பிடிக்க முயலுகையில், வாலி தன் அக்குளில் விட்ட கையை அப்படியே இடிக்கிக்கொண்டு வாலினாலே இராவணனது உடல் முழுவதும் இறுகச்சுற்றிக்கொண்டு மற்றசமுத்திரங்களிலேயும் நீராடிப்பின் கைலாசகிரியடைந்து நந்திதேவரை வணங்கிநிற்க, அவர் வாலியைநோக்கி ஏ சிவபக்தசிகாமணே! நமது கைலாசபதியானவா திரிபுரசம்ஹாரார்த்தமாக முப்பத்து முக்கோடி தேவாகளோடு மெழுந்தருளி அதிகாபுரிக்குச்சமீபித்த ஆதிபுரத்திற்குச் சென்றிருக்கின்றனா; அந்த க்ஷேத்திரத்தை நினது வாலினாலே கட்டுண்டு விழிக்கும் இராவணனறிவான்; ஆகையால் நீ அங்ஙனஞ்செல்லென்று கூறினர். அதுகேட்ட வாலி இராவணனைநோக்கி அப்பதியெங்குளதென்று வினவ, இராவணன், தேவரீர் தமது வாலால்கட்டியகட்டைச் சிறிதுதளர்ச்சி செய்தாலல்லது காண்பிக்க சக்தியில்லேனென்றான். அப்பொழுது வாலி நீ காண்பியாதவரையில் யான் கட்டைத்தளர்ச்சி செய்யேனென்றுகூற, பிறகு இராவணன் தன்கையால் சுட்டிக்காட்டச்சென்று ஆதிபுரத்தை யடைந்து இராவணனை விட்டுத்தூரத்திப் பின்னர் அங்குள்ள தீர்த்தங்களிலெல்லாம் விதிப்படி ஸ்நான

ஞ்செய்து பிரமா, விட்டுணு முதலிய மற்றைத்தேவர்களோடு மெழுந்தருளியி ருக்கும் சம்ஹாரமூர்த்தியைத் தரிசித்து வணங்கி விடைபெற்றுப் பின்னர் ஆதி புராதீசுரர், பத்மதளாநாயகி, இலக்ஷுமிநாராயண மூர்த்தியென்னு மிவர்களுக்கு நித்திய நைமித்திகங்களெல்லாம் விதிப்படி செய்துவந்தான். இங்ஙனம் நடந்தே றுங்கால் ஆதிபுராதனருக்கு விழாச்செயவேண்டி பங்குனிமீ கிர்த்திகை நக்ஷத் திரத்தன்று விநாயகக்கடவுளைப் பூசித்து அக்கினி காரியமுடித்துத் துவஜாரோ கணமுதலிய கிரியைகளைச்செய்து ஆதிபுராதீசுரருக்கு அன்றுமுதல் வெகுவிநோ த விசித்திராலங்காரங்களுடனும், வாத்திய கோலத்தோடும் தசதினோற்சவங்க ளையும் வெகுசிரத்தையுடன் சிறப்பாக நடத்திவந்து ஈற்றில் ஜலக்கிரீடோற்சவ ம் செய்தற்பொருட்டு, முன்னே விட்டுணுதாம் இலக்குமி சமேதராய் ஜலக்கிரீ டை செய்வான் வேண்டித்தனது சக்கராயுதத்தாற் பிறப்பித்த பிணுகினிநதியிற் கங்கைவந்தருள அருள்தந்தருள வேண்டுமென்று ஆதிபுராதனைப் பிரார்த் திக்க, உடனே ஐயன் சந்திரசடாதர மூர்த்தியாய்த்தோன்றித் தமது ஜடைக் கணமாந்த கங்கையை ஷடி தீர்த்தத்தில்விட்டு வாலியைநோக்கி, ஏ பக்தரத் தினு! இத்தீர்த்தத்தில் கங்கையைக் கலக்குமாறு நீ இச்சித்த வண்ண மெச் சித்தளித்தோம்; நமக்கு ஜலக்கிரீடோற்சவம் செய்வாயாக; அன்றியும் இந்நதி யில் பிரதி பங்குனிமீ பௌர்ணமி திதியிலும் கங்கைவந்து கெடிலநதியிற்கல ந்து சமுத்திரத்தைச் சார்வாள். அப்போது அத்தீர்த்தத்திற் பத்தியாற் படி பவரடையும் பலன் இம்மட்டென்று எத்திறத்தோரு மெடுத்துரைக்க வியைய யா. அன்றியும் அதினின்றும் நின்னுல் பிரிக்கப்பட்ட சிற்றோடையும் அங்ஙண மேயாகும். நீ இத்துணைப்போது பத்தியாற்செய்த பலிக்கிரங்கினோம்; இனி நினக்குப் பதிலாக "சங்குகாணன்" என்னும் ஓர் பூதகணத்தால் பூசையை நட த்தச்செய்வேன்; நீ அதிசீக்கிரமாக நினது கிஷ்கிந்தையை யடைந்து ராச் சிய பரிபாலனம் செய்துவரக் கடவா யென்றருளி மறைந்தார். உடனே வாலி தானெண்ணியவாறே தெப்போற்சவமுதலிய யாவையுமுடித்துத் தரிசித்தோர் அனைவரையும் பரமானந்தப் பதிதர்களாகச்செய்து தானு மனமகிழ்ந்து தன் னுல் ஓர் இலிங்கமும் பிரதிட்டைசெய்து ஈற்றில் தன்னகரடைந்தான். அதன் பிறகு சங்குகர்ணன் சந்ததியாராய சுகாணன், கண்டாகாணன் என்பாரும் பூசித்து வந்தார்கள்.—முற்றும்.

## ஏனுதிநாதநாயனார்சருக்கம்.

சோழமண்டலத்திலே நடுநாட்டிலே மாணிகாத புரமென்னுந் திருமாணிக் குழிக்கணித்தாய் எய்தனூர் என்று வழங்கிவிளங்கும் எயினனூரிலே சான்றோர் குலத் தலைவராய ஏனுதிநாத ரென்பவர் ஒருவரிருந்தார். அவர்தாம் விபூதிதரிப் பதிலும் தரித்த சிவனடியார்மாட்டும் மிகுந்த அன்புடையவராய் அரசர்களுக்கு வாள்வித்தையைக் கற்பித்து அதனுலீட்டும் பொருள்களைச் சிவனடியார்களுக் கீந்து தாமும் புசித்து வாழ்ந்து வந்தார்.

இங்ஙனம் நிகழுநாளிலே ஓர்நாள் இவரது தொழிலுரிமைத் தாயத்தனுன வாள்வீரனொருவன் தனக்கு வருவாய் குறைதலையும், ஏனுதிநாதருக்கு அதி

கரித்தலையுங்கண்டு அதனாற் பொறாமைகொண்டு அவர்பாற் போர்புரிந்து வெற்றிபெறக்கருதி அவரது வீட்டின் றலைக்கடையடைந்து அழைத்தலும், அவர்போர்க்கோலங்கொண்டு எதிர்வர, இருதிறத்தாரும் தத்தம் சிஷியபந்து சேனாவர்க்கங்களும் புடைசூழச்சென்று ஊர்ப்புறமுள்ள ஓர் போர்க்களமடைந்து ஆண்டுவாள் வீரன், இப்போது செய்யப்புகும் யுத்தத்தில் வெற்றிகொண்டார் எவரோ அவரே தொழிலுரிமைக்கு யோக்கியராவார் என்று வாய்ப்பறையறைந்து இருவரும் தங்கள் தங்கள் சேனைகளோடும் நெருங்கி யுத்தஞ்செய்ய வாள்வீரன் தனது சேனைகளுடன் உதையுண்டு ஓடலும், ஏனாதிநாதர் அவ்வீரனை நோக்கி ஓய் வாள்வீரரே ஓடாதீரும் ஓடாதீரும், இங்கேவாரும் வாள்வித்தைக்குரிமையை நீரே பெற்றுப்போம் என்று கூவ, வீரன் ஓடோடியுஞ் சென்று தனது இல்லமடைந்து இளைப்புத்தீர்ந்து தான் யுத்தஞ்செய்த வண்ணமொவ்வொன்றையும் உதையுண்டதையும் நினைவுகூர்ந்து துக்கித்து ஒருவாறு தேர்ந்து, ஆயினும் இனி என்செய்வது; இனி இவனை ஏதும் ஓர் தந்திரயுத்தியாற் செயித்தல் வேண்டுமேயன்றி யுத்தத்தாற் செயிப்போமென்பது சொப்பனப் பொருளாமெனத் துணிந்து உடனே ஓர் தூதுவனை அழைத்து அவன்பால் "நீ ஏனாதிநாதரிடஞ் சென்று நாம் இருவரும் யுத்தஞ்செய்து வெற்றிபெறக்கருதி ஊரவர்களையும் உடன் கொண்டு கொல்லல் அதிபாதகமாமெனக்கூறி அவரைத் தனியே விடியற் காலத்திலே யுத்தகளத்திற்கு வரச்சொல்" என்று கூறியனுப்ப, அங்ஙனே அவன்சென்று கூறலும், வெள்ளைச் சிந்தையராய ஏனாதிநாதர் கள்ளவீரனது கபடச்சிந்தையை யறியாதவராய் மறுநாட் காலையில் தன்னந்தனியே சென்று யுத்தகளத்தில் உலாவி நின்றார். வாளவீரன, ஏனாதிநாதர் நீறணிந்தார்மாட்டு இடையறாத அன்புடையவரென்பதையறிந்து தனது நெற்றிக்கண் திருநீறணிந்து யுத்தகோலங் கொண்டு போர்க்களமடைந்து நீறணி நெற்றியை மறைத்துக்கொண்டு அவரருகிற் செல்லுமளவும் பயந்தவர்போல பையச்சென்று சமீபத்தில் போம்போது அதிவேகமாகச் சென்றான். அப்போது ஏனாதிநாதர் அவனைக் கொல்லவேண்டி மெல்லென அவன்பாற்செல்ல, வாள்வீரன் தனது நீறணிநெற்றியைக் காட்டி நின்றான். அப்போது ஏனாதிநாதர் அவன் நெற்றியிலே திருநீறு பிரகாசித்தலைக்கண்டு ஆ ஆ இதென்ன ஆச்சரியம்! இதற்குமுன் பலகாலும் பாழ் நெற்றியோடுவந்த வீரன் இன்றைக்குத் திருநீறொளி செயவந்தது நமது சிவபெருமானது திவ்யத் திருச்செயலே; இனி இவர் பூண்டவேடம் எங்ஙனமாயினும் நாம் இவரைச் சிவபெருமானது மெய்யடியாராகவே கொள்ளல் முறையாமெனத் தெரிந்து யுத்தஞ்செய்ய மனமில்லாதவராய் தனது கைவாள்முதலிய ஆயுதங்களை விடத்துணிந்து நிர்மலச்சித்தமாய் நிற்குந் தருவாயில், அவ்வழியறியா அதிமூடவீரன் அவரது அநித்தியமாயா தேகத்தைத் தனது வாளினால் வீசவும், பரங்கருணைத் தடங்கடலாகிவிளங்கும் ஆதிபுராதீசுரர் அவருக்கு முன்தோன்றி நித்தியஞான தேகத்தைக் கொடுத்துத் தமது திருவடிநீழலைச் செறிந்திடப்பகர்ந்து மறைந்திடல் புரிந்தார்.—முற்றும்.

# ப்ரம்மசர்மன்சருக்கம்.

பிநாகினி என்னும் பெண்ணை நதிதீரத்திலே பிரௌடதேவராயபுர மென்னும் பட்டினத்திலே சகல வேதார்த்தங்களிலும் வல்லரான "எக்ஞயசர்மா" வென்னும் ஓர் அந்தணசீலரிருந்தார். அவர்செய்த தபோபலங்க ளெல்லாந் திரண்டோர் உருவெடுத்தாற்போல அவருக்கு ப்ரம்மசர்மா வென்னும் புத்திரசிகாமணி யொருவர்பிறந்து, சிற்றியல்விளையாட்டை முற்றுமறந்து, மூன்றாம் பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து, உலக வியாபாரத்தில் நுழைவதைத்துறந்து, கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்து, சிவபூசைசெய்வதிலன்றி வேறொன்றிலும் பயனின்றெனத் தெரிந்து சிவலிங்கப்பெருமானைப் பூசித்து, சிவஞானச் செல்வர்களை நேசித்து, சிவனடியார்களை விசுவாசித்து, மற்றவர்கட்குபதேசித்து வந்தார். இங்ஙனம் நிகழுங்கால் விஷு சங்கராந்தி புண்ணியதினமொன்றிலே பிநாகினிநதியில் ஸ்நானஞ்செய்து நித்தியகிரியை முடித்து சிவலிங்கபூசைசெய்து தோத்திரம் பண்ணுகையில், கண்ணுதற்பிரான் இடபாரூடராய்த்தோன்றி ஏ மெய்யன்பனே! நினக்குவேண்டிய வரமென்னை? என்ன, அந்தணாளர் அடியற்றமரம்போல் நிலத்தில்வீழ்ந்து எழுந்து ஆநந்தக்கண்ணீர் பெருக, அன்பினாலே மனமுருக, ஏ கருணாநிதே! அடியேன் தமது திவ்யதிருப்பாத நீழலில்தங்கி வாழ்தற்கேயன்றி இங்கு வாழ்தற்கெண்ணிலேன் ஆகலின் அதனைத்தந்தருள வேண்டுமென்றுகேட்க, சிவபெருமான் "அங்ஙனமாயின், நாம் அளவுகடந்த நெடுங்காலம் எழுந்தருளியிருக்கும் ஆதிபுரியென்னுந் தலத்திலே நமக்கு வாலியென்னும் ஓர் பக்தன் மகோற்சவம்செய்கின்றான்; அதிலே ஐந்தாவது திருவிழாவன்று நம்மைத்தரிசிப்பாயாக" என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தார். அதுகேட்ட ப்ரம்மசர்மர் அரஹரவென்று மகிழ்ந்து ஆநந்தக்கூத்தாடிச்சென்று ஆதிபுரமடைந்து, ஐந்தாவது திருவிழாவன்று சகலவைபவ கோலங்களுடன் கணேசர், சுப்பிரமணியர், அம்பிகை, சண்டிகேசுரர், ஆதிபுராதீசுரர் இவர்கள் தத்தமக்குரிய வாகனங்களுடனும், மகாசிரேஷ்டமான வாத்தியகோலங்களுடனும் எழுந்தருளி இலக்ஷ்மிநாராயண மூர்த்தி சந்நிதிக்கு நேரே திருவீதியில் வருகையில், தரிசித்து நின்றார். அப்பொழுது ஆதிபுராதீசுரர் பிம்பத்தினின்றும் கோடிசூரியப் பிரகாசம் போன்று தனியே ஓர் ஒளிதோன்றி வெளிவந்தது. அப்போதே ப்ரம்மசர்மாவென்னும் பிராமணோத்தமரும் சோதி வடிவத்தராய் விளங்கி ஸ்தோத்திரம்செய்ய, பின் ஈரொளியும்ஓரொளியாய் ஈசுர பிம்பத்திலேயே மறைந்தது. அந்த ஸ்தோத்திரமே இப்போது வடமொழியில் "துவாதசமஞ்சரி" யென்று வழங்குவது. இவ்வற்புதத்தைக் கண்ணுற்ற யாவரும் அத்தியானந்த மடைந்தார்கள். அப்போது அனைவருங் கேட்க ஆகாயத்திலே "இனி இவ்வுற்சவகோல வைபவத்தைச் செய்பவர்கள், தரிசிப்பவர்கள், இவ்வற்புதத்தைப் பிரசித்தி செய்பவர்கள், மற்றும் இத்தலத்திலே பிறந்திருந் திறந்தார் முதலிய யாவரையும் ஈறில்வானுலகத்தி லேற்றுவோம்" என்னுமோர் அசரீரிவாக்குப் பிறந்தது. அதுகேட்ட யாவரும் அரஹரவென்று துதித்து வாழ்த்தி ஆனந்தப்பரவசர்க ளானார்கள்.—முற்றும்.

## பிரமதேவன் சருக்கம்.

திரிபுர சம்ஹாரகாலத்திலே தேவாம்சமாய திருத்தேரிலே சாரத்தியரா யிருந்த சதுர்முகன், திரிபுராள்மீது சிவபிரான் பாணம் ஏவும் பான்மையைக் கண்டு சற்று சாரத்தியஞ்செய்யத் தடைப்பட, அதனால் இரதம் மார்க்கத்தை விட்டுப் பிறழ்ந்து சிறிதுசாய, அப்போது இலக்ஷ்மிபதியானவர் தாம் இடப மாகிச் சிவபெருமானைத் தாங்கவும் நேர்ந்ததாகலின் மேற்சொல்லிய சிவாபரா தத்தாலேற்ற சாபவிமோசனார்த்தம் கமலாசனன் வைகாசிமாதச் சுக்கிலபக்ஷ பஞ்சமி திதியிலே பினாகினிநதியிற் றோய்ந்து நித்தியகருமமுடித்து ஆதிபுரத் தை யடைந்து *மகன்னியாசவிதிப்படி ஆதிபுராதீசுரருக்கு அபிஷேகநைவே த்திய தூபதீபாராதனைகள் செய்து வர்தித்து அத்வைதாஷ்டக மந்திரதோத் திரஞ்செய்து ஏ தேவதேவா! அடியேன் சாரத்தியஞ் செய்ததில் நேர்ந்த அப ராதத்தைப் பொருத்து சாபத்தை விமோசனஞ் செய்தருளக் கோருகின்றேன். என்று நிலத்தில் வீழ்ந்து நமஸ்கரித்தெழுந்து நிற்கையில் சிவபெருமான் இடபா ரூடரா யெதிரே தோன்றி ஏ வாணிமணாளா! நீ யெய்திய சாபத்தை நிவர்த்தி செய்தோம்; இனி நினதுசத்திய லோகத்திற்கு செல்வாயாக என்றருளி அந் தர்த்தான மாயினார். உடனே பிரமர் ஆதிபுராதீசுரருக்குப் பூர்வதிக்கில் ஓர் இலிங்கந் தீர்த்தமென்னு மிரண்டு மமைத்தருளிச் சத்தியலோகத்தை யடைந்தார். ஷை பிரமதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பிரமலிங்கத்தைத் தரி சிக்கின்றவர்கள் எவ்விததோஷ முடையரேனும் அவைகள் நீங்கி இஷ்டகாமி யார்த்தங்களை யெய்துவார்கள்.—முற்றும்.

## ஆதித்தன் சருக்கம்.

ஆதியிற் காதிபுத்திரரான விசுவாமித்திர ராஜாவானவர் மகாதாமிஷ்ட ராய் நீதிதவறாது தமது ராச்சியத்தைப் பரிபாலித்து வருகையில், ஓர் நாள் வேட்டையாட விருப்புற்றுச் சேனைகளுடன் காட்டையடைந்து புலி, கரடி, சிம்மமுதலான அநேக மிருகங்களைக்கொன்று அதனால் மெத்த இளைப்புற்று வசிட்டராசிரமத்தை யடைந்தார். அப்போது வசிட்டர் விசுவாமித்திர ராஜா வுக்கு மகாபிரீதியுடன் அதிதிபூசை முதலிய உபசாரங்கள் செய்வித்துக் காம தேனுவைக்கொண்டு அவரவர்களுக்கு இசைந்தவண்ணம் அறுசுவைபதார்த்த பக்ஷணாதிகளோடு போசனஞ்செய்விக்க, விசுவாமித்திரர் தனது சேனைகளோ டும் உண்டபின் இவ்வளவு மகா உருசிகரமான ஆகாராதிகளை வசிட்டர் நமக் களித்தது காமதேனுவைக் கொண்டென் றறிந்தவராய் அதனைத் தாம் பெறக் கருதி உடனே வசிட்டரை நோக்கி ஏதபோதனா! யாம் யெம்முராச்சியத்தில் பா தியும் [illegible]ம் பசுக்களையுந் தருகின்றேம்; உம்மிடமுள்ள காமதேனுவை எமக்குத் தந்தருளவேண்டுமென்று அநேகவிதமாய்க் கேட்டும் வசிட்டர் கொடாதொழிந்

* மகன்னியாசம் - ஏகாதசருத்திர வபிஷேகம்.

தார். உடனே அதனுற் கோபங்கொண்டு இருதிறத்தார்களும் அகோரயுத்தஞ் செய்ய, வசிட்டர் விசுவாமித்திரரது பாணங்களையெல்லாந் தமது பிரமதண்டத்தினும் றட்டியெறிந்து ஜெயங்கொண்டார். அப்போது விசுவாமித்திரர் தாம், அபஜெயமடைந்ததைக்கண்டு பிராமணபலமே பலம்; நம்பலம் அம்பலமேயெனத் தெரிந்து அவ்விதபலனைத் தாமடையக்கருதி தென்றிசை யடைந்து பிரமனைநோக்கித் தவம்புரிகையில், அதற்கு இடையூறாக திருச்சங்குமன்னன் அவர்முன்னே சென்று அடியேனுக்குச் சுவர்க்கமீந் தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, அப்படியே அவருக்குச் சுவர்க்கமளித்துப் பின் மேற்றிசையடைந்து தவமிழைத்தார். அப்போது ஆங்கும் மருகனான சுனசசேபன் சென்று தேவரீர் என்னை இரக்ஷித்தருள வேண்டுமென்றுகோர, அப்படியே அவன் பிராணனை யிரக்ஷித்துப் பின் வடதிசையடைந்து தவமிகப்புரிந்தார். ஆண்டும் அரம்பைசென்று நிர்த்தனாதிகளால் விக்கினஞ் செய்ய, அவளைக் கல்லாச்சபித்துப் பின் கீழ்த்திசை யடைந்து அருந்தவம் புரிந்தார். அப்பொழுது பிரமதேவர் பிரசன்னராய் “ஏ மகாரிஷே! நீர் விரும்பியவண்ணம் ப்ரம்மரிஷியாகக் கடவா” யென்று வரமளித்து மறைந்தார். உடனே விசுவாமித்திரர் ப்ரம்மரிஷியாம்சராய்ச்சென்று வசிஷ்டராசிரமத்தை யடைந்து உள்ளே புகும்போது வசிட்டரது தபாக்கினியானது தம்மைச் சூழ்ந்துவருத்த, மீண்டும்வந்து தமது தபோபலத்தினாலே பிரமதேவனை வரவழைத்து அவரைநோக்கித் தேவரீரது திருக்குமாரராகிய வசிட்டருக்கும் அடியேனுக்குமுள்ள உயர்வுதாழ்வுகளை உண்மையில் உரைத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார். அப்பொழுது பிரமர், நீவிர் செப்பிய துண்மையே; ஆயினும், இப்பொழுது எமது புத்திரனுக்கும் உமக்குமுள்ள தாரதம்மியங்களைப்பற்றி பக்ஷபாதமின்றி உண்மையா யுரைக்கினும் நீவிரதனை யுண்மையென் றுன்னாது எண்மையென் றெண்ணுவீர்; ஆதலின் ஈண்டுமத்தியஸ்தராக விருத்தற் பொருட்டு அகத்தியன், ஆதித்தன், ஆதிசேடன் என்னும் இம்மூவரையும் அதிவிரைவி லழைத்துவாருமென்று ஆக்கியாபித்தார். அதுகேட்ட விசுவாமித்திரர் உடனே விடைபெற்றுச் சூரியலோகத்தை யடைந்து சூரியனைக்கண்டு நடந்த வண்ணம் நவின்று வந்தருளவேண்டுமென்று பிராத்திக்க, சூரியன் “யானிங்கிலாது அங்குவரின் எங்கும் இருள்மூடிமங்குமாதலால் வருதற் கிசையே” னென்றுகூற, முனிவர் பின் அவ்விடம்விட்டகன்று அகத்திய ராசிரமத்தையடைந்து அவரைக் கண்டுவணங்கி வந்தருளவேண்டுமென்று பிராத்தித்தார். அகஸ்தியர், நாம்வரின் பூமிசாய்ந்து மேடுபள்ளமாகும் ஆதலால் வரோமென்றார். அதன்பின் பாதாளலோகத்திற்குச் சென்று ஆதிசேடனைக்கண்டு வணங்கி வந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, அவரும் நான்வரின் பூமி ஆழ்ந்து தண்ணீரால் மூழ்ண்டுபோம்; ஆகையால் வருதற்கிசையே னென்றார். உடனே பிரமதேவனிடம்வந்து ஒவ்வொருவரும் செப்பியவண்ணம் கூறுவாராயினர். அப்போது பிரமர் வசிட்டரையழைத்து மேற்கண்ட மூவரையும் அழைத்துவர ஆக்கியாபித்தார். உடனே வசிட்டர் சூரியலோகஞ் சென்று சூரியனை அழைக்க, அவன்முன் விசுவாமித்திரருக்குரைத்த வண்ணமே இவர்பாலுங்கூறினன். அங்ஙனமாயின் இவ்வஸ்திரத்தை

உமது தேரில் வைப்பீராகில் உமதுபிரகாசத்தைக் கொடுக்குமென்று தன்வஸ்திரத்தி லொன்றைக் கொடுத்தார். அங்ஙனமே அதையேற்றுத் தேரிலிட, தன்னிலும் பிரகாசித்தலைக்கண்ட சூரியபகவான் அத்தியானந்தங் கொண்டவராய் வசிட்டருடன் வந்தார். வசிட்டர் அவனை உடன்கொண்டுபின் அகத்தியராசிரமத்தையடைந்து வரும்படிகோர, அவர்முன்னே விசுவாமித்திரருக் குரைத்த வண்ணமே இவரிடமுங் கூறினார். அங்ஙனமாயின் இக்கமண்டலத்தை அவ்விடத்தில் வையுமென்று கொடுக்க, அகஸ்தியர் அதையேற்றுவைத்தலும் தாமிருந்தா லெப்படியோ அப்படியே பூமிசமமாயிருத்தலைக் கண்டு வசிட்டருடன் வந்தார். அவர்களை யழைத்துக்கொண்டு வசிட்டர் பாதாள லோகத்திற்குச்சென்று ஆதிசேடனைக்கண்டு வரும்படியழைக்க, முன்னே விசுவாமித்திரருக்குரைத்த வண்ணமே இவர்பாலுங் கூறினான். அப்பொழுது வசிட்டர் தமது யோகதண்டத்தைக் கொடுத்து உமக்குப் பதிலாகப் பூமியைத் தாங்கும்படி இதை நாட்டுமென்றார். ஆதிசேடன் அங்ஙனமேநாட்டலும், சுமந்து நிற்றலைக் கண்டு அதியாச்சரிய ஆனந்தத்துடன் வசிட்டரைப் பின்பற்ற, இம்மூவரையும் அழைத்துக்கொண்டு விசுவாமித்திரருடன் விளங்கும் பிரமதேவன் திருமுன்றிலை யடைந்துவணங்கி நிற்கையில், விசுவாமித்திரர் அம் மூவரையும் நோக்கி வசிட்டருக்கும் எமக்குமுள்ள தாரதம்மியங்களைச் சொல்லியருளவேண்டுமென்று பிரார்த்திக்க, அம்மூவரும் ஒருமனதாய் விசுவாமித்திரரை நோக்கி ஏ தபோதனா! நும்பாற்கோப மதிகமாயும் வசிட்டர்பாற் சாந்த மதிகமாயும் உள்ள தாரதம்மியத்தைத் தவிர்த்து வேறொன்றையும் விசேடமாகக் கண்டிலேம். ஆயினும், கோபத்தினாலே தவங்குன்றும், சாந்தத்தினாலே தவம் விர்த்தியாகும் என்றார்கள். அதைக்கேட்ட விசுவாமித்திரர் கோபத்தை அடியோடே விட்டொழித்துத் தபசுசெய்யவேண்டி வடதிசைக்குச் சென்றனர். பின்புஆதிசேடன் பரமசிவனது ஆணையின்றிச் சென்றதாலுண்டாய தோஷநிவாரணார்த்தம் ஸ்ரீகாளஹஸ்த்தீசுரரைப் பூசித்துத் தோஷநீங்கித் தன்னிடஞ் சென்றான். அகஸ்தியரும் அப்படியே தோஷமெய்தி மதுராபுரிச் சுந்தரேசுரரைத் தரிசித்துத் தோடநீங்கித் தம்பதியடைந்தார். சூரியனும் அப்படியே தோடமெய்தி ஆதிபுரத்தை யடைந்து தனது கிரணப்பிரகாசத்தினாலே விதிப்படி பூசித்து ஸ்தோத்திரஞ் செய்து தோடம்நீங்கி ஆதிபுரீச ரனுக்கிரகம் பெற்றுத் தன்பெயரால் ஓர் தீர்த்தமு மமைத்துப் பின் தன்னுலகடைந்தான். வசிட்டரும் பின்பு தனதுவஸ்திரம், கமண்டலம், யோகதண்டம் என்னும் இவைகளை மீண்டும் வரவழைத்துக்கொண்டு தமது ஆசிரமத்தை யடைந்தார். முற்றும்.

---

## சரஸ்வதியார் சிவபூசாசருக்கம்.

---

பண்டைக்காலத்திலே ஆதிபுரத்திலே சுசீலன் என்னுமோர் பிராமணனுக்கு, அழகிலும் சம்பத்திலும் சிறந்த ரூபாவதி என்னும் ஓர் புத்திரியிருந்தாள். அன்றியும் அவ்வூரிலேயே வித்தையிற் சிறந்து செல்வத்திற் குறைந்தவனாய்

வித்தியாவதி யென்னும் வேறொரு பெண்மணி யிருந்தாள். இவ்விருவர்க ளும் ஒவ்வொருவருந் தாம் தாமே மேலென்று வாதமிட்டுக்கொண்டு சிறந்த மத்தியஸ்தர்கள் வாயிலாக மேன்மையினர் இன்னர் என்பதை நிலைநிறுத்திக் கொள்ளவேண்டிக் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த பலருடன் ஸ்ரீபத்மதள நாயகியார் சந்நிதிமருவி யங்குள்ள ஞானமண்டபத்திலமர்ந்து மேற்கூறிய இரு வருள்ளும் ரூபாவதி கல்விமான்களைநோக்கிச் சொல்வதாவது:—ஐயா, உலகத் திலே தனமுடையோர் உயர்ந்தவர்களும், அஃதில்லார் தாழ்ந்தவர்களு மாகிறார் கள். எங்ஙனமெனில், தனமின்றேல் தரித்திரம்விருத்தியாகி அதனால் துக்கம், கஷ்டம், ஆபத்து, பயமுதலியவைகளை யடையவும், அடையவே அதனாற் புத்தி கெடவும், அதுகெடவே தாமமில்லாமலும், அது இல்லையாகவே அதாமத்துக்கள வில்லாமலும், அளவில்லாமற்போகவே ஸ்திரீகள்கெடவும், அவர்கள் கெடவே உயர்வு தாழ்வின்றி சாவமும் சங்கரமாகியும், அங்ஙனஞ் சங்கரமாகவே பிண் டோதகக் கிரியைகள்செய்யப் புத்திரரின்றித் நடைப்பட்டு வம்சத்தோடே நரகி ற்கிடந்து தவிக்கின்றார்கள்; ஆதல் பற்றியும், தானஞ்செய்தலினாலே நான்கு புரு ஷார்த்தங்களையு மடையலாமென்று வேதாகம சாஸ்திரங்கள் விளம்புகின்றன. ஒருவன் வித்தியா வந்தனுயிருந்தும் ஓர் தனிகனைச் சார்ந்திராவிடில் மணமில் லாத மலரைப்போன்று வித்தையாற் பயனில்லையே! பூர்வத்தில் ஸ்ரீராமருக்கு வசிட்டருபதேசிக்கையில் "புருஷார்த்தம் நான்கனுள் பொருளே விசேடித்த தென்றும், ஆதலால் அதையே சம்பாதிக்கவேண்டும்" என்றும் சொல்லியிரு க்கின்றார்; ஆதல் கொண்டும், தனவந்தியாகிய யானே சிலாக்கிய பாக்கிய வெகு முக்கியப் பிரக்கியாதிவதியென்று சொல்லி முடித்தாள். அதன்பின் வித்தி யாவதி சொல்வதாவது:—

வித்தையே மகாமேன்மைபெற்றது. எங்ஙனமெனில், அதனால் மனசுக்கு ஆனந்தமும் இம்மையிற் கீர்த்தியும், நன்மை தீமைகளையறிந்தொழுக விவேகவி ளக்கமும், அவ்விளக்கத்தாற் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் இந் நான்கினையும் அனுஷ்டித்து, அதனாற் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய மென் னுஞ் சதுர்வித பதவிகளையும் பெற்று அளவிடப்படாத ஆனந்த வசத்தர்களாகி ன்றார்கள். அவ்வித வித்தையின்றேல் திடப்புத்தியின்று, புத்தியின்றேல் சிவ பத்தியின்று, பத்தியின்றேல் அருட்சித்தியின்று, சித்தியின்றேல் பெறுமுத்தி யின்று; அன்றியும், கல்விச்செல்வத்தைப் பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க வளர்ந்துகொண்டேவரும்; பொருட்செல்வமோ அங்ஙனமில்லாது கொடுக்குந் தோறுங் குறைந்துகொண்டேவரும்; அன்றியும், செல்வத்தினாற் செருக்கும், அச்செருக்கால் நல்லோர்பால் முறுக்கும், அம்முறுக்கால் எல்லாம் நசித்து ஆணவமாயாதேகம் பருக்கும்; அன்றியும், வித்தையில்லான் கண்ணிருந்துங் குருடனே! காதிருந்துஞ் செவிடனே! வாயிருந்தும் ஊமையே! வித்தை கற் றோன் எங்குறினும் என்னுடையினும் ஆங்காங்கே யெல்லாராலும் அன்பு செய்யப்பெறுவான். செல்வமுள்ள மன்னனேனும் தன்னுடன்றிப் பிறவிடங் களிற் பெருமைப்படான். அவ்விதசெல்வத்தை யீட்டற்குங்கல்வியே முதற்

காரணமாம். ஒருவன் திரளான செல்வத்தை யுடையவனாயிருந்துங் கல்வியென்பது சிறிதுமில்லையாயின், அவன் அப்பொருளைக்கொண்டு நல்லறம்புரிய வகைதெரியாது குளிக்கப்போய்ச் சேறுபூசிக் கொள்வார்போல புண்ணியஞ் செய்வான்போன்று பாவத்தையே தேடிக்கொள்ளுகிறான். ஆகையால் வித்தையே மகாமேன்மையுடைத்தென்று யாவராலும் புகழத்தக்கதாகும்; இதுவிஷயமாக மத்தியஸ்தாகளாக விருக்குமகாஜனங்கள் பக்ஷபாதமின்றி நியாயவாயிலாக விசேடித்ததின்னதென்று விளம்பல்வேண்டுமென்று பிரார்த்தித்து நின்றாள். அப்பொழுது அங்குள்ள கல்விமான்களிற்சிலர் தனத்தைவிசேடித்தும் பலர் வித்தையை விசேடித்தும் ஓர் முடிபுமின்றி ஈற்றில் எல்லோரும்பத்மதள நாயகியைத்தோத்தரித்தார்கள். உடனே அம்பிகை இவர்கள்துதிக்கிரங்கிக் குபேரனைவரவழைத்து இருதிறத்தாரது கொள்கையுங்கூறி இதற்கு நீ மத்தியஸ்தஞ் செய்யக் கடவாயென்று கட்டளையிட்டுமறைந்தாள். உடனே சம்பத்திலும் ஞானத்திலுஞ் சிறந்தகுபேரன் இருவரையும்நோக்கித் தனத்தைக்காட்டிலும் வித்தையேமெத்த விசேடித்ததெனக் கூறிச் சமாதானஞ்செய்து ஆதிபுராதீசுரனைத்தரிசித்துவணங்கிச் சோமதீர்த்தமென்னும் ஓர்தீர்த்தங் கற்பித்துத் தம்பதியடைந்தான். பிறகு ரூபாவதி பொறாமைகொண்டவளாய், வித்தியாவதியை பிசாசமாகக் கடவாயென்று சாபமிட, வித்தியாவதி அவளைநோக்கி அடிமூடே! உனக்குக் கொஞ்சமும் ஞானமில்லையே! ஸ்ரீபத்மதளநாயகியார் உத்திரவால் குபேரன் உண்மையை யுரைத்தமைபற்றி நீ எனக்குச்சாபமிடுவது எம்மதிகொண்டோ! ஆதலால் நீ அதிமூடியாயும், மதாந்தகாரம் பிடித்தவளாயும், அனாசாரியாயும் ஆகக்கடவாயென்று பிரதிசாபங்கொடுத்தாள். உடனேசபைகலைந்தது. பிசாசத்துவமடைந்த வித்தியாவதி அவ்வாதிபுராதீசராலயத்திலுள்ள தக்ஷிணாமூர்த்தி சந்நிதிக்குக்கீழ்பால் அந்தர்முகமாகத் தியானசித்தியாயமர்ந்து நிற்கையில், வாணி தன்பக்தையான வித்தியாவதியடைந்த சாபத்தையறிந்து மனம்பொறாது ஆதிபுரத்தையடைந்து தன்பெயரால் ஓர் தீர்த்தங்கற்பித்து அத்தீர்த்தங்கொண்டு ஆதிபுராதீசுரருக்கும் பத்மதள நாயகியார்க்கு மபிடேகித்துப் பூசைநிவேதனாதிகள்செய்து ஸ்தோத்திரஞ்செய்து, வித்தியாவதியெய்திய பிசாசாம்சத்தை விலக்கியருளவேண்டுமென்று பிரார்த்திக்க, ஆதிபுராதீசுரர் அவள்கோருதலுக் கிசைந்து பிரசன்னராய் "ஏ ஞானமூர்த்தே! நினது நாமபூர்வமாயியற்றியுள்ள தீர்த்தத்தில் வித்தையைப் பத்தியாற்படிவிப்பாய்." என்று அனுக்கிரகித்துமறைந்தார். உடனே வாணிதன்னாலாக்கப்பட்ட தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்வித்துப் பிசாசத்துவத்தை நீக்கியருளித் தனது சத்தியலோகமடைந்தாள். பின்சுத்ததேகியாகிய வித்தியாவதி ஆதிபுராதீசுரருக்கு அடிமைபூண்டொழுகி ஈற்றில் அவரடிநிழலமர்ந்தாள். நிற்க; அவ்வாணிதீர்த்தத்தில், பிசாசால்பீடிக்கப்படுவோர் ஸ்நானஞ்செய்யின் அதுநீங்கிசுகமுறுவர்கள். இதுநிற்க; மதுரைச்சுந்தரேசுரரது ஆஞ்ஞையால் ராஜசேகரபாண்டியன் என்னுமோர்அரசன் மேருபர்வதத்தையடைந்து திரளானபொன்னினிதிகளைப்பெற்றுத், திரும்புங்கால் ஆதிபுரியடைந்து ஆதிபுராதீசரடிபணிந்து வணங்கி

தரிசித்து அவரானுக்கிரகத்தால் வினாவில் மதுரையையடைந்து சொக்கலிங்கப்பெருமானைத்தரிசித்து அபிஷேகமுதலியன செய்துவணங்கிப்பின் அப்பதியில் வசிக்கும் அந்தணர்கள்விரும்பியவண்ணம் அத்தனத்தால்திருட்டி செய்வித் திருந்தான். திருஞானசம்மந்தமூர்த்திசுவாமிகளும் இவ்வாதிபுரீசராலயத்தில் ஓர் ஞானமண்டபமியற்றிச் சிலகாலம் அதிலெழுந்தருளியிருந்து சமணர்களைக் கண்டித்து ஞானதீர்த்தமென்னும் ஓர் தீர்த்தமுங்கற்பித்தருளினார். இதற்கு அறிகுறியாக அவ்வவ் வடையாளங்களோடு தீர்த்தங்கள் விளங்குதலுமன்றி தக்ஷிணமூர்த்திக்குக் கீழ்பால் வித்தியாவதி, இராஜசேகரபாண்டியன் என்னுமிருவர்களும் இன்றும் விக்கிரகசொரூபராய் விளங்குகின்றார்கள்.

## ஸ்ரீ பத்மதளநாயகித் திருநாமச்சருக்கம்.

வசந்தமாருத காலத்திலே ஓர் நாள் ஆதிபுராதீசுரர் பரிமளமிகுந்த நறுமலர் மாலைகளணிந்த சண்டத்தரா யெழுந்தருளிச் சூரிய தீர்த்தத்தை நோக்கியும், சூதமுதலான சகலவிருக்ஷங்கள், மல்லிகை, முல்லை, ஜாதி, சண்பக முதலான புஷ்பச்செடிகளும், சக்கரவாகம், கோகிலம், மயில்முதலிய பக்ஷிசாதிகளும் நிறைந்து சிறந்து விளங்கும் சோலைகளினது சிறப்பைக் கண்டும், தற்சூழ்ந்த தீர்த்தங்களில் செந்தாமரை, வெண்டாமரை, செங்கழுநீர், குமுதம் முதலியபுஷ்பங்கள் புஷ்பித்து அதிலுள்ளதேனைப்பருகும் வண்டுகள் செய்யும் ரீங்காரசப்தங்களைக்கேட்டும், பலவிதமான நறுமணங்கலந்த வசந்த காற்றுகளால் சுகித்து உமையவளோடு ஜலக்கிரீடைசெய்ய ஆரம்பித்தார். அப்பொழுது அம்பிகை செந்தாமரை மலரின்சிறப்பைக்கண்டு அம்மலரால் ஆதிபுராதீசுரரை அருச்சிக்க எண்ணங் கொண்டு மானதபூசையால் சிறிது தாழ்ந்திருக்க, ஆதிபுராதீசுரர் அம்பிகையினது அகத்தெண்ணமறிந்தவராய் "ஏ பத்மதளநாயகி! ஜலக்கிரீடைக்கு வருவாய்" என்றழைத்து அம்பிகையுடன்ஜலக்கிரீடைசெய்தார். அன்றுமுதல் உமையவளுக்குப் பத்மதளநாயகி யென்னுந் திருநாமம் வழங்கலாயிற்று. நிற்க, அச்சமயத்திலே ஆதிபுரா தீசுரரைத்தரிசிக்க விருப்பங்கொண்டு தாருகாவனத்தினின்றும் வந்த சப்தரிஷிகளும் ஈசுரர் ஜலக்கிரீடையிலிருப்பதை யறிந்தவர்களாய், அஃது முடிந்தபிறகே தரிசித்தல் முறையாமெனத்தெரிந்து ஆங்கே சிறிதுபோது வசித்துத் தங்கள் பெயரால் ஓர் தீர்த்தங்கற்பித்து, ஈசுரர் கிரீடைமுடிந்து எழுந்தருளிவந்து தமதிடமமர்ந்தபின் அத்தீர்த்தங்கொண் டபிஷேகித்துப் பத்திர புஷ்பங்களால் அருச்சித்து அருட்பிரசாதம் பெற்றுத் தத்தம்பதி படைந்தார்கள். இதற்கறிகுறியாக ஆலயவிமானத்தில் சப்தரிஷிகளும் ஒருங்கே காணப்படுகிறார்கள். ஆதலின், இத்தகையமேன்மை பொருந்திய தலத்தில் வசிக்கும் சத்பாத்திரர்களுக்குப் பூதானஞ்செய்தோர் இகத்தில்போக போக்கியங்களையும் பரத்தில் மோக்ஷத்தையும் அடைவார்கள். கோதானஞ் செய்தோர் இருபத்தொரு தலைமுறையுடனும் சுவர்க்கமடைவார்கள். இன்னும்

புத்தகம், வஸ்திரம், பூணூல், பீதாம்பர முதலியன தானஞ்செய்தோர் ஜன்மங்கள் தோறும் ரோகங்கள் அடையப்பெறார். ஆலயத்தில் உருத்திரபாராயணஞ் செய்துகொண்டு, ௧௦ - பிரதக்ஷிணஞ்செய்து ஆதிபுராதீசுரரை அன்புடன் தரிசித்தோர், தேவலோகத்திலே தேவர்களாய் வாழ்வார்கள்.

## வலம்வருச்சருக்கம்.

ஸ்ரீ சிவபெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் எல்லாத்தலங்களிலும் முப்போதுந் தரிசித்தல் இயல்பாயினும், ஆதிபுரத்திலெழுந்தருளி யிருக்கும் ஆதிபுராதீசுரரைப் பிரதோடகாலத்தில் தரிசித்தல் மகாவிசேடமாம். ஆகலின், அப்போது சந்தியாவந்தனாதி கிரியை முடித்து விபூதி உருத்திராக்ஷ மணிந்து ஆலயத்துட்சென்று நந்திகேசுரரைத் தரிசித்து அவரனுக்கிரகத்தால் முதலில் விநாயகரையும், அதன்பின் முருகக்கடவுளையுந் தரிசித்துப் பின்னர் ஸ்ரீ சிவலிங்கப்பெருமானையும் தக்ஷிணாமூர்த்தியையுந் தரிசித்துத் தோத்திரஞ்செய்து வணங்கியும், இரண்டாமுறைவலம் வரும்போது பரமமாதாவாகிய பத்மதளநாயகியைத் தரிசித்துத் தோத்திரஞ்செய்து வணங்கியும், மூன்றாமுறை வலம்வரும்போது சங்குசக்கரதாரியா யெழுந்தருளி பக்தர்களுக்குப் போகமோக்ஷங்களைத் தந்தருளும் ஸ்ரீ இலக்ஷ்மிநாராயண மூர்த்தியை வணங்கிப் பின்னும் சிவபெருமானைத் தரிசித்தும், இங்ஙனம் ஏழுமுறை வலம்வந்து தக்ஷிணாமூர்த்தி சந்நிதியை யடைந்து ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரத்தை நூறுருச்செபித்து அதன்பின் சண்டேசுரர் சந்நிதியடைந்து தரிசித்து சிவதரிசனபலனைத் தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்து வணங்கிக்கொண்டு பின்புமகாபலிமுதலான சிவாக்கியாம்பால தேவர்களை சிவசந்நிதியிலேயே அனுப்பிவிட்டு அதன்பின்பே வீட்டிற்குச் செல்லல் வேண்டும். இங்ஙனமுறையே வலம்வந்து தரிசனஞ்செய்தோ ரடையும்பலன் அம்மட்டிம்மட்டென்று ஆதிசேடனாலும் அளவிடலரிதாகும்.

இத்தலபுராணத்தில் ஏதும் ஓர் அத்தியாயத்தையேனும் அன்போடு கற்பவர்களும், கற்பவர்பாற் கேட்பவர்களும் விசேடஞானிகளாய் வாழ்வார்கள். வியாதியாளர் ஓதின் அதுநீங்கி சுகமுறுவர்கள். மற்றும் இதனைவாசிப்போரனைவரும் அவரவர்கள் விரும்பியவண்ணம் இஷ்டகாமியார்த்தங்களை யெய்தி வாழ்வார்கள். இப்புராணத்தை யன்புடன்கேட்ட சனகாதிமகரிஷிகள் அத்தியானந்தமடைந்து ஆதிபுராதீசுரனைத் தியானித்து ஸ்தோத்திரஞ்செய்து வைசுவதேவமுதலான சதிகிரியைகள் நடத்திப் பின் அவரவ ராச்சிரமமடைந்து வாழ்ந்தனர்கள்.

ஆதிபுரமான்மியச்சருக்கம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஆதிபுரஸ்தலபுராணம்.

## பாயிரம்.

### வரசித்திவிநாயகர் துதி.

கலிவிருத்தம்.

சீர்கெழுகோ டொன்று செவியிரண்டு நற்
பேர்பெறு மும்மதம் பேசுநாலு வாய்ச்
சேர்பெறு மைங்கரத் தாறு சென்னிகொள்
ஏர்வர சித்தியே ரம்பை யேத்துவாம்.

### ஆதிபுரீசர் துதி.

எண்சீரடி யாசிரிய விருத்தம்.

எங்குநிறை பூரணமா யெல்லாந் தானா யெவ்வுயிரு மீன்றுமி ரு கொங்கை தாழா, நங்கைவளர் கின்றவொரு கூறு நீறு நவின றியு மதியுமணி முடி * மொழுப்புந், துங்கமழு மான்பிடிக்குங் கரமு மென்பாந் தொடையலிரு தோளிலைய முக்கண் ணோடு, தங் குமுகத் தெழுமறையா கமங்கள் போற்றுஞ் சந்தான புரிச்சிவன் றூ டலைமேற் கொள்வாம்.

### பத்மதளநாயகியார் துதி.

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

எவ்வுயிர்க்குந் தாயாகி யெந்தை யாகி யிறையாகிப் பரையா கி யெல்லாமாகிக், † கவ்வையிலாச் சத்திகட்குங் கரியு மாகிக் கார ணகா ரியங்கடந்த பொருளுமாகிச், செவ்வைநலந் தருபரத்தின் கூறுமாகிச் சிவமாகிச் சிலையாகித் தெளிவுமாகி, யிவ்வுலகு முத லெவைக்கு மூல மான பத்மதள நாயகிதா ளிதையஞ்சேர்ப்பாம்.

---

* மொழுப்பு - தொகுதிப்பெயர்.

† கவ்வை - பழிமொழி.

## தக்ஷிணாமூர்த்தி துதி.

கலிவிருத்தம்.

கல்லா லின்புடை கருத்து நான்மறை
யல்லா தாகமப் போதவ ரும்பொருள்
எல்லாம் வல்லவ ரீரு பேர்க்குமோர்
சொல்லாற் சொன்னவன் றாளைத்துதி செய்வாம்.

## நிருத்தகணபதி துதி.

கலிவிருத்தம்.

திருவி னாளைப் பிரிவிலனுந் தொழு
முருவினானை வழுத்த வெழுத்துச் சொற்
பொருளின் யாப் பலங்கார மளித்திடுங்
கருணை நிர்த்தக் கணபதி யேத்துவாம்.

## முருகக்கடவுள் துதி.

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

சிறைகொளா தரியயன்மா றேவ ரெல்லாந் திகழ்தர மாமயி
லேறி வேற்கையேந்தி, நிறைகொண்மா திருவர்புயத் தோங்கக்
கண்க ளீராறு மோராறு முகமுங்கொண்டே, மறைநான்கு மாற
ங்க ஞாய மோடு மன்னுபுரா ணம்மிருதி யாகமத்தின், றுறையாய்
ந்த பண்டிதர்க்கும் புலவ னென்னுஞ் சோதிபுரிக் குகன்மலர்த்தா
டொழுதல்செய்வாம்.

## நாமகள் துதி.

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

எழுத்தசைச்சீர் தளையடியாந் தொடையா மென்னு மியன்ம
லர்க ளாறெடுத்துத் தூக்கிற்சேர்த்து, வழுத்தம்மைப் பாவினானூர்
தொடுத்து நான்கும் வாய்ந்தவுடன் பொருட்சுவைத்தேன் மனமு
ங்கூட்டித், தழுத்துறைத்தக் கவிமாலை யினுந் தொடுத்துச் சந்தா
ன புரித்தலைவன் றாளிற்சாற்றப், பழுத்தமனத் தவர்துதிக்கும்
வாணி பாதம் பரவினனென் பாலருளும் பலிக்கத்தானே.

## ஸ்ரீநந்திதேவர் துதி.

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

குணக்குன்றே யருட்கடலே குருவே யென்னக் குலவுசன
காதியர்க்குங் குறைகடீர்த்துப், [illegible] யாகவவி கொண்ட
மாயோன் பிரமைசெலச் சில[illegible]யாகிக், கணக்கில

தாம்வரமருளிக் கயிலை மேவிக் காவலோடு வேத்திரமுங் கையிற் றாங்கி, வணக்கமுறுஞ் சுரர்முனிவர்க் கிணக்கஞ் சொல்லி வாழு நந்தி பரனிருதாள் வணக்கஞ்செய்வாம்.

### சத்தமுனிவர்கள் துதி.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

வழுவில்மறை யாகமந்தேர் தெளிவினுறு மன்யோக சித்தி மா ஞானந்தன்னைத், தழுவிவள ரகத்தியராங் கிரசய்ய நற்கௌத மக்கசிபர் மார்க்கண்டேயர், பழுதிலாப் புலத்தியரேர் வசிட்ட ரோடும் பக்குவரா மிவரெழுவர் பாதம்போற்றிப், பொழிதலெனச் சந்தான புரிச்சீரோதப் புன்மைகெடப் புண்ணியமும் பொருந்தினேனே.

### ஆளுடையபிள்ளையார் துதி.

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

தெருளோங்கும் கௌணியர்க்கோர் மணியாத்தோன்றிச் சிவஞானப் பாலருந்திக் *கிட்டிச் †சின்னப், பொருளோங்கச் சிவிகைமுனந் தலையைப்போக்கிப் பொற்கிழிவாங் கிச்சுரநோய் விடமு நீக்கி, மருளோங்குந் திணைமாற்றிக் கதவடைத்து மாண்பனையு மென்பையும் பெண்ணுருவ மாக்கி, யருளோங்கு மணமதனில் வீடெல்கு மாளுடையப் பிள்ளையின்று ளகத்திற் கொள்வாம்.

### ஆளுடையவரசின் துதி.

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

வளம்பெருகத் திலதவதி யோடா மூரின் வந்துபிறந் ததிகை மனூற் சூலைநீங்கிக், களம்பெருகு மமணர்செயுங் கொடுமை நான் கிற் கன்மிதந்துச் சூலவிடைக் குறிதோட்கொண்டு, முளமுருகி நல்லூரி னடியைச்சூடி யொண்காசு பெற்றுவிடந் தீர்த்துண்ணே க்கித், துளங்குமூவா ரத்திலிங்கத் தடைந்த வப்பன் றுணைமலர்த் தாள் மனமிருத்தித் துயர்கடப்பாம்.

### ஆளுடையநம்பியார் துதி.

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

மருவளருந் திருநாவ லூரிற்சைவ மரபுதித்தா வணங்காட்ட மணந் தவிழ்ந்துத், திருவாரா ரூர்ப்பரவைக் காகப் பொன்னைத் திருக்குளத்திற் செங்கல்லி னளித்துநெற்கொண், டொருவளஞ்

---

* கிட்டி - கைத்தாளம். † சின்னம் - தாரை, எக்காளமுதலிய சின்னங்களாம்

சேர் சங்கிலியாற் கண்போய் பெற்றுந் தூதுளனுல் முதலைவாய்ப் பிள்ளைதந்தும், கருவடையாக் * கிள்ளை † யும்ப லோடுமேறிக் கயி லையமர் கொங்கனம்பிக் கழல்துதிப்பாம்.

## ஆளுடையவடிகளார் துதி.

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

சகம்பரவும் வாதவூர் தன்னிற்றேன்றிச் சகலகலா நிதியாகித் தமிழ்நா டற்குச், சுகந்தருமா மாத்தியராய்த் துரகப் பொன்னுற் றெழும்புமடித் தழும்பும்வரச் சுஞ்ஞானத்தால், மகந்தருமா மறை பாவுஞ் சைவ மோங்க மன்னூமை நீக்கிமன்றுண் மதியைவைத் தே, யகமுருகித் தொழுதழுது கோவைபாவை யரனெழுத வடை ந்தவன்ப ரடிகள்போற்றி.

## தண்டியடிகளோ டறுபத்துமூன்று சந்தானக்குரவர்கள் துதி.

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

உண்மையறி வாசார மொழுக்கங்கல்வி யோகமன்பு பத்தி வை ராகஞானங், தண்மையுறு நீறுகண்டி யைங்தெழுத்துங் தாங் கியுளைத் திருந்தருள்சேர் தகைய ராகி, யொண்மையுறு மறுபத்து மூவர்தாளு மொருதண்டித் தாளுமென்ற னுச்சி மேற்கொண், டண்மைபெறச் சந்தானக் குரவர்சீரு மனுதினமும் வழுத்தவக முருகிற்றன்றே.

## வாழ்த்து.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

துலங்குகவேதவேள்விதூமமழைபொழிந்துவான
மிலங்குகமண்ணோரெவ்லாமிறைவன்செங்கோற்கீழ்வாழ்க
நலங்கிளர்மணியுநீறுஞானவைங்தெழுத்துநாடிப்
புலங்கொளுமாதிசைவர்பூசையும்பொலிகமாதோ.

## புராண வரலாறு.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

வேதமோடாகமங்கள்விளங்குபுழுதநூலாகு
மேதமில்வழிநூல்தானுமிருதிகள்புராணமாகுஞ்
சாதகக்கற்பஞ்சிட்சையங்கமுஞ்சார்புநூலாம்
போதகநூற்கண்மூன்றும்புராணமேபுகலுங்கொண்டே.

---

* கிள்ளை - குதிரை. † உம்பல் - வெள்ளையானை.

நக்கன்பாற்றெளிந்தநந்திநாயகன்சனற்குமார
மிக்கவன்புடையோற்கோதவியாசன்கேட்டச்சூதற்கு
*மொக்கமாப்புராணமூவாறுரைத்தனன்சைவம்பத்தி 17
னிக்கதைபிரமாண்டத்திற்சேத்திரத்தறுபத்தெட்டே.

பிரமாண்டவுத்தரஞ்சேர்சேத்திரமகிமைதன்னிற்
புரமாண்டவர்சொலத்தியாயமோராறுபத்தெட்டின்
உரைமாண்டவர்சந்தானபுரிக்கதைநவமுஞ்சொல்லக் 18
கரைமாண்டவுவகைவெள்ளங்கமைகடற்கலந்ததன்றே.

அத்தியாயவகை.

புகல்சிவதலத்திற்றீர்த்தமூர்த்தியாமத்தியாயத்
திகல்சிவபூசைபங்கந்திரிபுராள்பெற்றதோடு
†வகிர்திருவாலிபூசைமலரவன்கதிரோன்வாணி
பகர்சிவபூசைபத்மிநாமந்தக்கணமொன்பானே.

அவையடக்கம்.

வழூவிலாரணந்தேர்சைவவளந்தருமரிபுரத்தின்
மழூவலத்தேந்திபாதமலர்நறவருந்துங்காதை
யுழூவையாம்புலவர்முன்பாய் ‡ மண்டலியுரைக்கலுற்றேன்
பழூதுளதேனுமன்னம்போற்கொளற்பான்மையாமால்.

பெருந்திறல் § வரிமுன்வென்றிப்பேசுபு ¶ கூலந்தன்போற்
பருந்தின்முன் ‖ புலிங்கமோங்கிப்பரத்தல்போலின்னூற்காதை
இருந்தியபுலவர்முன்னஞ்செப்பினனினம்போலுன்னுக்
$ கரும்பிளைப் + பிக ∴ வரிட்டங்காக்கல்போற்கொள்வரன்றே.

வேறு.

முன்மொழி மறைக ளாகம மணக்கும் வாயினு லடிமுத லெ டுத்துத், தென்மொழி முறைகள் பாடுவர்க் களித்தத் தேமொழி யோடுமை மொழியீம், நன்மொழி யாகக் குளிர்தரக்கேட்கு நவி லரி புரிச்சிவன் செவிக்கென், புன்மொழி புகுதற் பொருந்துமேற் √ படிந்தும் புலவர்வா யொழுகிய பொழுதே.

ஆதிபுரஸ் தலபுராண பாயிர முற்றிற்று.

---

* ஒக்கம் - உயர்வு. † வகிர் - வழி. ‡ மண்டலி - பூனை. § வரி-புலி. ¶ கூலம்-பசு. ‖ புலிங்கம்-ஊர்க்குருவி. $ கரும்பிளை-காகம். + பிகம்-குயில். ∴ அரிட்டம் - முட்டை. √ படிதல் - கலத்தல்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

## உமாபதி சிவாசாரிய சுவாமிகளருளிச்செய்த
பெரியபுராணசார
## தற்சிறப்புப் பாயிரம்.

ஏர்பரவுமேனுஇராதரவதாரஞ்செய்தெயினனூரிற்
சீர்பரவநின்றதனுற்றிருஞானசம்பந்தரொரவெல்லப்
பேர்பரவுமப்போதமண்டபம்வீற்றிருந்தருள்சேர்பெற்றியாலும்
பார்பரவுஞ்சந்தானவாதிபுரித்தொண்டுளதாய்ப் பகர்வர்மேலோர்.

அருள் பரவு திருத்தொண்ட ரறுபத்து மூவர்களென் மூவர னபின், றெருள் பரவு சந்தானத் தொல்புரிக்கு மேர்தொழும்பு சேரற்செப்பிப், பொருள் பரவு மாதிசிவக் கோத்திரரோ டறுவருமா பதிதாளேற்றி, மருள் பரவ னீக்கியெற்கு முகவுரையா மல்குபுகழ் வகுப்பனனே.

## உமாபதி சிவாசாரியா ரருளிச்செய்த
திருத்தொண்டப் பெரியபுராண
## சார பாயிரம்.

மல்குபுகழ் வன்றொண்ட ரருளாலீந்த வளமருவு திருத்தொண்டத் தொகையின் வாய்மை, நல்கும்வகை புல்கும்வகை நம்பியாண்டார் நம்பிதிரு வந்தாதி நவின்ற வாற்றும், பல்குநெறித் தொண்டர்சீர் பரவவல்ல பான்மையா ரெமையாளும் பரிவால் வைத்த, செல்வமிகுந் திருத்தொண்டர் புராணமேவுந் திருந்துபய னடியேனுஞ் செப்ப லுற்றேன்.

### சுந்தரமூர்த்தி நாயனர்.

தண்கயிலை யதுநீங்கி நாவலூர்வாழ் சைவனர் சடையனர் தநயனராய், மண்புகழ வருட்டுறையா னோலைகாட்டி மணம் விலக்க வன்றொண்டா யதிகைசேர்ந்து, கண்பினுட னருள்புரிய வாரூர் மேவி நலங்கிளரும் பரவைதோ ணயந்து வைகித், திண்குலவும் சிறன்மிண்டர் திறல்கண் டேத்துந் திருத்தொண்டத் தொகையருளாற் செப்பினரே.

செப்பலருங் குண்டையூர் நெல்லழைத்துத் திருப்புகலூர்ச் செங்கல் செழும்பொன்னாச் செய்து, தப்பின்முது குன்றார்தரும் பொருளாற் றிட்டுத் தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்துநாத, னொப்பிறனித் தூதுவந்தா றூடுகேறி யுறுமுதலை சிறுமதலை யுமிழ நல்கி, மெய்ப்பெரிய களிறேறி யருளாற்சேர வேந்தருடன் வடகைலை மேவினாரே.

## தில்லைவாழந்தணர்.

நல்லவா னவர்போற்றுந் தில்லைமன்று ளாடகஞ்செய் பெருமானுக் கணியார் நற்பொற், றொல்லைவான் பணியெடுத்தற் குரியார்வீடுந் துறந்த நெறியார் தொண்டத்தொகை முன்பாடத், தில்லைவா ழந்தணரொன் றெடுத்து நாதன் செப்புமரு ளுடையார் முத்தீயார்பத்திக், கெல்லைகாண் பரியாரொப் புலகிற்றாமே யேய்ந் துள்ளா ரெமையாள வாய்ந்துளாரே.

## திருநீலகண்டநாயனார்.

தில்லைநகர் வேட்கோவர் தூர்த்தராகித் தீண்டிலெமைத் திருநீலகண்டமென்று, சொல்லு மனையாடனையே யன்றிமற்றுந் துடியிடையா ரிடையின்பந் துறந்துமூத்தங், கெல்லையிலோ டிறைவைத்து மாற்றிவாங்க ளெடுத்திலமென் றியம்புமென விழிந்து பொய்கை, மெல்லியிலா ளுடன்மூழ்கி யிளமையெய்தி விளங்கு புலீச்சரத்தானை மேவினாரே.

## இயற்பகை நாயனார்.

எழிலாருங் காவிரிப்பூம் பட்டினத்து ளியல்வணிக ரியற்பகையா ரிருவர்தேட, வழலாய பிரான்றூர்த்த மறையோனாகி யாயிழையைத் தரவேண்டி யணையவையன், கழலாரப் பணிந்துமனைக் கற்பின்மேன்மைக் காதலியைக் கொடுத்தமர்செய் கருத்தால்வந்த, யிழையாருஞ் சுற்றமெலாந் துணித்துமீளப் பிஞ்ஞகனு ரழைத்தருளப் பெற்றுளாரே.

## இளையான்குடிமாற நாயனார்.

மன்னியவே ளாண்டொன்மை யிளசைமாறர் வறுமையா லுணவுமிக மறந்துவைகி, யுன்னருங்கள் விருந்தன்மழையி லுண்டிவேண்டி யும்பர்பிரா னணைய வயலுழுதவித்துஞ், செந்நெல்லுனை யமுதுமனை யலக்கரலாக்கிச் சிறுபயிரின் கறியமுது திருந்தச் செய்து, பன்னரு மூணவருந்தற் கெழுந்தசோதிப் பரலோக முழுதாண்ட பான்மையாரே.

### மெய்ப்பொருணயனர்.

சேதியர்நற் கோவலூர் * மலாடமன்னர் திருவேட மெய்ப் பொருளாத் தெளிந்தசிந்தை, நீதியினு ருடன்பொருது தோற்ற மாற்ரு னெடுஞ்சினமுங் கொடும்படையு நிகழாவண்ண, மாதவர் போ லொருமுறைகொண் டணுகிவாளால் வன்மைபுரிந் திடமரு ண்டு வந்ததத்தன், காதலுற நமர்தத்தா வென்றுநோக்கிக் கடிந கல்வித் திறைவனடி கைக்கொண்டாரே.

### விறன்மிண்டநாயனர்.

விளங்குதிருச் செங்குன்றூர் வேளாண் டொன்மை விறன் மிண்டர் திருவாரூர் மேவுநாளில், வளங்குலவு தொண்டரடி வண ங்காதேகும் வன்றெண்டன் புறகவனே வலியவாண்ட, துளங்கு சடை முடியோனும் புறகென்றன்பாற் சொல்லுதலு மவர்தொண் டத் தொகைமுன்பாட, வுளங்குளிர வுளதென்று ரதனுலண்ண லுவகைதர வுயர்கணத்து ளோங்கினுரே.

### அமர்நீதிநாயனர்.

பழையாறை வணிகரமர் நீதியார்பாற் பரவுசிறு முனிவடி வாய்ப் பயிலுநல்லூர்க், குழைகாதர் வந்தொருகோ வணத்தை வைத்துக் கொடுத்ததனே யெடுத்தொளித்துக் குளித்துவந்து, தொ ழிலாரு மதுவேண்டி வெகுண்டுநீரித் துலையிலிடுங் கோவணநேர் தூக்குமென்ன, வெழிலாரும் பொன்மனைவி யிளஞ்சேயேற்றி யே றினர்வா னுலகுதொழ வேறினுரே.

### எறிபத்த நாயனர்.

திருமருவு கருவூரா னிலையார்சாத்துஞ் சிவகாமி யார்மலரைச் சிந்தையானே, யரநெறியோ றெறிபத்தர் பாகரோடு மறவெறிய வென்னுயிரு மகற்றியொன்று, புரவலனுர் கொடுத்தபடை யன்பால் வாங்கிப் புரிந்தரிவான் புகவெழுந்த புனிதவாக்காற், கரியினுடன் விழுந்தாரு மெழுந்தார் தாமுங் கணநாத ரதுகாவல் கைக்கொண் டாரே.

### ஏனதிநாத நாயனர்.

ஈழக் குலச்சான்ரு ரெயினனூர்வா ழேனுதி நாதனு ரிறைவ னீற்றைத், தாழத் தொழுமரபார் படைகளாற்றுந் தன்மைபெறு வதிசூரன் சமரிற்ரோற்று, வாழத் திருநீறு சாத்தக்கண்டு மருண் டார் தெருண்டார்கை வாள்விடார்நேர், வீழக் களிப்பார் போனி ன்றே யாக்கை விடுவித்தார் சிவனருளே மேவினுரே.

---

* மலாடமன்னன் - மலையமா நாட்டரசன்.

## கண்ணப்ப நாயனார்.

வேடரதி பதியுடுப்பூர் வேந்தனாகன் விளங்கியசேய் திண்ண னார் * கன்னிவேட்டைக், காடதில்வாய் மஞ்சனமுங் குஞ்சிதரு மலருங் காய்ச்சினமென் றிடுதசையுங் காளத்தியார்க்குத், தேடறு மன் பினிலாறு தினத்தளவு மளிப்பச் சிறுசிவகோசரியுந் தெளிய விழிப்புண்ணீ, ரோடவொரு கண்ணப்பி யொருகண்ணப்ப வொ ழிகவெனு மருள்கொடரு குறவின்றாரோ.

## குங்கிலியக்கலய நாயனார்.

சீலமலி திருக்கடவூர் கலயனாரர் திகழ்மறையோர் பணிவ றுமை சிதையாமுன்னே, தாலியைநெற் கொளவென்று வாங்கிக் கொண்டு சய்கையில்குங் கிலியத்தாற் சார்ந்த செல்வர், ஞாலமிகழ் திருப்பனந்தா ளுதர்நேரோ நரபதியுந் தொழக்கச்சா லயந்துபோ தப், பாலமுத முண்டாரு மரசுமெய்திப் பரிந்தமுது செயவருள் சேர் பான்மையாரோ.

## மானக்கஞ்சாற நாயனார்.

கஞ்சநகர் மானக்கஞ் சாறனார் சீர்க்காதன் மகள்வதுவை மண ங் காணநாதன், வஞ்சமலி மாவிரதத் தலைவனாகி வந்துபுகுந் தவ ளளக மகிழ்ந்து நோக்கிப், பஞ்சவடிக் காமென்ன வரிந்து நீட்டும் பத்தரொதிர் மறைந்திறைவன் பணித்தவாக்கா, லெஞ்சலில்வண் குழல்பெற்ற பேதைமாதை யேயர்பிராற் குதவியருளெய்தினாரோ.

## அரிவாட்டாய நாயனார்.

தாவில்கண மங்கலத்துள் வேளாண் டொன்மைத் தாயனார் நாயனார் தமக்கேசெங்நெற், றூவரிசி யெனவிளைவ தவையேயாகத் துறந்துணவு வடுவரிசி துளங்குகீரை, யாவினினோங் துடன்கொணர வோர்கமரிற்சிந்த வழிந்தரிவாள் கொண்டூட்டி யரியாமுன்னே, மாவடுவி னொலியுமரன் கரமுந்தோன்றி வாள்விலக்கி யமரர்தொழ வைத்தவன்றே.

## ஆனாயநாயனார்.

மங்கலமா மழநாட்டு மங்கலமா நகருண் மருவுபுக ழானாயர் வளரா மேய்ப்பார், கொங்கலர்பூந் திருக்கொன்றை மருங்கு சார்ந் து குழலிசையி னோங்கெழுத்துங் குழைய வைத்துத், தங்குசரா சரங்களெல்லா முருகாநிற்பத் தம்பிரா னணைந்து செவி தாழ்ந்து

* கன்னி - அழிவின்மை, இளமை.

வாழ்ந்து, பொங்கிய வான் கருணைபுரிந் தென்று மூதப் போதுக வென் றருளவுடன் போயினாரே.

### மூர்த்தி நாயனார்.

வழங்குபுகழ் மதுரைநகர் மூர்த்தியாராம் வணிகர்திரு வாலவாய் மன்னர் சாத்கத், தழங்குதிர முழங்கைதரத் தேய்த்தலூறுந் தவிர்ந்தமன்னர் வஞ்சனையுந் தவிரமன்ன, னிழந்தவுயி ரினனாக ஞாலமலக வெழில்வேணி முடியாக விலங்கு வேட, முழங்குபுக ழணியாக விரைநீறாக மும்மையுல காண்டருளின் முன்னினாரே.

### முருக நாயனார்.

மன்னுதிருப் புகலூர்வாழ் முருகனாரா மறையவர்கோ வர்த்தமா னீச்சரத்தார், சென்னியினுக் கழகமரு மலர்கள் கொய்து திருமாலை புகழ்மாலை திகழச்சாத்திக், கன்னிமதிற் கழுமலநா டுடைய நாதன் காதன்மிகு மணங் காணுங் களிப்பினாலே, யின்னல்கெடவு ன்சேவித் தருளான் மீளா திலங்குபெரு மணத்தரனை யெய்தினாரே.

### உருத்திரபசுபதி நாயனார்.

பங்கமில்வண் புகழ்நிலவு தலையூர்வாழும் பசுபதியா ரொனு மறையோர் பணிந்து செந்தே, னங்கமல மடுவினிடை யல்லு மெல்லு மகலாதே யாகளமா யமர்ந்து நின்று, திங்கள் வளர் சடைமுடியா னடிகள் போற்றித் திருவெழுத்து முருத்திரமுந் திகழவோதி, மங்கையிட முடையபிரா னருளான் மேலை வானவர்க டொழு முலகின் மன்னினாரே.

### திருநாளைப்போவார் நாயனார்.

நன்மைதிகழ் மேற்கானாட் டாதனூர்வாழ் நந்தனார் புறத்தொண்டர் நாளைப் போகப், பொன்மலிதென் புலியூர்க்கென் றுனைப்பார் புன்கூர்ப் பொய்கையமைத் தடலேறு பிரியநோக்கி, வன்மதில்சூழ் தில்லையிறை யருளால்வாய்ந்த வண்டழலி னிடைமூழ்கி மறையோர் போற்ற, மின்மலிசெஞ் சடைமுனியா யெழுந்து நாதன் விளங்குநடந் தொழமன்றுண் மேவினாரே.

### திருக்குறிப்புத்தொண்ட நாயனார்.

கொந்தலர்பூம் பொழிற்கச்சி நகரேகாலிக் குலத்தலைவர் தவர்குறிப்புக் குறித்துளார் பால், வந்திறைவர் நமக்கின்று தாரீராகின் வருந்துமுட லெனவாங்கி மாசு நீத்த, கந்தை புலராதொழிய மழை

யுமாலைக் கடும்பொழுதும் வரக்கண்டு கலங்கிக் கன்மேற், சிந்த முடி புடைப்பளவிற் றிருவேகம்பர் திருக்கைகொடு பிடித்துயர் வான் சேர்த்தினரோ.

### சண்டேசுர நாயனர்.

வேதமலி சேய்ஞலூ ரெச்ச தத்தன் விளங்கியசேய் மறைப யிலும் விசாரசன்மர், கோதனமேய்ப் பவன்கொடுமை பொறாது தாமே கொண்டு நிரை மண்ணியின்றென் கரையினீழற், றுதவியின் மணலிலிங்கத் தான்பாலாட்டத் தாதைபொறா தவையிடறுந் தா ன்கண் மாளக், காதிமலர்த் தாமமுயர் நாமமுண்ட கலமகனும் பத மருளாற் கைக்கொண்டாரோ.

### திருநாவுக்கரசுநாயனர்.

போற்றுதிரு வாமூரில், வேளாண் டொன்மைப் பொருவில் கொறுக்கைய ரதிபர் புகழனர்பான், மாற்றருமன் பினிற் றிலத வதியா மாது வந்துதித்த பின்பு மருணீக்கியாரும், தோற்றியமண் சமயமுறு துயர நீங்கத் துணைவரரு டரவந்த சூலைநோயாற், பாற் றருநீ ளிடமெய்திப் பாடலிபுரத் திரத்திற் பாழியொழித் தரனதி கைப் பதியில்வந்தார்.

வந்துதமக் கையரருளா னீறுசாத்தி வண்டமிழா னோய்தீர் ந்து வாக்கின் மன்னய், வெந்தபொடி விடம்வேழம் வேலைநீந்தி வியன்சூலங் கொடியிடபம் விளங்கச் சாத்தி, யந்தமிலப் பூதிமக னரவுமாற்றி யருட்காசு பெற்றுமறை யடைப்பு நீக்கிப், புந்திம கிழ்ந் தையாற்றிக் கைலை கண்டு பூம்புகலூ ரரன்பாதம் பொருந்தி னரோ.

### குலச்சிறைநாயனர்.

கோதில்புகழ் தருமணமேற் குடியார்கோவன் குலச்சிறை யூர் தென்னர்குல வமைச்சர் குன்று, மாதவர்க ளடிபரவு மரபார் பாண்டி மாதேவி யாரருள்வான் பயிர்க்கு வேலி, காதன்மிகு கவு ணியர்கோன் வாதிற்றோற்ற கையனைவையைக் கரைசேர் கழுவி லேற்று, நீதியின ராலவாய் நிமலர்ச் சேர்ந்த நின்மலனொன்மல ங்க ணீக்கினரோ.

### பெருமிழலைக்குறும்பநாயனர்.

கொண்டல்பனி வளர்சோலை மிழலைநாட்டுக் கோதில்புகழ்ப் பெருமிழலைக் குறும்பனர்சீ, ரண்டர்பிரா னடியவருக் கடியாராகு

மாதரவா லனுக்கவன் ஞெண்டர்க்காளாய், மண்டொழுமெண் டருசித்தி வாய்ந்துளார்தாம் வன்றொண்டர் வடகைலை மருவுகா ண்மு, னெண்டிகழு மறைமூல நெறியூடேகி யிலங்கொளிசேர் வடகைலை யெய்தினரோ.

### காரைக்காலம்மையார்.

தங்குபுகழ்க் காரைக்கால் வணிகன்மிக்க தனதத்தன் றரும்பு னித வதியார்மாவின், செங்கனிக டிருவருளா லழைப்பக்கண்டு திகழ்கணவ னதிசயித்துத் தேசநீங்க, வங்கவுட லிழந்துமுடி நடை யாலேறி யம்மையே யெனநாத னப்பாவென்று, பொங்குவட கை லைபணிந் தாலங்காட்டிற் புனிதனட மனவரதம் போற்றினரோ.

### அப்பூதியடிகணயநார்.

அந்தமினற் றிங்களூர் வருமப்பூதி யருமறையோர் திருநா வுக் கரசினுமம், பந்தரிடை யெழுதக்கண் டரசுமெய்தப் பணிந்து பரிகலநேடிப் படப்பைசேர்ந்த, மைந்தனுயி ருயர்கதலியிலைமே ற்றுஞ்சும் வாளரவுகவரவுடன் மறைத்தல் கேட்டுச், சிந்தைமகி ழ்ந் துயர்பதிக மருந்தாற்றீர்த்துத் திருவமுது செயவருளைச் சேர் ந்துளாரோ.

### திருநீலநக்கநாயனர்.

நீதிதரு மறையோர்வாழ் சாத்தமங்கை நீலநக் கனைவந்தி நிம லர்மேனி, யூதிவிழுஞ் சிலம்பிகடிந் தவளைநீத்தார்க் குமியாதவிட நாத னுறுநோய் காட்டக், காதன்மிகு மனைவியையு மகிழ்ந்துமே விக் காழியர்கோ னமுதுசெயக் களித்துவாழ்ந்து, வேதிகையிற் பாணனுற் கிடமுநல்கி விளங்குபெரு மணத்தரனை மேவினரோ.

### நமிநந்தியடிகணயநார்.

நண்ணுபுகழ் மறையோர்வா ழேமப்பேறூர் நமிநந்தி யடிக டிரு விளக்குநல்க, வெண்ணெ யமணர்கள்விலக்க நீராலாரூ ரிலங் குமர நெறியாருக் கேற்றுநாளிற், கண்ணமணர் கெடக்கண்பெற் றடிகள்வாழக் காவலனு னிமிர்ந்தங்கள் கட்டுவித்தே, யண்ணலருள் கண்டாரூ ரமர்ந்துதொண்டர்க் காணியெனு மரசினரு ளடைந்து ளாரோ.

### திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

காழிநகர்ச் சிவபாத விதயர்தந்த கவுணியர்கோ னழுதுமை யாள் கருதியூட்டு, மேழிசையி னமுதுண்டு தாளம்வாங்கி யிலங்

இயக்கித் திலச்சிவிகை யிசையவேறி, வாழுமுயலக னகற்றிப் பந்த ரேய்ந்து வளர்கிழிபெற் றரவின்விட மருகற்றீர்த்து, வீழிகாக் கா செய்தி மறைக்கதவம் பிணித்து மீனவன்மேனியின் வெப்பு விடு வித்தாரே.

ஆரொரியிட் டெடுத்தவே டவைமுன்னேற்றி யாற்றிலிடு மே டெதிர்போ யணையவேற்றி, யோரமண ரொழியாமே கழுவிலே ற்றி யோதுதிருப் பதிகத்தா லோடமேற்றிக், காருதவு மிடிபுத்தன் றலையிலேற்றிக் காயாத பனையின்முது கனிகளேற்றி, யீரமிலா வங் கமுயி ரெய்தவேற்றி யிலங்குபெரு மணத்தானை யெய்தினாரே.

**ஏயர்கோன் கலிக்காமநாயனார்.**

ஏதமில் வேளாளர் பெருமங் கலத்துளேயர்கோன் கலிக்காம ரிறையை நேரோ, தூதுகொளு மவனணுகி லென்னு மென்னுந் துணிவினர்பா லிறைவனருஞ் சூலைமேவி, வேதனைவன் றொண் டன்வரி னீங்குமென்ன வெகுண் டுடல்வாள் கொடுதுறந்து மேய நாவற், போதகமு முடலிகழ வெழுந்துதாழ்ந்து போற்றியது வில க்கியருள் பொருந்தி னாரே.

**திருமூலநாயனார்**

கயிலாயத் தொருசித்தர் பொதியிற் சேர்வார் காவிரிசூழ் சாத்தனூர் கருதுமூலன், பயிலாநோ யுடன்வீயத் துயரநீடும் பசு க்களைக் கண்டவனுடலிற் பாய்ந்துபோத, வயலாகப் பண்டையுட லருளான்மேவி யாவடுதண் டுறையாண்டுக் கொருபா வாகக், குயி லாரு மரசடியி லிருந்துகூறிக் கோதிலா வடகைலை குறுகி னாரே.

**தண்டியடிகணாயனார்.**

திருவாரூர் வருந்தண்டி யடிகள்காகூஷி சேராதார் குளந்தொட் டற் கமணர்சீறிக், குருடாநீ முன்செவிடுங் கூடிற்றென்று குறித் தறியைப் பறித்தெறியக் கொதித்துத் தங்க, ணருளாலே விழித் தெவரு மந்தராக வமணர்கலக் கம்பலகண் டவர்கள் பாழிப், பரு வான கற்பறித்தா விக்கனையுங் கட்டிப் பரனருளா லமருலகம் பற்றி னாரே.

**மூர்க்கநாயனார்.**

தொண்டவள நாட்டுவேள்ர் வேற்காட்டேர்வாழ் தொல் லுழவர் நற்சூதர்சூது வென்று, கொண்ட பொருள் கொண்டன்பர்க் கமு தளிக்குங் கொள்கையினர் திருக்குடந்தை குறுகியுள்ளார், விண் டிசைவு குழறுமொழி வீணர்மாள வெகுண்டிடலான் மூர்க்கரென

விளம்பு நாம, மெண்டிசையு மிகவுடையா ரண்டர்போற்று மே ழூலகு முடனுளு மியல்பி னரே.

### சோமாசிமாறநாயனர்.

அம்பர்நக ரந்தணர்சோ மாசிமாற ரன்பர்களாம் யாவர்க்கு மன்பினமு தளிப்பா, ரும்பர்திகழ் வகையாகம் பலவுஞ்செய்யு முண்மையினு ளைந்தெழுத்து மோவா நாவார், நம்பர்திகழ் திருவா ரூர் நயந்து போற்று நாவலர்கோ னடிபரவு நன்மையாலே, யிம்பர் தொழ வும்பர்பணிந் தேத்தமேலை யேழுலகு முடனுளு மியல்பி னரே.

### சாக்கியநாயனர்.

சங்கமங் கைவேளாண் டலைவர்காஞ்சிச் சாக்கியரோ டியை ந்தவர்தந் தவறுஞ் சைவத், துங்கமலி பொருளுமுணர்ந் தந்தவே டந் துறவாதே சிவலிங்கந் தொழுவோர் கண்டோ, ரங்கன்மலர் திருமேனி யழுந்தச்சாத்தி யமருநாண் மறந்தொருநா ளருந்தா தோடிச், செங்கலெறிந் திடுமளவின் மகிழ்ந்தநாதன் றிருவருளா லமருலகஞ் சேர்ந்து ளாரே.

### சிறப்புலிநாயனர்.

திருவாக்கூ ரருமறையோ ருலக மேத்துஞ் சிறப்புலியார் மற ப்புலியா ரிருமேற்செங்க, ணரவார்த்தார் தருமேற்றூர்க் கன்பரா ஞர்க் கமுதளிப்பா ரொளிவெண்ணீ றணிந்த மார்பர், பெருவாக் கான் மறைபரவி யாகம்போற்றும் பெற்றியினு ளைந்தெழுத்தும் பிறழா தோதிக், கருவாக்கா விறைவன்று ளிணைகள் சேர்ந்த கரு த்தினு ரெனையாவுந் திருத்தினரே.

### சிறுத்தொண்டநாயனர்.

பல்குமருத் துவரதிபர் செங்காட்டங் குடிவாழ் படைத்தலைவ ரமுதளிக்கும் பரஞ்சோதியார்மெய்ச், செல்வமிகு சிறுத்தொண் டர் காழிநாடன் றிருவருள்சேர் தவர்வளருஞ் சீராளன் றன்னை, நல்குதிரு வெண்காட்டு நங்கைசமைத் திடப்பின்னன் மதிச்சந்த னத்தாதி தலைக்கறியிட்டுதவப், புல்கவரும் வயிரவர்தா மகிழ்ந்து மகவருளப் போற்றியுவர் சிவனருளே பொருந்தினரே.

### சேரமான்பெருமாணுயனர்.

காவலர் மகோதையார் கொடுங் கோளூர்க் கோக்கழறியவை யறிந்தகோச் சிலம்போசைக் கருத்தார், நாவலர்கோ னன்பரடிக்

சேரனென்றே நவின்றவரும் வண்ணானை நயந்தகோநற், பாவலர்கோப் பாணபத் திரனுல் வாய்ந்த பரமர்திரு முகம்வாங்கிப் பணிகோவெற்பின், மேவியகோ வானைக்குக் குதிரைவைத்த வீரர்கோ வெனையாளுஞ் சேரர் கோவே.

### கணநாதநாயனர்.

கந்தமலி வயற்காழி மறையோ ரோத்தும் கணநாதர் திருத்தோணிக் கடவுளார்க்கு, நந்தவனம் பலவமைத்து மலருங் கொய்து நற்றுமஞ் சொற்றும நயந்து சாத்தி, வந்தவரைத் தொண்டாக்கிப் பணிகள் பூட்டி வாதுசெய்த வாரணத்தை மகிழ்ந்து வாழ்த்திப், புந்திமகிழ்ந் தரனருளாற் கைலைமேவிப் பொருவில்கணத் தவர்காவல் பொருந்தி னூரே.

### கூற்றுவநாயனர்.

குன்றுத புகழாளர் களந்தை வேந்தர் கூற்றுவனார் மாற்றலர்மண் கொண்டு சூடப், பொன்றுமு முடிவேண்டப் புலியூர் வாழும் பூசுரர்கள் கொடாதகலப் புநிதனீந்த மன்றுடுந் திருவடியே முடியாச்சூடி மாநிலங்காத் திறைவனுறை மாடக் கோயிற், சென்றுசை யுடன்வணங்கிப் பணிகள் செய்து திருவருளா லமருலகஞ் சேர்ந்து ளாரே,

### பொய்யடிமை யில்லாதபுலவர்.

பொய்யறியாக் கபிலரொடு பாண ராதிப் புலவோர்பொற் பார்கலைகள் பொருந்த வோதிச், செய்யுளிடை வளராசு மதுர நல்ல சித்திரவித் தாரமெனத் தெரிக்குஞ் செம்மை, மெய்யுடைய தொடைகளெல்லா மன்று ளாடன் மேவியகோ னிருதாளில் விரவச் சாத்திக், கையுடையஞ் சலியினரா யருளான் மேலைக் கருதரிய வமருலகங் கைக்கொண் டாரே.

### புகழ்ச்சோழநாயனர்.

பொழின் மருவுங் கருவூர்வாழ் புகழார் சோழர் போதகம்போ லென்னுயிரும் போக்கு மென்றே, யழலவிர்வாள் கொடுத்த பிரா னதிகை மான்மே லடர்ந்தபெரும் படையேவ வவர்கொண் டேய்ந்த, தழல்விழிகொ டலைகாண்பார் கண்ட தோர்புன் சடைத்தலையை முடித்தலையாற் றாழ்ந்து வாங்கிக், கழல்பரவி யதுசிரத்தி னேந்தி வாய்ந்த கனன்மூழ்கி யிறைவனடி கைக்கொண்டாரே.

### நரசிங்க முனையரையநாயனார்.

நாடுபுகழ் முனைப்பாடி நாடுமேய நரசிங்க முனையர்புவி நயந் துமன்று, ளாடுமேவ ராதிரைநா ளடியார்க்கம்பொ னமுதளிப்பா ரொளிவெண்ணீ றணிந்து தூர்த்த, வேடமுடை யவர்க்கிரட்டிச் செம்பொ னீந்து விடுத்தழகா ராலயங்கள் விளங்கச் செய்து, தோ டலர்தா ருடையபிரா னருளே யாளத் தோன்றின ரொனையருளி னூன்றி னாரே.

### அதிபத்தநாயனார்.

அலையாருங் கடனாகை நகருள்வாழு மதிபத்தர் பாதவர்க ளதிபர் வேலே, வலைவாரி வருமீனிற் றலைமீ னீசன் வார்கழற்கே யென்றுவிடு மரபார் பன்னாட், டலையான தொருமீனே சாரநாளுந் தங்தொழிலால் விடுத்துமிடி சாரச் செம்பொ, னிலையாரு மணி நயந்த மீனொன்றெய்த நீத்தருளா லிறைவனடி நேர்ந்து ளாரே.

### கலிக்கம்பநாயனார்.

கடவுளருட் கண்ணார்கள் பயிலுந் தொல்லைக் கடந்தைநகர் வணிகர்கலிக் கம்ப ரன்பர்க், கடிமையுற வமுதளிப்பா ரடியானீங்கி யருளுருவா யன்பருட னணைய வேத்தி, யிடையிலவ ரடியிணை யும் விளக்கா நிற்ப விகழ்மனைவி கரகமலி யிரண்டு கையும், படி யில்விழ வெறிந்தவள்செய் பணியுந் தாமே பரிந்துபுரிந் தரனரு ளே பற்றினாரே.

### கலியநாயனார்.

தடல்மதில்சூ ழொற்றியூர் நகருள் வாழுஞ் சக்கரப்பா டியர் குலமெய்த் தவமா யுள்ளார், படர்புகழார் கலியனார் நவியுங் கூற் றைப் பாய்ந்தவர்க்கு விளக்கெரிக்கும் பரிவான் மற்றோ, ருடவில ராய்ச் செக்குழல்வார்க் கதுவு நேரா துயர்மனைவி யைக்கொள்வா ருளரு மின்றி, மிடறுதிர மகனிறைய வரியநாதன் வியன்கைகொ டுபிடிப்பவருண் மேவி னாரே.

### சத்திநாயனார்.

விரிதருகா விரிநாட்டு வரிஞ்சி யூர்வாழ் வேளாளர் சத்தியார் விமலர் பாதத், துரியவர்க ளடிபரவு மொருமையார்நாவோவா மே யைந்தெழுத்து முரைக்கு நீரா, ரிருளின்மிட றுடையபிரா னடியார் தம்மை யிகழ்வார் நாத்தண்டாயத் திடுக்கி வாங்கி, யரியு மது திருத்தொழிலா வுடையார் மன்று ளாடியசே வடிநீழ லடை ந்து ளாரே.

### ஐயடிகள்காடவர்கோனாயனார்.

வையநிகழ் பல்லவர்தங் குலத்துவந்த மாமணிமா நிலமுழுது மகிழ்ந்து காக்கு, மையடிகள் காடவர்கோ னருளா னூல்க ளறிந் தரசு புரிந்திடுத லமையு மென்றே, பொய்யனைய வுடல் வாழ்வு கழியுமாறு பொருந்தியிடும் புகழ்வெண்யா புலியூர் மேவுஞ், செய் யதிரு வடிமுதலாப் பதிகடோறுஞ் செப்பினாரொன்வினைக டப்பி னாரே.

### கணம்புல்லநாயனார்.

இலகுவட வெள்ளாற்றுத் தென்பால்வாழு மிருக்குவேளூர திப ரொழிலார் சென்னிக், கலைநிலவா ரடிபரவுங் கணம்புல்லர்தில் லைக் கருதுபுலீச்சரத்தாற்குக் காதற்றீப,நிலைதரத்தா மிடமிடியா லொருநாட்புல்லா னீடுவிளக் கிடவதுவு நேராதாகத், தலைமயிரி னெரிகொளுவ மளவினாதன் றூவாத வாழ்வருளுந் தன்மையாரே.

### காரிநாயனார்.

திருக்கடவூர் வருமுரவோர் காரியாராங் திகழ்தொண்டர் வண்டமிழ்நூ றிருந்தவோதி, விருப்பொடுதம் பெயராற்பா விள ம்பிமும்மை வேந்தரையு முறைமுறையே மேவியங்க, ணுரைத்தவு ரை நயமாக்கி யவர்பாலேய்ந்த வொண்பொருளா லாலயங்க ளோ ங்கச்செய்து, தரைக்குளருந் தவர்க்கேவ றகமுன்போற்றுந் தன் மையா லருள்சேர்ந்த நன்மையாரே.

### நெடுமாறநாயனார்.

கன்னன்மலி நெல்வேலிக் கவினூர்மாறர் கவுரியர்கோ னமண ருறு கலக்கமெல்லாம், பொன்னெயில்சூழ் சிவபுரக்கோ னணைய மாற்றிப் புநிதமிகு நீறணிந்து போற்றிசெய்து, மன்னுபுகழ் மங் கையருக் கரசியாரா மலர்மாது மணிமார்ப மகிழ்ந்துமாற்றார், வெ ந்திடுதல் கண்டரசு புரிந்துகாழி வேந்தருள் சேர்ந்தபெரு விறலி னாரே.

### வாயிலார்நாயனார்.

ஞாயிலார் மதிற்றொண்டை நாட்டுமேன்மை நண்ணுமயிலா புரியின் வேளாண் டொன்மை, வாயிலார் மலைவில்லா னடியே போற்றி மறவாமை தலைநின்ற மனமேசெம்பொற், கோயிலா வுயர் ஞானம் விளக்காநீராக் குலவியவா னந்தமன்பே யமுதாக்கொண்டு, தாயிலா னிருசரண நிகழவேத்துந் தன்மையா ரருள்சேர்ந்த நன் மையாரே.

### முனையடுவார்நாயனார்.

பொன்னிவளந் தருநாட்டுப் புகழூர்சேர்ப் பொருவிறிரு மலிவேளாண் டொன்மைமிக்கார், முன்னியவர் முனையடுவா ரிகலார்போரின் முரணழிவார் தமக்காக மொழிந்தகூலி, மன்னுநிதி கொண்டுசெயங் கொடுத்துவந்த வளர்பொருளா லிறைவனடி வழுவாவன்பர்க், கன்னமவர் நசையின்மிக மிசையநல்கு மன்பர்துன்ப மவையாவு மகன்றுளாரே.

### கழற்சிங்கநாயனார்.

காடவர்தங் குலமுவந்த கழலார்சிங்கர் காதன்மிகு தேவியுடன் காவலாரூ, ராடவல பெருமானைப் பணிவாரங்கோ ரக்னறமலர் தனைமோந்த வரிவைமூக்கைச், சேடுடைய செருத்துணையா ரரியக்கேட்டுத் திறலரசர் மலரெடுத்த செங்கையென்றே, சூடகமுன் கைதடிந்து ஞாலங்காத்த தூய்மையா ரருள்சேர்ந்த வாய்மையாரே.

### இடங்கழிநாயனார்.

கோனாட்டுக் கொடும்பாளூ ரிருக்கும்வேளிர் குலத்தலைவ ரிடங்கழியார் கொங்கிற்செம்பொ, னானேற்றார் மன்றின்முக டம்பொன்மேய்ந்த வாதித்தன் மரபோர்நெற் கவர்ந்தோரன்பர், போனாட்ப ணிருளின்கட் காவலாளர் புரவலர்முன் கொணரவவர் புகலக்கேட்டு, மானேற்றா ரடியாரே கொள்கவென்று வழங்கியர சாண்டருளின் மன்னினாரே.

### செருத்துணைநாயனார்.

இரைத்தணையார் புனற்பொன்னி மருதநன்னாட் டெழிலாருந் தஞ்சைநக ருழவரோத்துஞ், செருத்துணையார் திருவாரூர் சேர்ந்துவாழ்வார் செல்வமிகும் பல்லவர்கோன் றேவிவீழ்ந்த, மருத்துணையார் மலரெடுத்து மோப்பக்கண்டு வளமலிபூங் கத்தியா லவண்மூக்கீர்ந்த, கருத்துணையார் விறற்றிருத்தொண் டினையேசெய்து கருதலரு மமருலகங் கைக்கொண்டாரே.

### புகழ்த்துணைநாயனார்.

புண்ணியர்கள் புகழழகார் திருப்புத்தூர்வாழ் புகழ்த்துணையா ரகத்தடிமைப் புரிதர்சின்னாண், மண்ணிகழ மழைபொழியா வற்காலத்தால் வருந்துடல நடுங்கிடவு மணிநீரோங்கி, யண்ணன்முடி பொழிகலச முடிமேல்வீழ வயர்ந்தொருநாட் புலம்பவரா னருளாலீந்த, நண்ணலரு மொருகாசுப் படியால்வாழ்ந்து நலமலிசீ ரமருலக நண்ணினாரே.

### கோட்புலிநாயனார்.

குலவுபுகழ் நாட்டியத்தான் குடிவேளாளர் கோட்புலியார் குவித்துயர்த்த செந்நெற் கூடு, நிலவணிவார்க் கமைத்தானை நிறுத்தி யொன்னார் நேர்மலைவார் திருவாணை நினையா தேநெற், சிலமிடியா லழித்தபடி யறிந்து வாளாற் சேர்ந்தபெருங் கிளைஞருடல் சிதறவீசி, யிலகுமொரு குழவியையு மெறிந்துநாத னெண்ணரிய கருணைநிழ லெய்தினாரே.

### பத்தராய்ப்பணிவார்கள்.

தொண்டரடித் தொழல்பூசைத் தொழின்மகிழ்த லழகார் துளங்கியவர்ச் சனைபுரித றுருகுதிநிய மங்கள், கொண்டபணி திருவடிக்கே கொடுத்தலீசன் குணமருவு மருங்கதையைக் குலவிக்கேட்டு, மண்டிவிழி துளும்பன்மயிர் சிலும்பலுன்னன் மருவு திருப் பணிகாட்டி வருபவாங்கி, யுண்டிகொளா தொழிதலென விவையோரெட்டு முடையரவர் பத்தரென வுரைத்துளாரே.

### பரமனையேபாடுவார்.

அருந்தமிழால் வடகலையா லருளா லொன்று லறிவுநெறி மருவுமருங் கவிகள்யாவுந், திருந்தியவா னவர்பணிய மன்றுளாடுந் தேவர்பிரான் கழலிணையே சேரவோதி, விருந்திடுநா வுடையபயன் மேவினோர்தா மேலாரே மெனமகிழ்ந்து விழிநீர் சோரப், பரிந்தருளாற் பரமனையே பாடவல்ல பான்மையா ரெமையாளு மேன்மையாரே.

### சித்தத்தைச் சிவன்பாலேவைத்தார்.

பாரணவும் புலனந்தக் கரணமொன்றும் படராமே நடுநாடி பயிலுநாதங், காரணபங் கயன்முதலா மைவர் வாழ்வுங் கழியுநெறி வுழிபடவுங் கருதிமேலைப், பூரணமெய்ப் பரஞ்சோதிப் பொலிவுநோக்கிப் புணர்ந்தணைந்த சிவானுபவ போகமேவுஞ், சீரணவு மவரன்றே வெம்மையாளுஞ் சித்தத்தைச் சிவன்பாலே வைத்துளாரே.

### திருவாரூர்ப்பிறந்தார்.

பொங்கியமா தவமுடையார் வருணநான்கிற் பொருந்தினர்க ளல்லாத புகழி னுள்ளார், சங்கையிலா வருந்தவமுன் புரிந்தாரிங்குச் சார்விலா ரிறைவனருள் சார்தலாலே, கங்கைவாழ் சடைமுடியா னருளானீங்காக் கணநாத ரெனவாழுங் கருத்தர்கன்னிச், செங்கண்வரால வளர்வாவி திகழுமாரூர்ச் சிறந்துளா ரெமையாளப் பிறந்துளாரே.

### முப்பொழுதுந் திருமேனிதீண்வோர்.

செப்பலருந் தவமுடைய செம்மையாளர் சிறுகாலே மலர் வாவி திகழமூழ்கி, யொப்பி றிருநீறணிந்து நியதியாற்றி யோவா மே யைந்தெழுத்து முறைத்துமேன்மை, தப்பில் சிவாகமவிதியா லின்பாலன்பாந் தன்மையா னன்மையாந் தகையாரொன்று, முப் பொழுதுந் திருமேனி தீண்டவல்ல முறைமையார் பிறவிதெறுந் திறமையாரே.

### முழுநீறுபூசிய முனிவர்.

கற்பமனு கற்பமுப கற்பமென்றிக் கடனணைந்த திருநீறுங் கனற்கணீறும், பொற்புடைய வரனுசா னங்கியாறும் பொல்லாத பூமியெதிர் புனைதலாகா, வற்புதமாந் திரிபுண்ட மதியின்பாதி யகி லாங்கந் தீபமிகு மழகார்வட்ட, முற்பொலிய வுடலணியு முறை யாரன்றோ முழுநீறு பூசவல்ல முனிவர்தாமே.

### அப்பாலு மடிச்சார்ந்தார்.

தாராரு மூவேந்தர் பயிலுந்தொல்லைத் தமிழ்நாட்டப் புறத் திறைவன் சரணஞ்சார்ந்த, சீராருந் தொண்டர்களு மண்டரோத் துந் திருத்தொண்டத் தொகையருளாற் செப்புங்காலத்,தோராருந் தொடையிலுரு இப்பாலப்பா லெங்கைபிரா னடியடைந்த விய ல்பினோரு, மாராத காதலுடை யவர்களன்றோ வப்பாலு மடிச்சார் ந்த வடியார்தாமே.

### பூசலார் நாயனார்.

பொருவருந்தன் டகநாட்டு நின்றவூர்வாழ் பூசுரர்கோப் பூச லார் புந்தியாலே, யிருநிதியந் தேடியா லயமுமாக்கி யெழுந்தரு ளப் பண்ணுவதா வெண்ணுங்காலே, யரனதனைக் காடவர்கோற் கருளமன்ன னங்கர மணைந்தவ்வா றறிந்துதாழ, விரவுமகக் கோ யிலுற விருத்தியங்கண் வேண்டுவகொண் டிறைஞ்சியருண் மே வினாரே.

### மங்கையர்க் கரசியார்.

மங்கையர்க்குத் தனியரசி வளவர்குலக் கொழுந்து மன்னவர் சூழ் தென்னவர்க்கு மாதேவியார்மண், சங்கைகெட வமண்சமயஞ் சாடவல்ல சைவ சிகாமணி ஞானத்தமிழிற் கோத்த, பொங்குதிரு வருளுடைய போதவல்லி பொருவி னெடுமாற னூர்புய மேல்வா ழுஞ், செங்கலச முலையாட னருளா லின்பஞ் சேர்க்கவளைப் புகழ் ந்தடியேன் வாழ்ந்தவாறே.

### நேசநாயனார்.

சாலியர்கோக் காம்பிலித் தலைவர் மேன்மை தாவாத புகழ்நேசர் தஞ்சொலென்றுங், கோலியவைந் தெழுத்தோதிச் சிந்தையுன்னிக் கொண்டபொரு ளன்பர்கொளக் கொடுத்து வாழ்வார், சிலயிருந் திருத்தொண்டர்க் குடையுங் கீளுந் திருந்தியவெண் கோவணமுஞ் சேரவிந்து, பாலனைய வொளி நீற்றான் பாதமேத்திப் பரலோக முழுதாண்ட பான்மையாரே.

### கோச்செங்கட் சோழநாயனார்.

வெண்ணாவ லிறைக்கொளி நூற்பந்தர்செய்த வியன்சிலம்பியதுவழித்த வெள்ளானைக் கை, யுண்ணாடிக் கடித்தவுட லொழியச் சோழ னுயர்குலத்துச் சுபதேவன் கமலத் தோங்கும், பெண்ணாகியவள்வயிற்றில் வைகிச்செங்கட் பெருமானாய்த் தென்னவராய்ப் பெருங்கோவில் பலவுங், கண்ணார்வித் துயர்தில்லை மறையவர்க்கு முறையுள் கநகமயமாக்கி யருள் கைக்கொண்டாரே.

### திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார்.

பிறங்கெருக்கத் தம்புலியூர் வாழும் பேரியாழ் பேணுதிருநீலகண்டப் பெரும்பாண னார்சீர், நிறந்தருசெம் பொற் பலகையாலவாயி னிமலன்பாற் பெற்றானூர் நேர்ந்து சிவன்வாயி, றிறந்தருளும் வடதிசையே சேர்ந்து போற்றித் திருஞான சம்பந்தர் திருத்தாள் வாழ்த்தி, யறந்திகழுந் திருப்பதிகம் யாழிலேற்றி யாசிறிருப் பெருமணஞ்சேர்ந் தருள் பெற்றாரே.

### சடையநாயனார்.

சங்கையிலா வரன்மறையோர் நாவலூர்வாழ் தவரதிபர் தம்பிரான் றோழராய, வெங்கள்பிரான் றவநெறிக்கோ ரிலக்குவாய்த்த விசைஞானி யார்தநய ரெண்ணார்சிங்க, மங்கையர்க டொழும்பரவை மணவாளநம்பி வந்துதிக்க மாதவங்கள் வருந்திச்செய்தார், வெங்கணரா விளங்குமிளம் பிறைசேர்சென்னி விடையின ரருள்சேர்ந்த சடையனாரே.

### இசைஞானியார்.

நாவற் றிருப்பதிக்கோர் செல்வச்சைவ நாயகமாஞ் சடையனார் நயந்தவின்பப், பூவைக் குலமடந்தை பொற்பார்கொம்பு புவிதழைக்க நீறணிந்து போற்றிசெய்தே, யாவிற்றிகழுந் தலைவன்வலியவாண்டவாரூ ராவதரிக்கவருந் தவங்கள் புரிந்தார், யாவர்க்கு மெட்டாத விசைந்தவின்ப விசைஞானி யெனஞான மெளிதாமன்றே.

## ஆக்கியோன்பெயர்.

அத்தரடி யவர்கூட்டத் தில்லைவாழ் மந்தணர்பொய் யடிமை யிலாப் புலவராகில், பத்தர்முத லெழுவரோ டொன்பதின்ம ரோ டொன்பதின்மர்தனிப் பேரொன் றென்பதின்மராய, வித்தொகையிற் றொண்டர்சீ ருரைத்தான்வைத்த வீரிரண்டா யிரத்திருநூற் றைம் பத்துமூன்று, முத்தமநல் விருத்தத்திற் பயனுஞ்செய்யு ளுலகெழுபத் தைந்தெனநின் றுரைக்குமன்றே.

செல்வமிகு திருத்தொண்டத் தொகையிலுள்ளார் சிறந்ததனிப் பெயராக வறுபதின்மேன் மூவர், மல்லன்மிகு கூட்டப்பேரருள் சேர்ந்தார்கண் மாதவத்தோர் மும்மூன்று வகை பெற்றார்கள், இல்லறத்துந் துறவறத்து மிருந்து வாழ்ந்தே பியல்பாகச் சிவபதநான் கிசைந்தார்தம்மை, யல்லலறுத் தெனையாண்ட சைவ சிகாமணியா ரருட்புலியூ ருமாபதியா ரருள்செய்தாரோ.

திருச்சிற்றம்பலம்.

திருத்தொண்டப் பெரியபுராண சாரபாயிர முற்றிற்று.

---

குருலிங்க சங்கமங்களான் முத்திபெற்ற சமயாசாரியர்களாகிய வறுபத்துமூவர்கள் முதல், பொய்யடிமை யில்லாத புலவர்கள், பத்தர்கள், தனித் தொண்டர்களாகிய வெண்பத் தெண்மர்களும், சந்தானாசாரியர்களாகிய அறுவரோடுள்ள நாற்பத் தொன்பதின்மர்களும், மற்றையர்களும் சைவசமய திருநெறி வழாதோங்க சீர்திருத்தியவ ராதலால் சுந்தரமூர்த்தி நாயனார், உமாபதி சிவாசாரியார் இவர்களால் ஆதிசைவ மரபு விளங்கியதாலும், பன்னிரு திருமுறையோடுள்ள இவர்கள் திருமுறையும் ஆதிபுரஸ்தல புராணத்திற்கு மேற்கோளும் பாயிரமு மாயிற்று.

ஆதியிலுள்ள தேவாரத் திருப்பதிகத் தொகை.

| | |
|---|---|
| திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் | ௧௬௲ |
| திருநாவுக்கரசு நாயனார் | ௪௯௲ |
| சுந்தரமூர்த்தி நாயனார் | ௩௮௲ |
| ஆ லக்ஷத்து | ௩௲ |

இப்போதுள்ள தேவாரத் திருப்பதிகத் தொகை.

| | தலப் பதிகம். | பொதுப் பதிகம். |
|---|---|---|
| திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் | ௩௭௭ | ௭ |
| திருநாவுக்கரசு நாயனார் | ௨௭௫ | ௩௭ |
| சுந்தரமூர்த்தி நாயனார் | ௯௭ | ௪ |
| | ௭௪௯ — | ௪௮ |
| | ஆ ௭௯௭ | |

இத்தேவாரத் திருப்பதிகங்கள் எழுநூற்றுத் தொண்ணூற்றேழும் அடங்கிய திருமுறையே அடங்கன்முறை யெனப்படும்.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

எயினனூர் சந்தானபுரியென்று வழங்கும்

# ஆதிபுரஸ்தலபுராணம்.

## க்ஷேத்திரவைபவகாண்டம்.

### சிவதலவத்தியாயம்.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

* நபமணிநுழைதராதரைமிசவனத்தின்னாளுச்
சுபமணிபவராய்நாளுஞ்சுருதியினுச்சிமேவிச்
செபமணிபொடியுந்தாங்கிச்செய்கடனியற்றிச்செல்லுந்
தபமணிச்சனனகாதிச்சைவர்கள்பலர்சார்வுற்றார். (க)

சார்ந்தவர்புராணமியாவுஞ்சந்ததஞ்சொலக்கேட்டின்னுந்
தீர்ந்திலேமக்குமாசைச்சேத்திரவைபவத்தாற்
கூர்ந்தவர்புகலக்கொள்ளிக்கூத்தனைக்குறுகனன்றென்
றோர்ந்தவண்விடுத்துக்காசிப்பெரும்பதியுவந்தடைந்தார். (உ)

கருவினையொழிக்குங்காசிப்பதியினிற்சிவனைக்கண்டு
மிருவினையொழிக்கும்யோகத்திசைந்தொளிவாண்முகத்தாற்
கருவிகள்கரணமாதிக்கலைதிரிபுடிமாமாயைச்
செருவினையொழிக்குமுத்திமண்டபத்திருக்குங்காலை. (ங)

சிவகணம்பலவுஞ்சூழ்ந்திருக்கயிலாயர்தன்னைப்
பவகுணமிலராய்நாளும்பத்தியால்வழிபட்டேத்தித்
தவகுணச்சீலராகிச்சதுர்மறைப்பொருள்களெல்லா
முபபுராணத்துங்காட்டியுரைசெயுஞ்சூதர்வந்தார். (ச)

---

* நபமணி - நபோமணி.

வந்தவர்தமக்குப் * பாத்தியாயமுஞ்செய்திருத்திக்
கந்தமாமலர்கவேிக்கனலிடுமெழுகாயுள்ளம்
நைந்துநைந்துருகிக்கண்ணீர்நானிலந்தோயவீழ்ந்து
மெந்தையேகுருவேயென்றுமேற்றினர்முனிவரெல்லாம். (ரு)

ஏற்றியமுனிவர்சூதரொழின்முகமலர்தல்கண்டிங்
காற்றவும்புராணமெல்லாமறிந்தருட்டிருவுமுள்ளீர்
தோற்றுமிக்காசியாதிப்பதிகளிற்சிறந்ததாயு
மூற்றமாம்பொருளைநல்குமோர்பதியுணர்த்துமென்றே. (சா)

மண்டபந்தன்னிலெம்மான்மலரடியிணையையுன்னி
யெண்டிசைமுனிவர்நாப்பணெய்தியங்கிருந்தார்தம்மை
யண்டமும்புவியுமின்னுமளிதராக்கலைகளியாவுங்
கொண்டவன்சீடனேக்கிக்குறித்திதுபுகல்வதானன். (எ)

தெளிவுறுநீங்கள்கேட்டுச்சிந்தனைசெய்யுமாறிங்
கெளிமையு † முனிவன்பாற்கேட்டுள்ளதைவிளம்பமேன்மேற்
களிவுளன்பாலினெய்போற்காட்டத்தினெறிபோலெல்லாத்
தளியுளும்வாழுமன்பர்பொருட்டவன்சரிதந்தன்னில். (அ)

கொடுமுடியாயிரத்தெண்ணொடும்வளர்கைலைமேவுந்
துடியிடையுமையுந்தானும்விடையினிற்றோன்றிஞானப்
பொடியொடுமணியுந்தாங்கிப்புண்ணியர்க்கருளவிண்ணோர்
முடியொடுவணங்கிச்சூழமுறணமையினிருக்குமன்னே. (கூ)

தனுவெனவளைந்தமேருந்தன்முடிநூற்றெட்டோடு
மனுவினுக்கரியசெம்பொன்வழங்கிமண்ணடுவில்வாழும்
பனைக்கரியுரித்தோன்காசிப்பதிவிஸ்வநாதன்கங்கைப்
புனற்கரையிறப்போர்காதிற்றாரகமுத்திநல்கும். (க0)

சிலந்தியுமரவெறும்பித்திண்ணன்கீர் ‡ பனவன்மற்றோர்
நலந்திகழ்முத்தியெய்தஞானப்பூங்கோதையோடு
வலந்திகழீசன்மன்னவளங்கொளுஞ்சீகாளத்தி
பலந்தரும்பற்குனர்க்கும்படைபெறும்பண்பினாலே. (கக)

---

* பாத்தியாயம் - பாதமலம்புதல்முதலிய வுபசாரம்.

† முனிவன் - வியாசன்.

‡ பனவன் - சிவகோசாரியன்.

முக்கம்பனுகுமேகாம்பானயனரியான்முன்
சொக்கமாப்பலிகள்செய்யத்தோன்றியேவரங்கடந்து
மக்களிந்தியங்கொள் * சூரன்மாண்டபின்கம்பவெள்ள
மிக்கொளவிருத்தழும்புமேவினன்கச்சியானே. (கஉ)

அட்டமாவசுக்கணந்தியிந்திரன்மால்வணங்கிச்
சிட்டவச்சடாயுசம்பன்சண்ட † னச்சண்டகுத்தன்
நட்டராம்பூடாவிர்த்தாக்கழுக்களுநால்யுகத்தும்
வட்டமிட்டினும்பூசிக்கவரந்தருங்கழுக்குன்றமே. (கங)

அரியயன்றனக்குநாப்பணனலுருவாகித்தோன்றிப்
பெரியர்கீரலநாமென்னப்பெருந்தவஞ்செய்யுமைக்குப்
பிரிதராபாகநல்கிப்பின்புழுப்பூனை ‡ யுன்னி
மரிதராக்கணங்களாகவருளண்ணுமலையுந்தானே. (கச)

மாலவன்பிரமனட்டவசுக்கண்மாதேவிவன்னிக்
கோலமார்விபசித்தன்பார்குறுமுனிச்சசிவன்னத்தோன்
சாலவும்பூசைசெய்யத்தனித்தனிமுத்திநல்கி
ஞாலமும்வாழ்குமய்யனம்மைசேர்முதுகுன்றம்மே. (க௫)

## திருவதிகை வீரட்டான லிங்கோற்பவம்.

### திருவிழாமகிமை.

மோகினிக்காதனீங்கமுளையினையளித்தன்னுக்
காகவோர்தலமைநல்கியவள்செயுமரியபூசை
யோகினுக்கிரங்கிலிங்கத்தொருமுதரேன்றிப்பண்டைத்
தேகமுங்கொடுக்கமாயோனதிகையைவிழவுசெய்தான். (கசு)

### தென்கங்கைக் கெடிலமகிமை.

மாலினிப்புணர்ந்தகாலைவந்திடுஞ்சுவேதகீர்த்தென்
பால்வருங்கெடிலக்கங்கையதனிற்பன்னிருமாதத்தி
னுல்வரும்பிறப்புச்சட்டிக்கிரகணத்தம்மாவாசை
காவ ¶ மாகோத § யர்த்தங்கலக்குநாண்மூழ்கிப்பேறே. (கஎ)

* சூரன் - வண்டாசூரன். † அச்சண்டன்-பிரசண்டன். ‡ உன்னி-குதிரை.

¶ மாகோதயமாவது வைகாசிமாசத்தில் சோமவாரத்திலே கிழேகூடிய வைகளெல்லாங் கூடிவரும் அருணோதயகாலம்.

§ அர்த்தோதயமாவது தை மாசத்தில் ஆதிவாரமும் அமாவாசை ஆதியும், திருவோண நடுவும், விதிபாதயோக அந்தமும் கூடிவருகிற அருணோதயகாலம்.

## வீரட்டானலிங்கமகிமை.

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

அட்டவீரட்டமதனுடைத்தலங்கட்கதிகமென்றுரைத்திடுமதிகை
நட்டமாடுவனைக்கற்பகக்களபநாயகநந்தியீச்சுரனைச்
* சட்டமாமுகனைப்பெரியநாயகியைத்தக்கணாமூர்த்திசண்டீசச்
† சிட்டவீரட்டத்தேவையுந்துதித்துச்சிந்திக்கிற்சித்தெலாந்தருமே.

### பிரமலிங்கமகிமை.

அரியய னிருவர் பெரியரொன் றுரைக்கு மனுசித மகலவெம் மரனார், எரியுருவாகி நடுவுற வடியை யேனமு மகிழ்ந்திலுங் காணு, தொருசிறை யிருக்கப் பறந்தெகின் முடியுங் கண்டனன் கைதை யே கரியென், றுரைசெயும் பொய்மை யதிகையி னொழித்தா னொருலிங்க பூசனை யதனால். (கசு)

### திரிபுராதிகளரசாட்சி.

காசிபவமிசத்தாரகாக்கனுந்தேர்கன்மகராக்கனன்மாலிப்
பேசுபுதவத்தாற்பூசையாலரண்கள்பெற்றாசாண்டுமால்பேதத்
தாசுளராகமதிரவிபுவியுமருத்துகளிமையமென்கிரியுந்
தேசுறுமுருளைப்பீடமாம்படிகள்கொடிஞ்சிறாணுகவேதிரட்டி. ()

உதையமு மத்தக் கிரிகளுநங் கூம்பா யொண்மறை நான்கு மோ ‡ டுனியாப், பொதுவியற் புரண வங்கசாத்திரமும் பொன் மணிச் சாரதி யயனுய்க், ¶ கதிரமால் மேருச் சிலை § யரிநாணக் கலை மகள் வின்மணிப் பெருந்தேர், ‖ சிதைவுறுத் தேவ ரியாவருஞ் சூழத் திரிபுரய் கொண்டுவந் தடைந்தார். (உக)

### திரிபுரதகனம்.

இருந்தவர் மமதை யறிந்திர தத்தி னேறியுட் காரவச் சொடி யப், பெருந்தகை யறிந்து புந்நகை புரியப் பின்னையின் கேள்வ னோர் \$ பகடாய்த், இருந்திழை யுமையோ டரனையுந் தாங்கத் திரி

---

* சட்டமாமுகன் - ஆறுமாமுகக் கடவுள்.

† சிட்டவீரட்டம் - பெரியோர்களுக் கருளும் வீரத்தம், அல்லது சற்சன ராகிய தெய்வத் தொண்டர்களுக் கருளும் வீரட்டம்.

‡ உன்னி - யென்பது உனியெனக் குறைந்து குதிரை யெனும் பொருள் தந்து நின்றது. ¶ கதிரம் - அம்பு. § அரி - பாம்பு. ‖ சிதைவுறு - அழிதலிலா. \$ பகடு - இடபம்.

புர மெரியவெந் நகையால், மரிந்திடா *தவர்க்குந் தண்ணகை
புரிந்து வாயல்காப் பருளியு மறைந்தார். (உஉ)

### கருடலிங்கமகிமை.

காசிபன்மனைவி யிருவருள் வினதைக் கபடிலி கத்துரு வஞ்
சிப், பேசியசூளி னடிமைசெய் திடவும் பெரும்புகழ் கொண்டிடு
ங் கலுழன், ஏசறவுளனாய் முனிவன்சொ லதிகை யெய்தியங் கிலி
ங்கபூசனையால், வாசவனுலகி னமிர்தமுங் கொணர்ந்து வன்சிறை
மீட்டு வாழ்ந் தனனே. (உ௩)

### பாண்டவலிங்கமகிமை.

பாண்டு மைந்தர்களிற் றருமனை யசுவத் தாமதாகுஞ்சரம்ப
னுவென், றுண்டுனாத் தவன்செய் வஞ்சத்தாற் சொலும்பொ யா
ரிய னத்தியுமகலப், பூண்டசரீரி தன்னொடு முனிவன் புகல்மொழி
கேட்டுடன் போந்துச், சேண்டொடு மதிகைக் கோபுரம்வணங்கி
த் தென்கங்கை யாடியுட் சென்றார். (உ௪)

தானைகள்சூழ வந்தற மகற்குந் தவுமிய முனிவனார் விதியா,
யானசங்கற்பஞ் செயவரி தீர்த்த மாடியே தம்பிமா ரோடு, மூன
மொன்றின்றி லிங்கபூ சனைகொண் டொருமதி யுணவொழித் தற
ஞ்செய், தினவெம்பழிக ளகன்றர சாண்டா னிக்கலிச் சித்துஞ்சே
யின்றான். (உ௫)

### நால்விதலிங்கமகிமை.

மாலவன்பூசை செய்திடு மிலிங்கம் வழிபடு வார்க்கிட்ட சித்
திச், சாலவுமருளும் பிரம லிங்கத்தாற் சாரப மிருத்தியில் லாயுள்,
வாலிதாயளிக்குங் கருட லிங்கந் தான்வலிதரும் பணிவிட மகற்
றுஞ், சீலமாய்ப்பாண்டு மைந்தர்செ யிலிங்கந் தேரிக லொழித்த
ருள் தருமே. (உ௬)

### தீர்த்தமகிமை.

கங்கையாங் கெடிலஞ் சக்கரதீர்த்தங் காலையிற் றோய்ந்துச்சி
யதனில், அங்கையா லறுநூற் றறுபதோடாறு கோடியாந் தீர்த்த
ங்க ளழைத்துக், கங்கையும் பார்க்கக் கலந்தவச்சூல கங்கையுட்
கொண்டவ ணிருக்குஞ், சங்கரசுயம்பு லிங்கமுந் தொழுதாற் சக
த்தினில் வாழ்வெலாந் தருமே. (உ௭)

---

*அவர் - மூவர்.

"லிங்கம்" என்பது லிங், கம் எனப்பிரியும். லிங் - சிவம், கம் - சொரூபம் லிங்கம் சிவசொரூபம். ஓரோரிடத்து லீயம், கம் எனவுமுள்ளது. சிவசொரூபமாகிய லிங்காகாரம் ஸ்ரீ பிரணவ பஞ்சாக்ஷர வடிவமாம். எங்ஙனமெனில்; அடிபீடம் - ஓங்காரம்; நடுக்கண்டம் - அகாரம்; மேற்பீடம் - உகாரம்; மேற்பீடத்தி னுள்வட்டம் - மகாரம்; லிங்கவட்டம் - விந்து; லிங்கம் - நாதம்; இது வாசக மந்திரமாகிய கற்பிதவடிவம். இன்னும், அடிப்பீடம்-கிரியாசத்தி; நடுக்கண்டம் - ஞானசத்தி; மேற்பீடம் - இச்சாசத்தி; மேற்பீடத்தினுள்வட்டம் - ஆதிசத்தி; லிங்கவட்டம் - பராசத்தி; லிங்கம் - சிவம். இது வாச்சிய மந்திரமாகிய உண்மைவடிவம். லீயம், கம் என்பது சிவசத்தி மந்திர சொரூபமாம். இஃதன்றியும் பஞ்சமூர்த்த பஞ்சசத்தி பஞ்சாக்ஷர சொருபங்களாகவுமுளது. இன்னும் இதனுண்மைகளை குருமுகமாக வெகுவிரிவாயுணரலாம். இவ்வுண்மைகளை யறியாத சில அறிவிலிகள் வேறுவிதமாகக் கூறித்திரிவர்.

---

குண்டைகூற் றுருடுதம் மானையைந் திரண்டெண் கோபதிகங்களுங் குலவல், விண்டை யெண்ணுடைய மேவியப்புரமும் விரிக்கினும் வியன் றலங்களுக்கும், பண்டை நாட்செல்லும் பதியென வழங்கும் பகர்தரு மதிகைக்குங் கீழ்பா, லண்டைவாழ் வதுவா முக்குரோசத்துக் கடங்கு சந்தானமா புரியே. (உ௯)

---

## திருஞானசம்பந்தசுவாமிகள் தேவார

### முதற்றிருமுறையில்

திருவதிகை வீரட்டானம் - பண் - தக்கராகம்.

---

திருச்சிற்றம்பலம்.

குண்டைக்குறட்பூதங்குழுமவனலேந்திக்
கெண்டைப்பிறழ்தெண்ணீர்க்கெடிலவடபக்கம்
வண்டுமருள்பாடவளர்பொன்விரிகொன்றை
விண்டதொடையலானுடும்வீரட்டானத்தே. (௧)

ஞாழல்கமழ்காழியுண்ஞானசம்பந்தன்
வேழம்பொருதெண்ணீரதிகைவீரட்டானத்துச்
சூழுங்கழலானைச்சொன்னதமிழ்மாலை
வாழுந்துணையாகநினைவார்வினையிலரே. (௰)

---

## திருநாவுக்கரசுசுவாமிகள் தேவார

### முதன்முறையில்

திருவதிகை வீரட்டானம் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கூற்ருயினவாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியேன், னேற்ருயடிக்கே யிரவும்பகலும் பிரியாதுவணங் குவனெப்பொழுதுந், தோற்ரு தென்வயிற் றினகம்படியே குடரோடுதுடக்கி முடக்கியிட, வாற்றே னடியே னதிகைக் கெடில வீரட்டானத் துறையம் மானே. (கக)

போர்த்தாயங் கொரானையி னீருரிதோல் புறங்காட ரங்காநடமாடவல்லா, யார்த்தா னரக்கன் றனைமால் வரைக்கீ ழடர்த்திட்டருள்செய்தவது கருதாய், வேர்த்தும் புரண்டும் விழுந்தும் மெழுந்தாலென் வேதனையான விலக்கியிடா, யார்த்தார் புனல்சூழ திகைக்கெடில வீரட்டானத் துறையம் மானே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்திசுவாமிக ளருளிச்செய்த

### முதன்முறையில்

திருவதிகைவீரட்டானம் பண் - கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

தம்மானையறியாத சாதியாருளரோ சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன், கைம்மாவி னுரியானைக் கரிகாட்டிலாட லுடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத், தெம்மான்ற னடிக்கொண்டென் முடிமேல் வைத்திடுமென்னு மாசையால் வாழ்கின்ற வறிவிலாநாயே, னெம்மானை யெறிகெடில வடவீரட் டானத் துறைவானை யிறைபோது மிகழ்வன்போலியானே. (கங)

என்பினையே கலனுக வணிந்தானை யெங்க ளெருதேறும் பெருமானை யிசைஞானி சிறுவன், வன்பனைய வளர்பொழில்சூழ் வயனுவ லூர்க்கோன் வன்ருெண்ட னூரன் மதியாது சொன்ன, அன்பனையா வர்க்கு மறிவரியவத்தர் பெருமானை யதிகைமாநகருள்வாழ்பவனை, யென்பொன்னை யெறிகெடில வடவீரட் டானத் துறைவானை யிறைபோது மிகழ்வன்போ லியானே. (கச)

**எட்டாந் திருமறையென்று வழங்கும்**

## வாதவூர் மாணிக்கவாசகசுவாமிக ளருளிச்செய்த

"திருவாசகம்" திருத்தோணோக்கம், பிரபஞ்சசுத்தி
(தில்லையி லருளிச்செய்யப்பட்டது.)

---

*நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா. 9-வது பாடல்.*

---

*திருச்சிற்றம்பலம்.*

எண்ணுடையமூவரிராக்கதர்களெரிபிழைத்துக்
கண்ணுதலெந்தைகடைத்தலைமுனின்றதற்பி
னெண்ணிலியிந்திரரொத்தனையோபிரமர்களு
மண்மிசைமால்பலர்மாண்டனர்காணடோணோக்கம். (௧௫)

---

## திருப்பூவல்லி மாயாவிசய நீக்குதல்

தில்லையிலருளிச்செய்யப்பட்டது.

---

**இதுவுமது.**

*திருச்சிற்றம்பலம். 6-வது பாடல்.*

எரிமூன்றுதேவர்க்கிரங்கியருள்செய்தருளிச்
சிரமூன்றறத்தன்றிருப்புருவநெரித்தருளி
யுருமூன்றுமாகியுணர்வரிதாமொருவனுமே
புரமூன்றெரித்தவாபூவல்லிகொய்யாமோ. (௧௬)

---

*திருக்கோவையாரெனவழங்கும்*

## திருச்சிற்றம்பலக்கோவையார்.

(இயற்படமொழிதல்.)

வரிசிலையூரன் பரிசுபழித்த உழையர்கேட்ப வெழினகையுரைத்தது.

அஞ்சார்புரஞ்செற்றசிற்றம்பலவர்தண்கயிலை
மஞ்சார்புனத்தன்றுமாந்தழையேந்திவந்தாரவரொன்
னெஞ்சார்விலக்கினுநீங்கார்நனவுகனவுமுண்டேற்
பஞ்சாரமளிப்பிரிதலுண்டோவெம்பயோதரமே. (௧௭)

## ஒன்பதாந் திருமுறையென்றுவழங்கும்
## திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா.

க-வது. கோயில்.

பண் - பஞ்சமம் பத்தாவதுபாடல்.

திருச்சிற்றம்பலம்.

மடங்கலாய்க் கனகன் மார்புகீண்டானுக் கருள்புரி வள்ளலே மருளா, ரிடங்கொண்முப்புரம் வெந்தவிய வைதிகத்தே ரேறிய வேறு சேவகனே, யடங்கவல் லரக்க னருட்டிரு வரைக்கீழடர்த் தபொன் னம்பலத் தரசே, விடங்கொள்கண் டத்தெம் விடங்கனே யுன்னைத் தொண்ட னேன் விரும்புமா விரும்பே. (௯ அ)

## பத்தாந்திருமுறையென்றுவழங்கும்
## திருமூலநாயனார் திருமந்திரமாலை.

இரண்டாந்தந்திரம் அகத்தியம்.

பதிவலியில் வீரட்டமெட்டு-ஐந்தாவதுபாடல்.

திருச்சிற்றம்பலம்.

அப்பணிசெஞ்சடையாதிபுராதனன்
முப்புரஞ்செற்றனனென்பர்கண்மூடர்கள்
முப்புரமாவதுமும்மலகாரிய
மப்புரமெய்தமையாரறிவாரே. (௯௯)

## பதினோராந்திருமுறையென்றுவழங்கும்
## கபிலதேவநாயனாரருளிச்செய்த
## சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை.

12 - வது பாடல்.

திருச்சிற்றம்பலம்.

மதிமயங்கப்பொங்குகோழிருட்கண்டவவிண்டவர்தம்
பதிமயங்கச்செற்றகொற்றவில்வானவநற்றவர்சூழ்
அதிகைமங்கைத்திருவீரட்டவாரிட்டதேனுமுண்டு
கதிமயங்கச்செல்வதேசெல்வமாகக்கருதுவதே. (௱)

## பனிரண்டாந் திருமுறையெனவழங்கும் பெரியபுராணத்துள்

# திருநாவுக்கரசுநாயனார் புராணம்.

உ௬௩-வது. பக்கம். ௬௪௰-ம். பாடல்.

திருச்சிற்றம்பலம்.

திரைக்கெடிலவீரட்டானத்திருந்தசெங்கனக
வரைச்சிலையார்பெருங்கோயிலுழுதுவலங்கொண்டிறைஞ்சித்
தரைத்தலத்தின்மிசைவீழ்ந்துதம்பிரான்றிருவருளால்
உரைத்தமிழ்மாலைகள்சாத்துமுணர்வுபெறவுணர்ந்துரைப்பார். ()

வேறு.

நீற்றானிறைவாகியமேனியுடனிறையன்புறுசிந்தையினேசமிக
மாற்றார்புரமாற்றியவேதியனைமருளும்பிணிமாயையறுத்திடுவான்
கூற்றாயினவாறுவிலக்ககிலீரெனநீடியகோதிருப்பதிகப் [ல்.
போற்றாலுலகேழின்வருந்துயரும்போமாறெதிர்நின்றுபுகன்றனரா

தடுத்தாட்கொண்டபுராணம் அ௩-ம் பாடல்.

உடையவரசுலகேத்துமுழவாரப்படையாளி
விடையவர்க்குக்கைத்தொண்டுவிரும்புபெரும்பதியைமிதித்
தடையுமதற்கஞ்சுவனென்றங்ககரிற்புகுதாதே
மடைவளர்தண்புறம்பணையிற்சித்தவடமடம்புகுந்தார். (௪௩)

---

யாவர்க்குந் தோன்றாத் துணைச்சுரன்றேகை யாம்பிகைவாழ் கனிவனத்தைச், சேவிக்கு மவர்க்கும் வியாக்கிர புலிக்குந் திருவருள் விளக்கமண் கல்லும், நாவினுக் கரையர்க் கொருபகடாக்கு நாலைசேர்பா திரிப்புலியூர், மேவிய பெண்ணைக் கெடிலமுத் தரமாமெழில் வடபுலிக்கு மேற்கரியூர். (௪௪)

வாமனன் பூசைசெய்யு மாணிக்க வல்லியம்மேனி மாவளலைத், தாமஙங் கொள்ளுமிருடி கணிதியைச் சம்பந்தர் பாடியே சரித்துக், காமர்சேவடியைப் பிடித்தருள் மடுத்துக் கருணை மாணிக் குழிவிடுத்துத், தேமலர்ப் பொழில்சூ ழரிபுரி ஞானமண்டபத் திருந்தனர் *தொரால். (௪௫)

---

*தோரால் - என்பது தொரால் எனக்குறிகியது.

* இந்திரன் றீர்த்த மெழுமுண்டிச் சுரத்து ளெங்கை காளுர் பெருங் குழலி, பந்தமில்நாவுக் கரையர்சொற் றெளிவார் பைரவ நுக்ர வீரியரும், விந்தையாப் பூசை செய்வடுகேசர் வியன்வடு வகிர்க்கணிப் பெண்ணே, வந்தொரடும் வடுகூர் ஞானசம்பந்தர் வள திருப் பாட்டில் வாழ்வதுவே. (சசு)

வேறு.

மரணமில்முனிவர்தங்கண்மனம்வியப்புறவுஞ்சூதப்
புரணிகருரைக்குந்தெய்வத்தலங்களிற்பெரியராலுஞ்
சரணமுமெய்திவாழ்தல்ரகசியபக்தஞ்சொல்லற்
றருணம்வேண்டுவதெடுக்கச்சேக்கிழார்முறையும்விள்ளும். (சஎ)

தாமீசனொன்றுசொல்லுந்தருக்கினர்வணங்குநங்கை
வாமீசரெவர்க்குமீசர்மான்மழுப் § பகட்டர்வேணிச்
சோமீசரன்பர்நேசர்தொல்வரிக்கரித்தோலாடைக்
காமீசர்வில்வநல்லூர்கருணையர்க்கரியூர்தென்பால். (சஅ)

பதஞ்சலிப்புலிக்காலற்குப்பதந்தருந்தைப்பூசத்தின்
மதன்சகன்றெரிசனற்குமன்னியமுத்திநல்கும்
விதியொடுமடியைச்சூடுங்கண்ணன்பால்முனிக்களிக்கு
மதியொடுபதிகொடுக்குங்கூத்தன்வாழ்மன்றுள்தானே. (சகூ)

மன்பராசரன்மாற்சோழவளற்கௌதமனூர்சம்புப்
பன்சுதயானைத்தேவர்பகர்தருசிலம்பிமற்றுந்
தன்வினைபோக்கும்பூசைத்தன்மையாலெல்லாமெய்திச்
சின்மயமானூர்யானைக்காவினிற்சிவனுறுமே. (ருo)

புற்றிடங்கொள்ளுபெம்மான்புகல்முசுகுந்தனுலு
† மிற்றிடங்கொளிச்சத்தவிடங்கனெனன்றொருபேர்வாங்கிப்
பற்றுளமுனிவர்தேவர்பரவவுமுத்திநல்கிக்
கற்றவர்க்கருளப்பின்னுங்கருணைகொண்டிருந்தாரூர். (ருக)

இந்திரன்பழியைப்போக்கியானைக்குச்சாபநீக்கிக்
கந்தமார்கடப்பங்கானங்கழிதரநகரமாக்கி
‡ விந்தமார்பாண்டியர்க்குத்தடாதகைதனையுநல்கி
வந்திடுஞ்சுந்தரற்கோன்மணம்புரிந்தாசுஞ்செய்ய. (ருஉ)

---

* இந்திரன்றீர்த்தம் - கண்ணாயிரன் றீர்த்தம். ஓடுமென்பது - ஓடுமெனக் குறிப்பது. § பகடு - ஓடம்.

† இற்று - இத்தன்மைத்து. ‡ விந்தம் - மலை.

வெள்ளியம்பலத்தின்முன்னம்பதஞ்சலிக்குயவரிக்குங்
கொள்நடமியற்றிக்குண்டோதரற்கனமிட்டுப்பின்னும்
விள்ளொணுவையையன்னக்குழியழைத்தலர்க்களித்தும்
எள்ளலில்காஞ்சனைக்குமெழுகடல் * விளித்தலீய்ந்தே. (௫௩)

மாமலைத்துவஜன்றன்னைமன்னியசொர்க்கம்விட்டுப்
பூமியினழைத்தளித்துப்புகறடாதகைக்குமுக்ரக்
கோமகனருளிக்கோல்வேல்சென்டொடுவளைகொடுத்துத்
தோமலைக்கடலுஞ்சுண்டத்தூயவேல்விடுக்கச்செய்தே. (௫௪)

எதிர்ந் † தரிமுடியுமோடவேர்வளையெறிந்துமேரும்
அதிர்ந்தடிவணங்கச்சென்டாலடித்துநால்வேதத்திற்கு
முதிர்ந்ததோர்பொருளளித்துமுடிக்குமாணிக்கம்விற்றும்
விதிர்ந்திடும்வருணனேவும்விரிகடல் ‡ வறளச்செய்தும். (௫௫)

வருணனுலேவுதாரைத்தன்னையுந்தடுத்தினட்டை
மருவுநான்மாடக்கூடலாக்கியுமண்ணிலெல்லாந்
தரவும்வல்லவராச்சித்துத்தான்விளையாடித்தக்கான்
கருணையாற்கல்லானைக்குக்கரும்பினையருந்தவைத்தும். (௫௬)

சமணர்களேவும்யானையெய்தியுங்கௌரியம்மைக்
கிமையினின்விருத்தப்பாலக்குமாரனுயின்பளித்துங்
கமைநிர்த்தப்பாண்டியர்க்குக்கான்மறியாடிநின்றுந்
தமனையைக்கொல்வேடற்கும்பழிக்கஞ்சிமணத்தளித்தும். (௫௭)

தாய்தனைப்புணர்வான்றந்தைதன்னையுங்கொலைபுரிந்து
மேயவேதியனூர்பாவவினையொழித்தாரியன்றன்
றாய்மனைக்காகவங்கம்வெட்டியுந்துட்டநாக
மாய்தரச்செய்துமாயப்பசுவினைவதைத்தளித்தும். (௫௮)

சாமந்தசவுந்தரற்குச்சேவகராகித்தோன்றித்
தாமந்தமெய்க்காட்டிட்டுத்தரித்திராப்பஞ்சகாலம்
போம்படிப்பாண்டியர்க்குப் § பொற்கிழியளித்துமாதர்க்
காம்படிக்கைகடொட்டுவளையுல்கள்விற்றுமன்பாய். (௬௧)

அட்டமாச்சித்தியெல்லாமியக்கியர்க்குபதேசித்தும்
இட்டமீன்குறிக்குவேறுவிடபநற்குறிக்கிறுக்கி

---

* விளித்தல் - அழைத்தல். † அரி - இந்திரன். ‡ வறள்ல் - சண்டல்.
§ பொற்கிழி - உலவாக்கிழி.

நட்டபாண்டியன்படைக்குவிறண்ணீர்ப்பந்தலிட்டுச்
சிட்டபொன்னனையாட்காகச்சிரசவாதஞ்செய்தும். (சு0)

சோழனைமடுவிலாழ்த்தித்தூயவேளாளனுக்கு
* மாழையுமருளிமாமனாகியேவழக்குரைத்தும்
வாழ்தரவரகுணர்க்குச்சிவலோகங்காட்டிமண்ணில்
ஏழைபோற்பாணனுக்கேவிறகுவிற்றிகலொழித்தும். (சுக)

சேரமான்பெருமானுக்குத் † திருமுகமதிகொடுத்திங்
கேரமான்பாணனுக்குமழையினிற்பலகையீய்ந்தும்
வீரமார்விறலியோடவிசைவாதுவெல்லச்செய்தே
வாரமாக்குருளைக்கெல்லாமணிமுலைகொடுத்துமிப்பால். (சுஉ)

**திருவாலவாயுடையார் சேரமான் பெருமாணாயனாருக்கு அருளிச்செய்த**
**திருமுகப்பாசுரம்.**

---

நேரிசை யாசிரியப்பா.

மதிமலிபுரிசைமாடக்கூடற்
பதிமிசைநிலவும்பானிறவரிச்சிறை
யன்னம்பயில்பொழிலாலவாயின்
மன்னியசிவனியான்மொழிதருமாற்றம்
பருவக்கொண்மூப்படியெனப்பாவலர்க்
குரிமையினுரிமையினுதவியொளிதிகழ்
குருமாமதிபுரைகுலவியகுடைக்கீழ்ச்
செருமாவுகைக்குஞ்சேரலன்காண்க
பண்பால்யாழ்வல்லபாணபத்திரன்
தன்போலென்பாலன்பன்றன்பாற்
காண்பதுகருதிப் போந்தனன்
மாண்பொருள்கொடுத்துவரவிடுப்பதுவே. (சுங)

ஒருமையி னுரிமையினெனவும் பாடமுண்டு.

**திருவாலவாயுடையார் சேரமான்பெருமாணாயனாருக்கு அருளிச்செய்த**
**திருப்பிரபந்த முற்றிற்று.**

---

* மாழை - உலவாதகோட்டை.
† திருமுகமதியென்பது - பதினொராந்திருமுறைப்பிரபந்தங்கள்.

பாண்டியன்சுரத்தைநீற்றுப்பதிகத்தாற்பறக்கடித்துந்
தூண்டமண்வாதாலேமேனல்போகப்பச்சையாக்கி
மீண்டதாறிடவும்வாழ்கவெதிர்செலக்கழுவினேற்றி
யாண்சமிக்கிணறிலிங்கமழைத்தொருகரிசெய்வித்தார். (எஎ)

திருநள்ளாறு - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தளிரிளவளரொளிதனதெழில்தருதிகழ்மலைமகள்
குளிரிளவளரொளிவனமுலையிணையவைகுலவலில்
நளிரிளவளரொளிமருவுநள்ளாறர்தநாமமே
மிளிரிளவளரொரியிடிலிவைபழுதிலைமெய்ம்மையே. (எஅ)

சிற்றிடையரிவைதன்வனமுலையிணையொடுசெறிதரு
நற்றிறமுறுகழுமலநகர்ஞானசம்பந்தன்
கொற்றவனெதிரிடையெரியினிலிடலிவைகூறிய
சொற்றெரியொருபதுமறிபவர்துயரிலர்தூயரே. (எகூ)

திருநள்ளாறு - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்தபூண்முலையாள்தன்னொடும்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கண்வெள்ளேற்றண்ணல்பரமேட்டி
யாகமார்த்ததோலுடையன்கோவணவாடையின்மேல்
நாகமார்த்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (அ0)

தண்புனலும்வெண்பிறையுந்தாங்கியதாழ்சடையன்
நண்புநல்லார்மல்குகாழிஞானசம்பந்தனல்ல
பண்புநள்ளாறேத்துபாடல்பத்துமிவைவல்லார்
உண்புநீங்கிவானவரோடுலகிலுறைவாரே. (அக)

திருப்பாசுரம் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வாழ்கவந்தணர்வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனாமமே
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே. (அஉ)

நல்லார்கள்சேர்புகலிஞானசம்பந்தனல்ல
வெல்லார்களும்பரவுமீசனையேத்துபாடல்
பல்லார்களும்மதிக்கப்பாசுரஞ்சொன்னபத்தும்
வல்லார்கள்வானோருலகாளவும்வல்லரன்றே. (௮௩)

---

துன்முகவேடன்மூர்த்தித்திருநெடுமாறன்மாணித்
தன்குலச்சிறையுமுத்திச்சாருமாற்பலநாமங்கொள்
மன்றிருவாலவாயான்மதுரைமீனாக்ஷியோடு
மென்முகமிருக்குமென்றுஞ்சுந்தரச்சொக்கன்மேவி. (௮௪)

---

நற்கீரதேவர், கபிலதேவர், கல்லாடனார், பாணதேவர், இளம்பெருமானடிகள், அதிராவடிகள் முதலியர் பொய்யடிமையில்லாத புலவர்களாம். இவர்களில் நற்கீரதேவ நாயனார், கைலைபாதி காளத்திபாதியந்தாதி, ஈங்கோய்மலையெழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழுகூற்றிருக்கை, பெருந்தேவபரணி, கோபப்பிரசாதம், காரெட்டு, போற்றித் திருக்கலிவெண்பா, திருமுருகாற்றுப்படை, கண்ணப்பதேவர் திருமறம் முதலிய பிரபந்தங்களையும், கல்லாடனார் கண்ணப்பதேவர் திருமறமென்னும் பிரபந்தத்தையும், கபிலதேவர், மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை, திருவந்தாதி யென்னும் பிரபந்தங்களையும், பாணதேவர், சிவபெருமான் திருவந்தாதியும், இளம்பெருமானடிகள், சிவபெருமான் திருமும்மணிக்கோவையும், அதிராவடிகள், மூத்தபிள்ளையார் திரு மும்மணிக்கோவையும் திருவாய்மலர்ந்தருளி மெய்யன்போடு சிவத்தொண்டுசெய்து சிவானந்தப் பெரும்பேறு பெற்றனர்கள்.

நம்பியாண்டார் நம்பியடிகள், காரைக்காலம்மையார், ஐயடிகள், சேரமான் பெருமாணாயனார், திருவாலவாயுடையார், பட்டினத்தடிகளான பிள்ளையார்முதலிய வடியார்களும் மெய்யன்போடு திருவாய்மலர்ந்தருளி சிவானந்தப் பெரும்பேறு பெற்றனர்கள்.

நாயன்மார்க ளறுபத்து மூவரோடுள்ள வாறுதொண்டர்களும், ஒன்பதுபுறத் தொண்டர்களும் இவர்களருளிய பாசுரவண்ணக் குறிப்பும், பனிரெண்டு திருமுறையு மேற்கோளாகக்கொண் டடங்கியுள்ளதிப்புராணமெனக் கொள்க:

---

கயிலைமாமலையுமன்றுங்கருதிப்பின்னாலவாயிற்
பயிலுபசாந்தமெய்திப்பகர்திருவாரூர்கண்டு
முயலுபுயோகந்தன்னால்மூர்த்தியையிதையஞ்சேர்த்தச்
செயல்கொளித்தலங்கணாளுஞ்சேவைசெய்வார்க்கும்பேறே (௮௫)
இப்பெருமதுரைமன்றுமெழில்பெறுங்கயிலைமன்றுஞ்
செப்பொணாஞானமன்றிற்சேர்ந்திடும்வெளியினிம்மூன்

றொப்புறுவாரூரன்பரிதயமன்றுக்குதக்கின்
வைப்பெனவோங்குமெந்தையாதிமாபுரியுமாதோ. (அகூ)

எண்சீரடியாசிரியவிருத்தம்.

கைலைமா மேரு காசி காளத்திக் கச்சித் தண் கழுக்குன்று சோண, சைலங்கா மீசந் தண்வடு கூர்கண் டருமுண் டீச்சரங் க ணிப் புலியூர், பயில்தரு மாணிக் குழிதிரு வதிகைப் பழமலை மன் றுஎநர் பனைக்கா, புயல் சொரி கருணை யன்பர்க ளிதைய மாலவா ய்ப் புரியினன் பதியே. (அஎ)

சிவதலவத்தியாய முற்றுப்பெற்றது.

---

## தலமகிமை.

கலிவிருத்தம்.

சிவதலங்களுக்கெலாஞ்சிறந்ததாய்ச்செயும்
பவங்களையொழிக்குநற்பான்மையாய்ப்பெருந்
தவங்களையளிக்குஞ்சந்தானமாபுரிப்
புவனியிலருடரல்புகலக்கேண்மினே. (அஅ)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

எத்தலங் கட்கு மதிகமித் தலமென் றியம்புமா மறை புரா ணங்கள், முத்தியே விரும்பு மவர்தமக் கென்று முயல்வுறச் செய் விக்கு முறையால், சித்திபுத் திகளுந் தருவதிங் கெனினுந் தீர்வி னின் முத்தியே வினைமற், றொத்தபோ துதவு மாதிமா புரியத் தல த்துறு மிருதிவைப் பிதுவே. (அகூ)

வடபெண்ணை யாமக் கெடிலத்தி னுதக்கின் மத்திசேரரிபு ரிக் கோசத், தடமதி லேழு மொன்றெனச் சூழுஞ் சத்தமா முனி வருந் தவத்தாற், குடவிமா னத்திற் றனித் தனியாகக் குந்தியுமிரு ப்பர் வான்கோயிற், படச்சுவர்த் தென்னின் ராவணன் வாலிப் பாரதி யோடும்வாழ்ந் திருப்பர். (கூ0)

வள்ளியோ னிர்த்தக் கணபதி நந்தி வள்ளிதெய் வானை நாய கனும், விள்ளொணுப் புகழ்கொ ளரி பிரமாதி வித்தகச் சோதி மற்றவரு, முள்ளுறை கோயி லிடங்களின் வாழ்வ ருத்தமத் தனி க்கிரு மருங்கும், கள்ளமிற் கேளம் புன்னைசெய் நகைக்கு மூமிழ் தலைக் கடுக்குங்கட் சொரிதல். (கூக)

* நந்தி மந்தாரஞ் சண்பகங் கொன்றை † ஞாழலும் பூத்தரன்
கழற்கீழ், வந்தனை புரிவோர் விதியினலெடுக்க வளைந்தவர்க் களித்
தல்போற் றழைந்துக், கந்தமுங் கமழ் கத்தளிமருங் கிருக்குங் கற்
பகப் பவள மல்லிகையுஞ், சந்தமார் குல்லை முல்லையைப் பழித்துச்
சந்ததமல ருதிர்த்திடுமே. (௩௨)

சோலைக ளெங்கும் பரவியே யிருக்குஞ் சுகங்களுஞ் சுருதி
சொல் விதியைக், காலையிற் பெரியோர் செவிகொளப் புகலுங்
கனியுணுங் குயில்களுங் கனிவில், நாலினோர் பொருளான் மேல
வ ரிகல்கொ ணெய்யினைக் கொடிக்கெலா நொடித்து, மாலையிற்
புகலும் பிரணவ மனுவை மந்திக ளுனிவழிப் படுமே. (௩௩)

அணிலெலாம் பணிசெய்வாரபி ஷேயங்க ளியாவையு மரன்மு
னங் காட்டிப், பணிவுறும் மலர்வா ழளிகளும் விளரிப் பதுமை
ராயகிமுனம் பயிலு, துணிபொருட் சிவமென் றுரைக்குஞ் சாரி
கையுஞ் ‡ சுனைமலர்த் துஞ்சனம் வெஃகக், கணிகைய ரெனவு நடிக்
குங் கேகயமுங் கவினிதற் சிதல்கறங் குறுமே. (௩௪)

மான்கலை பலவும் பிணையென்மா தர்க்கண் மன்வலைப் பட்
டொடீ மயங்குங், கான்றனிற் ¶ குளியங் § களபச்செண் டாடுங்
கழனியிற் செங்நெலும் விளைய, வான்கலை யுணரார் மதியெனக்
கலங்கி யருட்டமிழ்ப் பயனெனத் தெளிந்துத், தேன்பொழின் மு
றித்து மரிபுரிக் கால்வாய்த் தென்கங்கைக் கெடிலம்வந் தணமே.

அணைதருங் கால்வா யாவையு மறித்து மவரவர் விளைவுசெய்
தறுத்துப், பணைதனிற் குதிரின் மேட்டிற்போ ரிட்டுப் பாதியைப்
பகுதி யொக்கலுக்குந், துணைவர்தம் மேவ லாளர்க ளெவர்க்குந்
தொழுந்திருத் தெய்வ பொங்கலுக்கு, மிணையிலா வதிதித் திதி
முதல் பூசைக் கீந்தின்ப மெய்துவ ரிவர்பால். (௩௬)

மன்னிய வளங்க ளியாவுமே நிறைந்த வதிதளிக் கயல்வளர்
குடிக, டுன்னு || மூவாற்றுற் புயலெனப் படிவர் சுற்றங்கள் சூழ்த
ரத் தழைவர், பன்னிய விதியின் முறைமைக ளகலார் பற்பலச்
சாதிய ரேனும், இன்னல்க ளின்றி வாழ்தர விருப்ப ரெங்கணு மிப்
பெரும் பதியில். (௩௭)

---

* நந்தி - குங்குமமரம். † ஞாழல் - கோங்குமரம், ‡ சுனை - தடாகம்.
¶ குளியம் - புலி. § களபம் - யானைக்கன்று. || மூவாற்றல்-நீலநீர குடிவளம்.

வீதிக ளொழுங்கொன் றில்லதே யெனினும் விதியொழுங் குள்ளவர் விவிதச், சாதிக ளொழுங்கொன் றில்லதே யெனினுஞ் *சாதொழுங் குள்ளவர் தகையா, னீதிக ளொழுங்கொன் றில்ல தே யெனினு நிறையொழுங் குள்ளவர் நிமலன், † பூதிக ளொழுங் கொன் றில்லதே யெனினும் புண்ணிய வொழுங்குளர் புரியே. ()

தெய்வத வொழுங்கிற் றிறம்பலா ரெனினுஞ் சிவன்ற்றொழும் புள்ளவர் தெளிவாஞ், சைவத வொழுங்கைச் சார்கிலா ரெனினு ஞ் சகவொழுங் குள்ளவர் சமமுங், கைவத வொழுங்கிற் காணிலா ரெனினுங் கதியொழுங் குள்ளவர் கலைகண், மெய்வத வொழுங் கின் மேவலா ரெனினு ‡ மிசையொழுங் குள்ளவர் விதமே. (கூகூ)

கலையொழுங் குளர்தங் கதியிலா ரெனினும் § கமையொழுங் குள்ளவர் கருணை, நிலையொழுங் கதனை நேடிலா ரெனினு ¶ நிக மொழுங் குள்ளவர் நியமத், தலையொழுங் கதனின் றகையிலா ரெனினுஞ் ‖ சரவொழுங் குள்ளவர் தருமத், துலையொழுங் குளர் பாற் றுன்றிலாரெனினுஞ் + சுகவொழுங் குள்ளவர் தொடர்பே.

இப்புரிக் கொப்பா யிலையொரு புரியு மிரவிபூ சித்ததா லித ற்கும், ஒப்பிலா வாதி புரியென வாகு மொருமுறை யரிபுரி யென் பார், $திப்பிய சோதித் திரிபுர மெரியச் சிலைவில்சந் தானஞ்செய் ததனல், அப்பெயர் மருவும் புரியென வுரைப்பா ரவனியிற் சிற ந்ததிப் புரியே. (௧0௧)

ஆதிமாபுரி யென்ன திகையின் பெயரோ யமைதரு மரிபுரிக் கன்றூட், டிதிலார் வாழுங் கைலையி லிருந்துந் திரிபுர மெரிதரச் சுரரால், ஆதரவாங்தே ராக்கிநாற் படைவங் தனனகைவீர சந்தா னஞ், சோதிசெய் ததனு லிங்ஙன் | சந்தானத் தொல்புரியெனவழ ங்கியதால். (௧0௨)

அரிய சந்தானப் புரியின்வே தாங்கம் யாவையுங்கற்று வல் லவ ராய்ப், பெரிய சந்தான விர்த்தியும் பொறையும் பிறங்குபுச் சிலமுந் தவமும், உரியசந்தான நிலையுடனரற் கன்புள்ளவர் கை யிற் றினைத்தானம், புரிய சந்தானப் பொழிலெனப் புகழ்கொள் புண்ணியராகி வாழ்வாரே. (௧0௩)

---

* சாது - சற்குணம். † பூதி - சிவசின்னம். ‡ மிசை - உணர்வு. § கமை- பொறுமை. ¶ நிகம் - வேதம். ‖ சரம் - சுவாச நடை. + சுகம் - முத்தி. $ திப்பியம் - திவ்வியம். | சந்தானத்தொல்புரி - சந்தான ஆதிபுரி.

அன்ன தானங்கள் செய்பவர் தமக்கிங் கவியொன்றுக் காயிர மகமாய், கன்னிகா தானம் பசுபுவிதானங் கருதியே செயிற்சுர ருவார், துன்னுபு தீபதானஞ் செய்பவர் கடுணைக் கணுங்குருடிலாத் தூயோர், பன்னுபுத் தகத்தா னூமையை யொழிக்கும் பழியிலார் பிறக்கினு மிவரே. (கoச)

வெற்றியாப் பூணுற்றானஞ் செய்பவர்கள் விதியுலகடைவர் வேதத்தைக், கற்றவைத் தவர்க ளுருத்திர வுலகங் கம்பளத் தானம் நோய்களைந்து, நற்றவ முளராய்ப் பிறந்திங்ஙன் வாழ்வர் நவிலுருத் திரபரா யணத்தாற், பெற்றிடும் பலன்க ளளவிலை யொருக்காற் பேணியேவலங் கொள்வார் பரமே. (கoரு)

சுரர்முனி வோர்கண் மனுக்கண்மற் றவராற் றெழுதற்படுந் தானமா தானம், உரமுளார் யோக முள்ளவர் தவத்தோ ருறைவிடமிதிலெது வேனும், வரமுளார்க் கீய்ந்து வலஞ்செய்து வணங்கில் வழிவழித் தொண்டுளா ராகி, நரர்களென் பெயர்போய்ச் சுரர்களென் பெயரால் நண்ணுவார் சிவ னுலகிவரே. (கoசு)

தலமகிமை முற்றிற்றிற்று.

---

## தீர்த்தமகிமை.

தெளிவுளோ ரருளும் பொருளுங் கொள்பவர்வாழ் சிவதல மகிமையைச் சிவன்பா, லளிவுள முனிவர் நைமிச வனத்தி னந்தணர்க்குணர்த்திப் பின்றீர்த்த, முளேவினைத் திசையை மகிமையை முறையால் மொழிதர வடிக்கடி வணங்கிக், களிவினைத் தருமிக் கதையினுங் கேட்கக் கனிவுளோங் கனாயெனக் கனாவார். (கoஎ)

இத்தலப் பதிக்குப் பூர்வத்திக் கதனி னியம்பயன் றீர்த்தஞ் சீர்யமத், துத்தம வாவி தீர்த்தமுமேற்கி னோர்சிவஞான தீர்த்தமதாம், * அத்திரிச் சோம தீர்த்தமனு தக்கினக்கினித்திக் † கரிதீர்த்தம், வித்தகச் ‡ சலசத்தீர்த்தங் § கோவளியின் விளங்குறும் வினையொழித்திடவே. (கoஅ)

விளங்கு மீசானத் திசையினிற் புகழ்கொள் ளிருடியின் றீர்த்தமும் விளையார், தளங்கொ ளுயகிதன் சந்நிதிக் கெதிரிற் சரஸ்

---

* அத்திரியென்பது - அத்திரியென மரீஇயது.
† அரிதீர்த்தம் - சூரியபுட்கரணி. ‡ சலசம் - தாமரை. § கோவளி - வாயுதிக்கு.

வதி தீர்த்தந் தைமாசந், துளங்கமா வாசைப் பூரணைமாசித் தூய சங் கற்பத்தாற் றோய்ந்தும், வளந்தரும் பிரம தீர்த்தமும் படிந் து மன்னனுட் டானமும் புரிந்தே. (கoசு)

மன்னியவாலி தீர்த்தத்தும் பெரியோர் மருவுறும் ஞான தீர்த் தத்தும், துன்னிய சோதித் தீர்த்தத்து முளரி மதிரிஷி தீர்த்தத்து மூழ்கிப், பன்னுநோய் தீர்க்கும் பெண்ணையி னுச்சிப் பகலினிற் படிந்தனுட் டானத், தன்னியல் முடித்துப் பிதுர்முதற்றேவ தற் பணத் திதிகளுஞ் செய்தே. (ககo)

பலந்தருங்காயத் திரியிரண் டைம்பான் றரம்பணி யந்தியிற் கெடிலச், சலந்தனின் மூழ்கித் தபசெபமுடித்துத் தகுபிரதோட காலத்தில், வலஞ்செய்து மாதி புரிச்சிவமணியை மன்றள நாயகி யுமையை, நலமொடுநூறு தரமெழுத் தைந்தும் நவின்றுடன் றொ ழிற்சிவ மவரோ. (ககக)

வாணி தீர்த்தத்திற் றைமுதல் மாசி வரையமா வாசியும் மகிழ் ந்துப், பேணியைந் தெழுத்து மெண்ணியே மூழ்கிப் பின்னைகேள் வன்றொழு முறையின், றுணுமைப் பலகால் வணங்கிடிற் பேய் நோய் தன்னொடு மகன்று சன்மார்க்கம், காணுமாற் சைவ நிலைவ ளர்ந் தோங்கிக் கண்ணுதற் கழல் பெறுவாரே. (ககஉ)

பாற்குநமதியிற்பூரணைத்திதியிற்பன்னுபுச்சானவிப்பவன [ல்
மேற் * குடிலத்தினெழுந்துவந்தாழிக்தீர்த்தத்தும்நிறைவளிந்நாளி
ஏற்குனவிதியாற்படிபவரியாருமெழிலரிப்பதங்களெய்துவர்கள்
மாற்சுதன்றீர்த்தமாட்டிடினரற்கும்மாமகப்பலன்மிகத்தருமே. ()

† மாகனியாசவிதிப்படிதீர்த்தமகிழ்ந்தபிடேகஞ்செய்விப்போர்
தேகங்களுசமடையினுஞ்செலதிச்சூழ்புவிதானமெய்துவர்கள்
மாகமாய்க்காமிகாகமவிதியாற்பஞ்சசுத்திக்கொடும்பகலை
யோக ‡ ன்யாசமொடுபரிவாரதேவதையாரையுமுன்னி. (ககச)

ஆவினைந் தினைக்கொண் டான்முடிக் கணிந்து மயிர் தைந்தி ஹற் பதமனுவாற், கோ § வியாபினியா மறைமனு விதியாற் குணந் தருஞ் சோடசங் குறுகிப், பாவனை செய்துச் சிவன்முடிக் காட்

* குடிலம் - ஆகாயம். † மாகனியாசம்-ஏகாதசருத்திர வபிடேகம். மக னியாசமெனவுங்குறுகும். ‡ ந்யாசம்-கிரியை. § வியாபினியாமறை - வியா பித்திருக்கும் வேதம்.

டிப் பத்தியால் வழிப்படிற் பண்ணோர், பூவுல கதனிற் பிறக்கி னு ஞானம் பொருந்துபுப் புண்ணிய ராமே. (கக௫)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

புகலுங்கங்கைப்பிரயாகைப் * பாகைகோதாவிரிபொன்னிப்
பகலோன்யமுனைச்சரஸ்வதியுஞ்சிந்தும்படியும்பலன்களெலா
மகலாதருளுமுளரியயன்வாலிதீர்த்தமரிதீர்த்தஞ்
சகலதீர்த்தப்பலனருளும்ஞானதீர்த்தம்படிபவர்க்கே. (கக௬)

உரைச்சராயுருமதையுமோங்குங்கிட்ணைக்கோமதியும்
நிரைக்குஞ்சோணைக்கண்டகியுநிகரிற் † பருணிச் ‡ சனைநிதமுந்
திரைக்கைப்படவுமூழ்குமவர்க்கெல்லாமளிக்கும்வாணிமதிப்
பெருக்கோடிருடி§வட்ட¶மையுட்கொளிலித்தீர்த்தப்பலன்றருமே

அளவிறீர்த்தமாடுபலனியாவுமளிக்குமம்புவியிற்
களவுகாமப்பொய்கொலையும்புலையுந்தவிர்க்குங்கருதியுமுட் [கும்
கொளுவார்க்கின்றும்விதியினொடுபடிவார்க்கனந்தம்பலன்கொடுக்
விளவேயரிதாந்தென்கெடிலம்பெண்ணைப்பலனுமென்றுரைத்தார்.

தீர்த்தமகிமை முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

## மூர்த்திமகிமை.

தீர்த்தமகிமையிதுவெனவுஞ்செப்பலுணருமுனிவரெலாம்
வார்த்தையொன்றுமாடாமன்மௌனத்திருந்தும்வகுத்துரைப்பார்
கூர்த்தவறிவுந்திருவருளுங்கொள்ளுங்குருவேயித்தலத்தின்
மூர்த்தமகிமைச்சொலுமெனவேபணிவார்தம்பான்மொழிகின்றார்

வெளியினுலவும்ரவிமதிபோல்விளங்குஞ்சிவனுமரியுமொன்றாய்த்
தளியென்னுதிப்புரியதனிற்சாரக்கலைவைகுந்தங்
கொளுதலிலதாய்ச்சூனியமாக்குறுகமன்றுமிவைபோல
வெளியாயீரொண்கலையதனினிரண்டையளித்தும்நின்றனவே. ()

இதையமன்றுமதிகைக்குமொப்பென்றுரைக்குமிப்பதியின்
முதியவமுதின்றிருமூர்த்தமுகுந்தன்சுடர்க்கண்ணொளிமூர்த்தங்

* பாகை - சந்திரபாகை. † பருணி-தாமிரபருணி. ‡ சனை-அஞ்சனை.
§ வட்டம்-சக்கரம். ¶ மை-நீர்.

கதியேயருளுங்கருதுமவர்தமக்குவினையின்கட்டறுத்துத்
ததியினெய்போற்காட்டத்தினெரிபோல்விளங்குஞ்சங்கரனே. ()

அரியசோதிச்சந்தானத்தமருஞ்சிவனையரிக்கண்வளர்
பெரியசோதித்திருவுருவைப்பிரமன்மாலுந்தேடரிய
உரியசோதிப்பரம்பொருளையொப்புமுவமையிற்றனியைத்
துரியசோதிச்சுயஞ்சுடரையொருக்காற்பேணிற்*சுகந்தருமே. ()

முத்தியளிக்குந்தலந்தனின்வாழ்மூர்த்திமுதலைப்பலநாளும்
பத்தியதனால்வழிப்படுவார்க்களிக்கும்பலன்களியாவுமருட்
சத்திவடிவாஞ்சந்தானச்சோதியளிக்குஞ்சார்ந்தொருக்காற்
சித்திபெறுவோர்தொழவொப்பொன்றில்லாமூர்த்தத்திருவுருவே.

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

சுடர்கொள் சந்தானச் சோதியைப் பதுமந் துன்றள நாயகி யுமையைப், படர் †பௌ டத்தின் வெள்ளிவா ரத்திற் பகலொ டுந் தொழுதுளர்க் கினிமேல், துடர்வினை யிலவாம் புவியினிற் செல்வந் தோய்ந்தரன் றிருவடி நிழலின், முடிவினிற் சேர்வ ரியா வரோ யெனினு மூர்த்தியின் றகைமையான் முறையே. (கஉச)

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

வலிகொள்புரவர்செயும்பலிகடனக்குமகிழ்ந்துவரமளித்தான்
‡கலிகொள்வாலிபூசையினுக்கிரங்கிச்சுடரிற்கலந்தளித்தான்
§கிலிகொள்பிரமன்கலைவாணிவிஞ்சைபூசைக்கிளர்முனிவர்
¶பலிகொண்டருளியளகைமனுற்பழிதீர்க்குமையின்பண்ணவனே.

பகலோன்செய்யும்பூசையினைப்பற்றிப்பெரிதாம்பலனளித்தான்
இகலோர்மாளவாள்கொளிராவணன்செய்பூசைக்கென்னுரு
முகில்போலருளல்காட்டவுந்தென்சுவரினிருத்திமுத்தியருள்
அகிலமூர்த்தங்களுக்கதிகமாகுமாதிப்புரிச்சிவமே. (கஉரு)

எழில்கொளாதிபுரியெய்தியிருடிதீர்த்தமுதலாடிப்
பழிகளகற்றும்பரஞ்சோதிலிங்கமதனைப்பகர்விதியால்
விழிகளிரண்டும்நீர் ||வாரவிழுந்துமெழுந்துமுக்காலும்
$உழிகொள்மனுவையோதியொருநாளங்கிருக்கினுணர்வருண்மே.

மூர்த்திமகிமை முற்றுப்பெற்றது.

---

* சுகம் - முத்தி. † பௌடம்-தைமாசம். ‡ கலி-போர். § கிலி - வெருவல். ¶ பலி-பூசை. || வாரல் - வடிதல். $ உழி - பக்கம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## இரண்டாவது

# திரிபுராதிகள் சிவபூசாவிதி

## அத்தியாயம்.

இதனால்முன்னந்தலமகிமைத்தீர்த்தமகிமையியம்பவுங்கேட்
டதனால்மூர்த்திமகிமையினையறைதலானேனைவைமூன்றோர்
விதமாம்வெவ்வேறுக்கியுமக்குரைக்கவிருப்பாற்றிருப்திவலீர்
* பதமாய்வினவுஞ்சூனிபமுப்புரவர்பலியுமினிப்பகர்வாம். (க)

கலிவிருத்தம்.

தெய்வநீறுமணியும்புனைந்தருட்
சைவராகிச்சதுமுகவள்ளலை
யுய்தவத்தாலுனிப்புரர்மூவருஞ்
செய்தவமினியாதெனத்தேர்ந்துமே. (உ)

வேனில்காலத்தனல்நடுவெய்தியுஞ்
சோனைகாலத் † தறலிடைவைகியும்
‡ பானவூதைப்பசிக்குப்பருகியுங்
கானந்தன்னிற்கடுந்தவஞ்செய்தனர். (ங)

செய்தவர்புடைசென்றுத்திசைமுகன்
எய்தலாவதுமக்கினியாதெனக்
கைதலைக்கொடுகூப்பிக்கழலினில்
நைதலோடுபணிந்துநவிற்றுவார். (ச)

இரும்புவெள்ளிபொனாற்செயப்பட்டும்யாம்
விரும்பிடங்கள்விசைகொடுசெல்வதாய்ப்
பெருஞ்சிறகிருபாலும்விசாலமுந்
தருமரண்டனைத்தந்திடல்வேண்டுமால். (ரு)

§ அரண்கள்மூன்றுளப்பட்டணந்தன்னினின்
சரண்களெய்திச்சுரர்நரராற்சதி

---

* பதம் - பக்குவம். † அறல் - நீர். ‡ பானவூதை - கள்காற்று. § அரண் - கோட்டை.

* முரண்களின் † விடலின்றிமுடிகொளும்
வரங்கணல்கியும்வைத்தற்கடனென்றார். (சு

துட்டரெண்ணந்தெரிந்துந்துகளிலான்
இட்டமானவைநல்குவனீர்செயுஞ்
‡ சிட்டபூசையிற்றீய்குறின்மாளுநாள்
கிட்டுமென்றுகிளர்ந்திடஞ்சென்றனன். (எ)

தவத்திறற்செயும்பூசைப்பலத்தினல்
§ நிவத்தராகியுலகங்கண்மூன்றினும்
உவத்தன்மேற்கொண் ¶ டுறுகணிழைக்கப்போர்
அவத்தையாறிக்குப்பாலரயர்ந்தனர். (அ)

இந்திரன்முதலியாவருமெய்திமால்
மைந்தன்றன்கழலேற்றியெம்மன்னையாம்
விந்தையாளொடுமேவுந்தயாநிதி
எந்தையெந்துயர்கேளென்றியம்புவார். (கூ)

அரியதாஞ்சிவபுண்ணியமதனினும்
பெரியதாஞ்சிவபூசைப்பலத்தினல்
மரிதராத்திமைந்தர்கணீர்தரும்
உரியதாம்வரங்கொண்டொறுத்தோட்டியே. (கo)

எங்களுடரசேவலுங்கைக்கொளியித்
தங்களுடரசாக்கினர்த்தஞ்சம்யார்
புங்கவாவுனையன்றிப்புலவர்கள்
சிங்கமாகுமயன்செப்பலாயினன். (கக)

அஞ்சவேண்டாமமரர்காளியாவரும்
விஞ்சைவைகுந்தமெய்திவிலோசனக்
கஞ்சன்பாற்சொலிற்றீர்ப்பன் || கவலெனக்
கஞ்சன்சொல்லிக்கலங்தெய்திக்கண்டனர். (கஉ)

கண்டுளாரிற்கழறுங்கருப்பன்றன்
விண்டுவாகியதாதைமுன்விண்ணப்பங்
கொண்டுபெற்குனன்மாபலிக்காரியைத்
தொண்டுசெய்தவாவென்றுபின்சொல்லுவான். (கஙு)

இரணியகருப்பன் என்பது கருப்பன் என்று தலைக்குறைந்து வந்தது.

---

* முரண் - போர். † விடல் - சாதல். ‡ சிட்டபூசை - சற்சனபூசை.
§ நிவர்த்தல் - உயர்வு. ¶ உறுகண் - துன்பம். ||

என்னையீன்றிடும்பின்னைத்துழாய்மணி
தன்னைமார்பிற்பிரிவிலித்தாதையே
யின்னல்செய்நரகன்மதுராவணன்
பொன்னனோடுகொல்புண்ணியமூர்த்தியே. (௧௪)

மச்சகூர்மவராகநரசிங்கப்
* பச்சைவாமனபன்பரசுராம
நச்சும்ராகவநன்பலபத்திரன்
மெச்சுங்கண்ணமாவென்றுவிரித்துமே. (௧௫)

தேவசங்கமயூரந்தனக்குச்சேர்
யாவநாசவெழிலிப்படிவமே
† தாவிலாதெமையாளத்தகுவதுன்
சேவையாலினியென்றுபின்செப்புவான். (௧௬)

கோன்களாகும்புரவர்கொடுமையான்
வான்கொள்வார்படுந்துன்புகொண்டுன்கழற்
றுன்புகத்தவிர்த்தாளுஞ்சரணென
நான்குவாய்கொடுநின்றும்நவின்றனன். (௧௭)

உரைசெய்மைந்தனையும்பரைநோக்கிமுப்
புரவர்மாளல்புராரியாலன்றிமற்
றொருவரால்முடியாதெனக்கைலையை
மருவினாரரியோடிவர்யாருமே. (௧௮)

யாவருங்கைலைக்கெழுந்தமரரு
மூவராகுமுதலைத்துதிசெயப்
பூவின்மாயனட்டாங்கம்புரிந்துபின்
கோவேயென்றுகுனிந்துகும்பிட்டுமே. (௧௯)

ஆரணங்களுந்தேர்வரிதாகிய
காரணப்பொருளாகுமுக்கண்ணவோ
நாரணிக்கும்விடைக்குஞ்சிலைக்குமேர்
பூரணத்தயைவைக்கும்புனிதனே. (௨௦)

சாமகண்டசிகண்டசீகண்ட
‡ தாமகண்டபரிபூரணத்தண்டு

---

* பச்சை - இளமை. † தாவு - வருத்தம். ‡ தாமகண்டன் - பூமாலையணியுங்கண்டன்.

மாமகண்டவெளியினுள்[illegible]ண்ட
* ஏமகண்டவென்கண்கொண்டவெந்தையே. (உக)

எங்குமாகியபூரணவெல்லைக்குட்
டங்கிவாழுஞ்சதானந்தவெள்ளமே
சங்கரசிவசம்புவேயின்பருண்
மங்கைபாகமாதேவவோவென்றுமே. (உஉ)

முனிவினுன்முச்சடிலத்தொருபினற்
றனியுறீஇத்தகர்சாடுமெத்துகள்
† பணிபெரும்படையாகிப்பணிந்தருட்
கனிவினுரிகல்நீக்குங்கருணையே. (உங)

உலகமியாவுமழித்திடுங்கங்கையின்
கலகமாற்றிச்சடையிற்கரந்தனை
அலகில்சத்திமலர்களிற்கொன்றையை
இலகவேமுடிவேய்ந்திடுமெந்தையே. (உச)

கலைகுறைக்கும்பிறையைக்கருணையாற்
றலைபுனைஇமுச்சுடர்க்கண்டரித்தனை
அலையுமெங்கட்கருத்தும்விடமுண்ட
‡ மலை § விற்கண்டமாதேவசிற்கொண்டலே. (உரு)

ஊழிகாலத்துடம்பிடிசூலத்தாற்
பாழகந்தைகெடவடிப்பண்ணியாம்
வாழ்கவேந்திகபாலங்கைக்கொண்டுள்
மாழ்கநின்றவயிரவமூர்த்தியே. (உசு)

மகந்தனிலெழுமான்மழுகட்செவித்
|| தகவரித்துகிறக்கையுந்தாங்கியே
பகையொழித்தொருமுயலகன்மேற்பதத்
துகள்படப்படநட்டஞ்செய்தூயனே. (உஎ)

மச்சமானேன்கண்கொண்டழுங்கோட்டொடு
மெச்சிச்சூகரக்கோட்டைவிரும்பியே
அச்சஞ்செய்கரித்தோலுமென்னென்புமே
இச்சையாலணிகின்றவென்னீசனே. (உஅ)

---

* ஏமகண்டன் - இன்பக்களிப்புடைய கண்டன். † பணி - அச்சம். ‡ மலைவு - உவமை. § இல் - இல்லாத. || தகவரி - மேன்மையாகிய புலித்தோல்.

பிரமன்றன்னிகலென்னிகல்போக்கிநல்
வரமுநல்கிமலர்க்கண்பறித்தொரு
கரங்கொணர்ந்தியதாக்கியென்மேற்கொண்ட
* நிரந்தரப்பொருளாகு † நியோகனே. (௨௯)

மாணிக்காகயமனைவதைத்துமென்
பாணிக்குமுளைதந்தரிப்பத்மனுர்
வாணிக்குமிளையாட்கு ‡ மனுப்பொருட்
§ காணிக்கைத்தருங்கண்மணித்தெய்வமே. (௩௦)

சலந்தரன்முதற்சூரர்களியாரையும்
நிலந்தனிற்கொலுநீதனேராவணன்
வலந்தனக்கெனைவைத்துமையாளொடு
கலந்துவாழ்கயிலாயகணேசனே. (௩௧)

ஆயவெண்பத்தொருநான்கிலக்கத்து
மேயவின்னுயிர்க்கீச || வியாசமாங்
தூயசோதிச்சுயப்பிரகாசதுன்
பாபதியாவுமொழிக்கும்பரமனே. (௩௨)

சோதிமாமணிநீறுந்துலங்குநின்
பாதிமேனியென்பாலுமைபானல்கிக்
காதியாதியரோற்றுங்கைலேயிற்
¶ பூதியேகொளும்புண்ணியவெந்தையே. (௩௩)

பற்பலத்துதிசெய்யுஞ்சௌரிமுன்
தற்பரன்சிவலிங்கத்திருந்துமே
முற்கொளிஇயுமைகாணச்சுரரொடு
கற்பகற்பமும்வாழ்த்தக்கழறுவான். (௩௪)

நீங்கள்யாருந்துயர்கொளல்நீங்கவோர்
தீங்கிலாவுபசத்தெனும்யாகமும்
ஆங்குசெய்தசுராள்சிவபூசையை
வாங்கின்மாள்வொனச்சொலிநீங்கினன். (௩௫)

---

* நிரந்தரம் - வெளி. † நியோகம் - நிச்சயம். ‡ மனுப்பொருள் - தருமசாத்திரம் பதினெட்டினென்று. § காணிக்கை - வெகுமானம். || வியாசம் - விரிவு. ¶ பூதி - மகத்துவம்.

உவணகேதனும்பரைநோக்கியே
அவணிமெய்திக்குயிற்றுமெனச்சொலிச்
சுவணநீறுமணிந்துகில்வேய்ந்து * சூ
† றுவணேயிலிகைக்கொண்டும்நொடியிலே. (௩௬)

ஞான ‡ நாரதரோடும்நவில்புரர்
தானமெய்தியேமாலுஞ்சாலங்களாற்
றானவர்சிவபூசைபங்கஞ்செய்தான்
வானுமண்ணும்வணங்கிக்களிக்கவே. (௩௭)

*திரிபுராதிகள் சிவபூசாவிதி யத்தியாய முற்றுப்பெற்றது.*

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது

# திரிபுராதிகள் சிவபூசாவிதி

## பங்கவத்தியாயம்.

*அறுசீரடியாசிரியவிருத்தம்.*

முன்னமுப்புரவர்பூசைமுறைமையைக்கேழ்க்குமோனர்
நன்னியலுணர்ந்துவேதநாதனைவழிபட்டேற்றிப்
பன்னியபலியின்பங்கஞ்சூனியமவர்கள்பாலே
தன்னிலையுணருஞ்சூதத்தாபதர்புகல்வதானூர். (க)

திரிபுரர்பலிதேர்தெய்வப்பட்டணத்தருகார்தீர்த்த
மருவியோரிடமமைத்துமயக்கித்தன்வசஞ்சேரன்னார்க்
குரியதந்திரமுமீராறாயிரஞ்செய்துரைத்துப்
பிரியமுங்கொளுபுலோகாயுதச்சமண்புத்தரோடே. (உ)

பன்பசுப்பதீர்களஞ்சூராத்திரிப் § பிறப்பிற்சேர்த்து
மன்கயிலாயமெய்திமாபரசிவத்தைப்பேணித்
தன்கரவசங்கொளன்னார்பூசையின்பங்கஞ்சொல்லிப்
பின்புமால்வணங்கச்சைவப்பெருந்தகையுரைக்கலுற்றார். (௩)

* சூ - வியப்புச்சொல். † றுவணே - கல்விநூல். ‡ நாரதரோடும் - நாரதமுனிவர்முதலிய சீடரோடும். § பிறப்பு - வசம்.

புகலுபசத்தென்பாகப்பூர்த்திக்கும்புந்தியுள்ள
சகலரும்போதல்வேண்டுமாதலாற்சவுரியேயிப்
பகலொடும்வருவரென்னப்பலருடன்பரமனாரும்
இகலிலாவதிகைக்கீழ்பாலெய்துதற்கெண்ணங்கொண்டார். (௪)

விண்ணவர்தானைசூழவிரிபுவிக்குயவினேறி
வண்ணநான்மறைத்துரங்கமலரவன்செலுத்தமேருத்
தண்சிலைக்கோர் * கனுக்கநாணின்மாற்கணையைப்பூட்டிப்
பண்ணளிபாடுமாதிப்புரிச்செலும்பரமனாரே. (௫)

ஒன்பதாமவதாரத்தின்றொண்டிரிபுரசம்மாரப்
பொன்றிருவுருவந்தாங்கிப்புகல்விலிற்பாணந்தன்னை
இன்பசந்தானம்பண்ணியெழுவகையாதிருக்கத்
துன்பெதுவெனயோசிக்குங்காற்றோணிப்பிறந்ததன்றே. (௬)

பிறந்திடுந்தோணிதோற்றமற்றிசைதொறும்பார்க்கவைய
னிறங்கிளர்மதியம்நீலமலையினினுதித்தல்போலுந்
திறங்கிளர்வடக்குத்திக்கிற்றீனராவணனைக்கொண்டு
மறங்கிளர்வாலிநோக்கிவருதல்கண்டதிசயித்தார். (௭)

வந்தவன்கரணசுத்திமன்னியைந்தெழுத்தையெண்ணிப்
பந்தமில்மூர்த்தந்தன்னைப்பாவனைசெய்துபற்றிச்
சிந்தைநைந்துருகிக்கண்ணீர்சொரிந்தொருமுகூர்த்தஞ்சென்றும்
எந்தையினருணினைந்துமெழிறுதிசெய்வதானான். (௮)

மங்களகரமாச்சைவமணிவளரொளியாய்மன்னுஞ்
சங்கரசம்புவேநின்றனையிலார்பெறுவதென்னே
நங்கைபார்வதியணைக்கநலந்தருமுருவந்தன்னை
எங்கரந்தொடப்பூசிக்கவென்றுறுமெந்தாயென்றே. (௯)

கரங்களைமுகிழ்த்துப்பின்னுங்கதறுவன்கைலைக்குன்றிற்
பரம்பரையோடிருக்கும்படிவமப்பண்ணவர்க்காம்
இரங்கியற்புதமாயாருங்காணுதிங்ஙனென்பால்
† வரங்கொண்மானதப்பலிக்குள்வந்ததுமுருவந்தானே. (௰)

கண்டுகண்களிக்கவுள்ளங்கலந்திடுஞ்சோதிதன்னைத்
தொண்டனேனென்றுங்காணத்திருவருள்சுரக்குமென்னத்

* [illegible] - சர்ப்பம். † வரம்—விருப்பம் அல்லது மேன்மை.

தெண்டனிட்டிடும்வாலிக்குச்சிவபிரான்புகலும்போதன்
விண்டுசெய்பலிக்குநீசெய்மானதப்பலிமேற்கொண்டேன். (கக)

கொண்டுளமகிழ்தலானேன்கோபதிச்சேயேயுன்போற்
றொண்டுளாரொருவரில்லைச்சுயம்பிரகாசவென்னைப்
பண்டுளமருவிவாழும்பகர்முசுகுந்தன்போன்றும்
எண்டிசையாளுங்கீர்த்தியெய்தினையிங்ஙனென்றே. (கஉ)

இனிப்பிரதோடகாலம்பிறந்ததாற்றேவர்தங்கட்
சனிப்பகையொழிக்கப்போதல்வேண்டுமிச்சவியூர்மேவித்
தனிப்பரந்தன்னையேத்தியர்ச்சனைபுரிந்துந்தக்க
நினைப்பொடுவாழ்வாயென்றுநிமலனார்புகல்வார்பின்னும். (கங)

திருவளர்கயிலையோடுதிகழ்மன்றுளாலவாயும்
பெருவளங்கொள்ளுமாரூரன்பர்களிதையம்பேணு
மருவளர்பொழில்சூழாதிபுரியினும்வசிப்பனேனுங்
குருவளர்சவியூர்க்கன்புமிகவுங்கொண்டிருப்பேனென்று. (கச)

வென்றிடும்பரமன்றெய்வமலரிணைப்பதத்தையுன்னி
மன்றிலும்விளங்குஞ்சோதிமனத்துளும்புகுந்துஞானந்
துன்றியகனவியூரிற்சேர்ந்ததென்றுருகிச்சொங்கோ
னின்றனன்புலவர்வாழ்த்தநிமலமாமுனிவரோடு. (கரு)

கோசிகமுனிவசிட்டக்கோமுனியிருவர்முன்னம்
பேசுபுதவத்துமேன்மைப்பெற்றியைரவியாற்றீர்த்திங்
கேசுளதகன்றுபோனார்சமண்மலவிருளொதுங்க
மாசிலெற்பெரியோர்மண்ணில்வந்தருண்மகிமைதன்னை. (கசு)

எந்தையென்றுய்க்குமுன்னமியம்பினன்ரகசியத்தில்
உந்தியையபங்கைமர்டமாக்குவனுபமனிப்பேர்
தந்ததாம்பக்தமோருஞ்சேக்கிழார்புண்டரீகத்
திந்தவூரோனுதித்தானெய்தியதிதனிற்சொல்வாம். (கஎ)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஏனாதிநாதநாயனார் புராணம்.

புண்டரிகம்பொன்வரைமேலேற்றிப்புவியளிக்குந்
தண்டரளவெண்கவிகைத்தார்வளவர்சோணாட்டில்
வண்டறைபூஞ்சோலைவயன்மருதத்தண்பணைசூழ்ந்
தெண்டிசையுமேறியசீர்மூதூரெயினனூர். (௧)

வேழக்கரும்பினொடுமென்கரும்புதண்வயலிற்
றாழக்கதிர்ச்சாலிதானோங்குந்தன்மையதாய்
வாழக்குடிதழைந்துமன்னியவப்பொற்பதியில்
ஈழக்குலச்சான்றாரேனாதிநாதனார். (௨)

தொன்மைத்திருநீற்றுத்தொண்டின்வழிபாட்டி
னன்மைக்கணின்றநலமென்றுங்குன்றாதார்
மன்னர்க்குவென்றிவடிவாட்படைபயிற்றுந்
தன்மைத்தொழில்விஞ்சையிற்றலைமைசார்ந்துள்ளார். (௩)

வாளின்படைபயிற்றிவந்தவளமெல்லா
நாளும்பெருவிருப்பானண்ணுங்கடப்பாட்டிற்
றாளுந்தடமுடியுங்காணாதார்தம்மையுந்தொண்
டாளும்பெருமானடித்தொண்டர்க்காக்குவார். (௪)

நள்ளார்களும்போற்றுநன்மைத்துறையின்கண்
எள்ளாதசெய்கையியல்பினொழுகுநாட்
டள்ளாததங்கடொழிலுரிமைத்தாயத்தி
னுள்ளானதிசூரனென்பானுளனானான். (௫)

மற்றவனுங்கொற்றவடிவாட்படைத்தொழில்கள்
கற்றவர்கடன்னிற்கடந்துள்ளாரில்லையெனும்
பெற்றிமையான்மாநிலத்துமிக்கபெருமிதம்வந்
துற்றலகிற்றன்னையேசாலமதித்துள்ளான். (௬)

தானாள்விருத்திகெடத்தங்கள்குலத்தாயத்தின்
ஆனாதசெய்தொழிலாமாசிரியத்தன்மைவள
மேனாளுந்தான்குறைந்துமற்றவர்க்கேமேம்படலால்
ஏனாதிநாதர்திறத்தேலாவிகல்புரிந்தான். (௭)

கதிரோனெழுமழுங்கிக்கால்சாயுங்காலை
மதிபோலழிந்துபொருமற்றவனுஞ்சுற்றப்
பதியோருடன்கூடப்பண்ணியமர்மேற்சென்
றெதிர்போர்விளைப்பதற்கேயெண்ணித்துணிந்தெழுந்தான். (௮)

தோள்கொண்டவல்லான்மைச்சுற்றத்தொடுந்துணையாங்
கோள்கொண்டபோர்மள்ளர்கூட்டத்தொடுஞ்சென்று
வாள்கொண்டதாயம்வலியாரேகொள்வதென
மூள்கின்றசெற்றத்தான்முன்கடையினின்றழைத்தான். (௯)

வெங்கட்புலிகிடந்தவெம்முழையிற்சென்றழைக்கும்
பைங்கட்குறுநரியேபோல்வான்படைகொண்டு
பொங்கிப்புறஞ்சூழ்ந்துபோர்குறித்துநேர்நின்றே
யங்கட்கடைநின்றழைத்தானொலிகேளா. (௧௦)

ஆர்கொல்பொரவழைத்தானென்றரியேற்றிற்கிளர்ந்து
சேர்வுபெறக்கச்சிற்செறிந்தவுடைமேல்வீக்கி
வார்கழலுங்கட்டிவடிவாட்பலகைகொடு
போர்முனையிலேனாதிநாதர்புறப்பட்டார். (௧௧)

புறப்பட்டபோதின்கட்போர்த்தொழில்கள்கற்கும்
விறற்பெருஞ்சீர்க்காளையர்கள்வேறிடத்துநின்றார்
மறப்படைவாட்சுற்றத்தார்கேட்டோடிவந்து
செறற்கரும்போர்வீரர்க்கிருமருங்குஞ்சேர்ந்தார்கள். (௧௨)

வந்தழைத்தமாற்றான்வயப்புலிப்போத்தன்னார்மு
னந்தமதுவாட்பயிற்றுநற்றாயங்கொள்ளுங்கால்
இந்தவெளிமேற்கைவகுத்திருவேம்பொருபடையுஞ்
சந்தித்தமர்விளைந்தாற்சாயாதார்கொள்வதென. (௧௩)

என்றுபகைத்தோனுரைப்பவேனாதிநாதரது
நன்றுனக்குவேண்டுமேனண்ணுவனென்றுண்மகிழ்ந்து
சென்றவன்முன்சொன்னசெருக்களத்திற்போர்குறிப்பக்
கன்றியிருபடையுங்கைவகுத்துநேர்மலைவார். (௧௪)

வேறு.

மேகவொழுங்குகண்முன்கொடுமின்னிரைதம்மிடையேகொடு
மாகமருங்கினுமண்ணினும்வல்லுருமேறெதிர்செல்வன
வாகைநெடும்பலகைக்குலமாள்வினைவாளுடையாடவர்
காகமிடைந்தகளத்திருகைகளின்வந்துகலந்தனர். (௧௫)

காலிகழல்கட்டியமள்ளர்கள்கைகளின்மெய்களடக்கிய
வாளொளிவட்டமுனைத்திடவந்திருகைகளின்முந்தினர்
வேலொடுவேலெதிர்நீள்வனமேவியபாதலம்விட்டுயர்
ஞாலமுறும்பணிவீரர்கணிமிர்கின்றனவொத்தன. (௧௬)

வெங்கண்விறற்சிலைவீரர்கள்வேறிருகையினுநேர்பவர்
தங்கள்சிலைக்குலமுந்தினதாவில்சரங்கணெருங்குவ
பொங்குசினத்தெரியிற்புகைபோகுகொடிக்கள்வளைத்தெதிர்
செங்கண்விழிக்கனல்சிந்தியசிறுபொறிச்செலவொத்தன. (௧௭)

வாளொடுநீள்கைதுடித்தனமார்பொடுவேல்கள்குளித்தன
தேரொடுவாளிநிலத்தனதோளொடுதோல்கடகைத்தன
தாளொடுவார்கழலிற்றனதாரொடுசூழ்சிரமற்றன
நாளொடுசீறிமலைப்பவர்நாடியபோர்செய்களத்தினில். (௧௮)

குருதியினதிகள்பரந்தனகுறையுடலொழுகியலைந்தன
பொருபடையறுதுணிசிந்தினபுடைசொரிகுடருடல்பம்பின
வெருவரவெருவைநெருங்கினவிசியறுதுடிகள்புரண்டன
இருபடைதனினுமெதிர்ந்தவரெதிரெதிரமர்செய்பறந்தலை. (௧௯)

நீளிடைமுடுகிநடந்தெதிர்நேரிருவரிலொருவன்றொடர்
தாளிருதொடையறமுன்பெயர்சாரிகைமுறைமைதடிந்தனன்
வாளொடுவிழுமுடல்வென்றவன்மார்பிடையறமுனெறிந்திட
ஆளியினவனுமறிந்தனனாயினர்பலருளரெங்கணும். (௨௦)

கூர்முனையயில்கொடுமுட்டினர்கூடிமுனுருவியதட்டுட
னேருரமுருவவுறைப்புடனோர்படவெதிரெதிர்குத்தினர்
ஆருயிர்கழியவுநிற்பவராண்மையிலிருவருமொத்தமை
போரடுபடைகொடளப்பவர்போல்பவராவிலர்பட்டனர். (௨௧)

பொற்சிலைவளையவெதிர்ந்தவர்புற்றரவனையசரம்பட
விற்படைதுணியவுநின்றிலர்வெற்றிகொள்சுரிகைவழங்கினர்
முற்றியபெருவளனின்றியுமுற்படுகொடைநிலைநின்றிட
உற்றனவுதவியபண்பினரொத்தனருளர்சிலகண்டகர். (௨௨)

அடன்முனைமறவர்மடிந்தவரலர்முகமுயிருளவென்றுறு
படர்சிறைசுலவுகருங்கொடிபடர்வனசுழல்வனதுன்றலில்
விடுசுடர்விழிகளிரும்புசெய்வினைஞர்தமுலையின்முகம்பொதி
புடைமிடைகரியிடைதங்கியபுகைவிடுதழலைநிகர்ந்தன. (௨௩)

திண்படைவயவர்பிணம்படுசெங்களமதனிடைமுன்சிலர்
புண்படுவழிசொரியுங்குடர்பொங்கியகழுகுபருந்தொடு
கொண்டெழுபொழுதினுமுன்செயல்குன்றுதலிலர்தலைநின்றனரார்
விண்படர்கொடிவிடுபண்பயில்விஞ்சையர்குமரனைவென்றனர். ()

வேறு.

இம்முனையவெம்போரிலிருபடையின்வாள்வீரர்
வெம்முனையின்வீடியபின்வீடாதுமிக்கொழிந்த
தம்முடையபல்படைஞர்பின்னுகத்தாமுன்பு
தெம்முனையிலேனுதிநாதர்செயிர்த்தெழுந்தார். (௨௫)

வெஞ்சினவாடையுமிழவீரக்கழல்கலிப்ப
நஞ்சணிகண்டர்க்கன்பர்தாமெதிர்ந்தனுநாட்பின்கண்
எஞ்சியெதிர்நின்றவிகன்முனையில்வேலுழவர்
தஞ்சிரமுந்தோளுரமுந்தாளுரமுந்தாந்துணித்தார். (௨௬)

தலைப்பட்டாரொல்லாருந்தனிவீரர்வாளிற்
கொலைப்பட்டார்முட்டாதார்கொல்களத்தைவிட்டு
நிலைப்பட்டமெய்யுணர்வுநேர்பட்டபோதில்
அலைப்பட்டவார்வமுதற்குற்றம்போலாயினர். (௨௭)

இந்நிலையவெங்களத்திலேற்றழிந்தமானத்தாற்
றன்னுடையபல்படைஞர்மீண்டார்தமைக்கொண்டு
மின்னொளிவாள்வீசிவிறல்வீரர்வெம்புலியே
றன்னவர்தமுன்சென்றதிசூரனேரடர்ந்தான். (௨௮)

மற்றவர்தஞ்செய்கைவடிவாளொளிகாணச்
சுற்றிவரும்வட்டணையிற்றோன்றுவகைகலந்து
பற்றியடர்க்கும்பொழுதிற்றனும்படைபிழைத்துப்
பொற்றடந்தோள்வீரர்க்குடைந்துபுறகிட்டான். (௨௯)

போனவதிசூரன்போரிலவர்க்கழிந்த
மானமிகமீதூரமண்படுவான்கண்படான்
ஆனசெயலோரிரவுஞ்சிந்தித்தலமருவான்
ஈனமிகுவஞ்சனையால்வெல்வனெனவெண்ணினன். (௩0)

சேட்டாருங்கங்குல்புலர்காலைத்தீயோனு
நாட்டாரைக்கொல்லாதேநாமிருவேம்வேறிடத்து
வாட்டாயங்கொள்போர்மலைக்கவருகவெனத்
தோட்டார்பூந்தாரார்க்குச்சொல்லச்செலவிட்டான். (௩௧)

இவ்வாறுகேட்டலுமேயேனாதிநாதனார்
அவ்வாறுசெய்தலழகிதெனவமைந்து
கைவாளமர்விளைக்கத்தான்கருதுமக்களத்தில்
வெவ்வாளுரவோன்வருகவெனமேற்கொள்வார். (௩௨)

சுற்றத்தார்யாருமறியாவகைசுடர்வாள்
பொற்பலகையுந்தாமேகொண்டுபுறம்போந்து
மற்றவன்முன்சொல்லிவரக்குறித்தவக்களத்தே
பற்றலனேமுன்வரவுபார்த்துத்தனிநின்றார். (௩௩)

தீங்குகுறித்தழைத்ததீயோன்றிருநீறு
தாங்கியநெற்றியினார்தங்களையேயெவ்விடத்தும்
ஆங்கவருந்தீங்கிழையாரென்பதறிந்தானாய்ப்
பாங்கிற்றிருநீறுபண்டுபயிலாதான். (௩௪)

வெண்ணீறுநெற்றிவிரவப்புறம்பூசி
யுண்ணெஞ்சில்வஞ்சக்கறுப்புமுடன்கொண்டு
வண்ணச்சுடர்வாண்மணிப்பலகைகைக்கொண்டு
புண்ணியப்போர்வீரர்க்குச்சொன்னவிடம்புகுந்தான். (௩௫)

வென்றிமடங்கல்விடக்குவரமுன்பார்த்து
நின்றாற்போனின்றநிலைகண்டுதன்னெற்றி
சென்றுகிடைப்பளவுந்திண்பலகையான்மறைத்து
முன்றனிவீரர்க்கெதிரேமூண்டான்மறம்பூண்டான் (௩௬)

அடல்விடையேறென்னவடர்த்தவனைக்கொல்லும்
இடைதெரிந்துதாள்பெயர்க்குமேனாதிநாதர்
புடைபெயர்ந்தமாற்றான்பலகைபுறம்போக்கக்
கடையவன்றனெற்றியின்மேல்வெண்ணீறுதாங்கண்டார். (௩௭)

கண்டபொழுதேகெட்டேன்முன்பிவர்மேற்காணாத
வெண்டிருநீற்றின்பொலிவுமேற்கண்டேன்வேறினியென்
னண்டர்பிரான்சீரடியாராயினாரொன்றுமனங்
கொண்டிவர்தங்கொள்கைக்குறிவழிநிற்பேனென்று. (௩௮)

கைவாளுடன்பலகைநீக்கக்கருதியது
செய்யார்நிராயுதரைக்கொன்றாரெனுந்தீமை
யெய்தாமைவேண்டுமிவர்க்கென்றிரும்பலகை
நெய்வாளுடனடர்த்துநேர்வார்போனேர்நின்றார். (௩௯)

அங்கின்றதொண்டர்திருவுள்ளமாரறிவார்
முன்னின்றபாதகனுந்தன்கருத்தேமுற்றுவித்தான்
இங்கின்றதன்மையறிவாரிவர்க்கருள
மின்னின்றசெஞ்சடையார்தாமேவெளிநின்றார். (சு0)

மற்றினிநாம்போற்றுவதென்வானோர்பிரானருளைப்
பற்றலர்தங்கைவாளாற்பாசமறுத்தருளி
யுற்றவனையென்றுமுடன்பிரியாவன்பருளிப்
பொற்றொடியாள்பாகனார்பொன்னம்பலமணைந்தார். (சுக)

வேறு.

எயினனூரவதரித்தவேனாதியதிசூரன்போர்ப்
பொயினனுதறன்பொடியாற்பொன்னம்பலத்தெம்பாற்
* பயனிக்கழல்பெறுமுன்னவனிட்டபண்பளித்தேன்
வயனெடுக்குமூர்க்கமெனும்வடிவுரைக்கக்கேளீரே. (சுஉ)

வேறு.

ஒன்பதாமவதரத்தினுக்கிரத்தெரிசனந்தான்
என்பரங்கொள்ளல்கூடாதாதலாற்சாந்தமாகி
உன்பரமளித்தேனென்றுன்வாலியுமுருகியெய்தாய்
அன்பொடுமதனைக்காட்டல்வேண்டுமென்றடிபணிந்தான். (சுங)

பணிந்தவன்முன்னமூர்க்கப்படிவமுமரனெடுத்துத்
தணிந்திலனுகிநிற்கச்சக்கிரித்தனையன்சற்றுந்
துணிந்ததைநோக்கானுகித்துன்புறீஇதொன்மைத்தன்மை
யணைந்திடுமெனவிரக்கவையனுமெடுத்துச்சொல்வான். (சுச)

இப்பெரு † மமைதிதானுமிந்திரன்சேயேயென்றுஞ்
செப்பும்வைகாசிமாதச்சுக்கிலப்பட்சந்தன்னிற்
றிப்பியவட்சயமென்றிருதியைத்திதியிற்சென்றும்
ஒப்பிலாவதிகையுள்ளுங்கொள்ளுமென்றுரைப்பன்பின்னும். (சுரு)

வருடங்கடோறும்வந்துபானகம்பழம்பூக்கொண்டிங்
கருடலிங்கத்தோடெல்லாவிலிங்கமுங்கண்டுபோற்றி
யருளதாநிற்குமூலலிங்கவர்ச்சனையாற்சோதித்
தெருடரப்பணிந்துசாந்தஞ்சேர்ந்தொருமதலைத்தென்பால். (சுசு)

பூசுரர்தமக்குத்தானம்புரிந்துபானகமருத்தி
வாசமார்மலரைச்சூட்டிமலையரம்பூசிமங்கை

* பயனி—கூடல். † அமைதி—சாந்தம்.

நேசனேயதிகைவாழும்நின்மலாவென்றுமென்னைப்
பேசியபுராணங்கேட்டுச்சிந்திக்கிற்பெரியவாழ்வே. (௪௭)

இத்திதியதனினின்போற்பானகம்பழம்பூக்கொண்டும்
பத்தியாவழிப்பட்டேற்றிப்பனவர்கட்கருந்தும்பண்டம்
வெற்றிலைப்பாக்கிற்காசுசந்தனங்கொடைகழற்பூண்
சித்தமாழ்குறவளிக்கிற்சிவனுலகெய்திவாழ்வார். (௪௮)

ஒன்றனந்தமதாயோங்குமட்சயத்திருதிகைத்தேர்
நன்றிதிற்புலவன்சேயோநவில்வனவளித்தும்வாழ்வாய்
என்றிறைபுகலக்கேட்டுமிறைஞ்சியுந்துதிகள்செய்துங்
* கன்றுதலின்றிஞானக்கருணைகொண்டிருந்தானிப்பால். (௪௯)

உன்னுமீரொண்ணிரண்டாமமுசத்தினெருதின்பாணந்
தன்னையுங்கொண்டுமீரேழாதிமாபுரியிருத்திப்
பன்னுமுப்புரமெரிக்கப்பரசிவந்தானையோடு
மன்னியவதிகைத்தென்பால்மாலொடுசென்றார்மாதோ. (௫௦)

அனனகைபுரியமூவரரணழிந்தவனிவானு
மனமகிழ்தரவளித்துப்பின்பரியொடுகலந்தும்
† வனமிகுமதிகைதன்னின்வாசஞ்செய்ததனாற்றெய்வக்
‡ கனமிகுஞானமன்றுக்கதிகமித்தலமேகாண்பாய். (௫௧)

அரியரனிருவரொன்றாயமர்ந்ததாலதற்கேமேன்மை
யுரியதிச்சமயந்தான்வைகுந்தமுங்கைலைக்குன்றும்
பெரியசூனியமதானப்பெற்றியிச்சவியூர்தன்னைப்
பரவுவார்தமக்கிங்கெல்லாமளித்திடும்பரமன்றானே. (௫௨)

திரிபுராதிகள் சிவபூசாவிதி பங்கவத்தியாய முற்றுப்பெற்றது.

---

* கன்றுதல்—நைதல். † வனம்—மிக்கது. ‡ கனம்—கூட்டம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது

# திருவாலி சிவபூசாவிதி

## அத்தியாயம்.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

பலந்தரும்புரவர்பூசைப்பங்கஞ்ஞனியமுமுன்னம்
நலம்பெறுமடிகள்பாலும்நவின்றுபின்சூதஞானி
தலந்தனிற்சிறந்ததாகுஞ்சவிபுரத்தகையையேற்றி
வலம்பெறுங்காரிச்சேயின்பலியையுமறைவான்மன்னே. (க)

விந்தியமலைக்குத்தென்பால்விளங்குகிட்கிந்தைதன்னில்
இந்திரன்புதல்வன்செங்கோலெழின்மனுப்படியியற்றிப்
பந்தமில்லுயிர்கடம்மைப்பரிவொடுபாதுகாத்துச்
சந்ததஞ்சலதிநான்கின்மூழ்கியுந் * தவனமோடே. (உ)

புகலனுட்டானகன்மமியாவையும்புரிந்து † பூதம்
பகர்கயிலாயமெய்திப்பார்வதிப்பரனைப்பண்பாய்த்
‡ தகவுறத்தெரிசித்தேத்தித்தன்னகரடைந்தெவர்க்கு
மிகவருள்சுரந்தளித்துமேவிமுன்போலிருந்தே. (௩)

காலையிலெழுந்தானேக்கிக்கனைகடலாடப்போயவ்
வேலையினிருக்கத்திக்குவிஜயமுஞ்செய்து § வீங்கிச்
சோலைசூழ்கிந்தைமேவித்தேடிராவணனைச்சிந்தின்
மூலைதென்பால்முசுக்குப்பின்புடையொளித்துச்சென்றே. (௪)

சிந்துவின்மூழ்கியங்ஙன்செய்கடன்முடித்துநின்ற
யிந்திரன்சேயி ¶ னக்கிட்கைவிடவிடுக்கிக்கொண்டு
|| முந்நியினிடைப்படிந்தேயவனெடுங்கைலைக்கெய்தி
நந்தியைவினவநாதனவில்புரம்புகுதல்சொல்வான். (௫)

---

* தவனம் - ஆசை. † பூதம் - கணம்.
‡ தகவு - தெளிவு. § வீங்கி - பேராசையுள்ளோன்.
¶ அக்கிள் - கைக்குழி. || உந்தி - கடல்.

அரன்றனைவணங்கவென்பா *லனுமதியடைந்தசொங்கே
†யுரன்றருமதிகைப்பூர்வத்துளதொருபதியுமொன்னார்
‡சிரலிராவணன்றனக்குத்தெரியுங்கேளென்றுசொல்லி
வரமெலாமளிக்குநந்திவள்ளலுமறைந்தானிப்பால். (௬)

இரும்பிராவணனைநோக்கிச்சிவபிரானிருக்குந்தானம்
விரும்பியென்பாலுணாக்கவேண்டுமென்றிடும்வாலிக்கு
மிரும்பெனும்வட §நுகைத்தல்செய்திடினிசைப்பேனென்னத்
துரும்பெனவெண்ணிச்சொல்வான்சொக்குமச்சிவனைக்கண்டே. ()

தொழுதிருகரங்கள்கூப்பித்துளும்புகண்ணீரின்மூழ்கி
யழுதடியடைந்துபின்னையவிழ்ப்பனப்பதிகாட்டென்ன
எழுதருமறைகடேறுவிறைவன்வாழ்திகைக்கீட்பால்
¶விழைவுறுமவர்க்குத்தோன்றுமாகிமாபுரியீதென்றான். (௮)

என்றவன் ||றளையவிழ்த்திட்டிருநிலந்தன்னில்வீழ்ந்து
மன்றமுய்கொள்ளுஞ்ஞானவளலுமையரியோடேற்றிப்
பின்றொடைபுனைந்துசாத்திப்பெரும்பலிபுரிந்தோர்தீர்த்த
மொன்றெடுத்துச்சவாதிசெய்துகிட்கிந்தைசேர்ந்தான். (௯)

சேர்ந்தவன்செய்தியெச்சஞ்செப்பியசூதர்தம்மைத்
$தீர்ந்தவர்பணிந்துபோற்றி +சினாகுறைவகற்றித்தீங்கு
பேர்ந்திடவளிக்குமன்னன்பூசையின்பெருக்கமின்னுங்
கூர்ந்தெமக்குணாக்கவேண்டுமென்றிடக்கூறலானார். (௧0)

கங்கையாகைக்குமொப்பாய்க்கருதுபுப்பெண்ணைதன்னிற்
சங்கற்பஞ்செய்துஞ்ஞானச்சதுர்மறைமனுக்களோடு
துங் ×ககமடணஞ்சொல்லித்தோய்ந்துமுக்காலுமன்னிப்
புங்கவர்பிதிர்க்களையர்ப்பலிமுதற்புரிந்துமன்றே. (௧௧)

மாத்தியானத்துக்காயத்திரிமுதற்செபங்களெல்லாஞ்
சூத்திரரோனுஞ்செய்யற்றொடர்பெனுஞ்சுருதிநான்கின்
ஆத்தநூற்படிமுடித்துமாகிமாபுரியடைந்துச்
சாத்துபுக்காமிகத்தாற்சாமியைப்பூசைசெய்தான். (௧௨)

---

* அனுமதி - சம்மதி. † உரன் - அறிவு. ‡ சிரல் - முடிவிடம்.
§ நுகைத்தல் - தளர்த்தல். ¶ விழைவு - ஆசைப்பெருக்கல்.
|| தளை - கட்டு. $ தீர்ந்தவர் - தேறினவர். + சினா - குரங்காகியவாலி.
× அகமடணம் - அகமருடணம் (பாபவிமோசனம் அல்லது நீர்க்குள் நின்று செய்யுமோர் செபம்.)

செய்தபினாலயத்தைச்சீரணோத்தாரமாக
வெய்துபுமுடித்தின்பாகப் * பங்குனியங்கிதன்னிற்
கைதரும்பலன்கள்கொள்ளக்கரிமுகப்பலிமுன்செய்து
† தைதுபு ‡ மிருத்துவாஞ்சங்கிரகணம்புரிந்தான்மன்னோ. (௧௩)

மன்னிய § வாத்துசாந்திப் ¶ பேரீதாடனமெடுத்துப்
பன் || னங்குரார்ப்பணத்தாற் $ றேவதாவகனங்கொண்டு
பின்னுமத் + தவசாரோக × சந்திபூசைகளியற்றிப்
பொன்னியற் √ குடந்தாபித்து ∴ மனற்பலி ÷ ரட்சைசெய்தே. ()

சீர்கொள்பல்லக்கிற்பஞ்சமூர்த்திகடனைச்சோடித்துப்
பேர்கொள்வாத்தியம்பிரங்கப்பிரதமதினத்திற்பெட்பாய்
ஊர்வலம்வந்துஞானமண்டபத்திருக்கவைத்தும்
ஏர்கொள்கற்பூரதீபதூபாராதனையுஞ்செய்தே. (௧௫)

வளங்கொளுமுபசாரங்களியாவையும்புரிந்துமன்னித்
— தளங்கொளவிரண்டாநாளிற்றன்பலிரட்சைசெய்து
முளங்கொளரவியின்வாகமொளிமதிப்பிரபைதன்னிற்
றுளங்கவைத்தரனைக்காலைமாலையுஞ்சவமுங்கொண்டே.. (௧௬)

முரசமுமுழங்கமூன்றுநாட்பெறுங்காலைதன்னிற்
= திரிசியமணிப்பல்லக்கிற்சிவனையுட்காரவைத்துக்
கரிசிலாமாலைதன்னிற்பூதமேற்கவினக்கண்ணாற்
| சரசமாயாருங்காணவுற்சவந்தனைநடத்தி. (௧௭)

கருதுநான்கெனுநாட்காலைக்கற்பகத்தருவின்மேலு
மருவுதல்புரிந்தெல்லோரும்வணங்குறமாலைநேரத்
தொருமுறையாதிசேடவாகனத்துமையீசன்றான்
றெருவினிற்பவனிகொள்ளச்செய்தவன்சேவையாலே. (௧௮)

---

* பங்குனியங்கி - பங்குனிமாதக் கார்த்திகை. † தைதுபு - தைதல்-அலங்காரம். ‡ மிருத்து சங்கிரகணம் - மண்ணைச்சேர்த்து வாத்துவாக்கல். § வாத்துசாந்தி - வாஸ்துதோஷ நிவாரணம். ¶ பேரீதாடனம் - பேரிகை வாத்தியம். || அங்குரார்ப்பணம் - வித்தான பாலிகை வைத்தல். $ தேவதாவகனம் என்பது தேவதைக ளாவாகனம். + தவசாரோகணம் - என்பது தவசாரோகம் எனக் குறைந்து நின்றது. அது இரட்சாபந்தனம். × சந்திபூசை - சந்திகளின் பலி. √ குடந்தாபித்தல் - கலசந் தாபித்தல். ∴ அனற்பலி - அக்கினிகாரியம். ÷ இரட்சை - இரக்கை - காப்பு. — தளம் - கூட்டம். = திரிசியம் - தோற்றப்படத்தக்கது. | சரசம் - பரிகாரம்.

தெருள்பெறவைந்தாநாளின்காலையிற்சிவனைச்சைவப்
பொருளருள்விடைமேற்செல்லப்புகலந்திமணம்புரிந்தும்
மருளிலாமிருகவேட்டையிரவினிலாடச்செய்தும்
அருணாந்தியரிமேலம்மையப்பனைவைத்துகந்தே. (கசு)

ஆகுவாகனத்தின்மூத்தோனறுமுகன்மயின்மேலன்ன
வாகுவாகனத்திற்சண்டீச்சுரவளற்றேவுஞ்சூழப்
* பேகமாவாத்தியங்கட் பிறங்குறவலஞ்செய்போழ்திற்
பாகமாவாய்வுத்திக்கிற்பச்சையன்றளிக்குமுன்னே. (உ0)

ஈசபிம்பத்தெழுந்தவெழிற்பெருஞ்சோதிதன்னைப்
பாசமிற்றெரிசனந்தான்பண்ணுறவந்துநிற்குந்
தாசனும்பனவன்மெய்யிற்றூனெழுமொளியுங்கண்டு
மாசிலாத்துவாதசஞ்சேர்மஞ்சரியாலுஞ்சொல்லும். (உக)

எவ்வண்ணமுளதுக்கெல்லாமெழில்வண்ணமாகியாதிச்
செவ்வண்ணமேனியோடுந்திகழ்வண்ணப்பொருளோசைவ
மெய்வண்ணத்தவ்விரதத்தாம்வியன்சுடர்வண்ணங்கொள்வார்க்
கவ்வண்ணமோடிலங்குமருள்வண்ணத்தேவதேவே. (உஉ)

குணகுணிபாவமாகிக்குலவுப்பொருளோஞான
வெணமுளார்கண்டுகொள்ளுமின்பமேயன்பேயெல்லா
வணமும்நின்பாலதாக † வயங்குபுச்சுடரோவானோர்
கணங்களும்பரவநின்றகண்மணித்தேவதேவே. (உ௩)

பகலொளிச்சுடர்கொண்டோங்கும்பன்மணிச்சுடரோபோன்றென்
னகவொளிச்சுடர்ப் ‡ புரங்கொண்டருட்சுடரொளிக்குண்மன்னி
யிகலிலதாகிநின்றவெழிற்பரஞ்சுடரோவிங்ஙன்
தகவுறுஞ்சிவச்சுடர்க்குந்தனிச்சுடராகுந்தேவே. (உச)

எங்குமாஞ்சோதிக்கெல்லாமெழிற்பரஞ்சோதியாகி
மங்களகரமாமன்னுமருட்பெருஞ்சோதிதன்னைத்
தங்கரமுகிழ்த்துப்பேணிச்சரண்கொளுமாயோன்சோதித்
திங்களென்சிவச்சோதிக்குளயிக்கியஞ்சேர்ந்ததன்றே. (உரு)

பனவனுமாயோன்சோதிப்பரசிவச்சோதியைச்சேர்ந்
தனவிருசோதியொன்றாய்ச்சார்ந்திடக்கண்டோரெல்லா

---

* பேகம் - முகில். † வயங்கல் - ஒளிசெய்தல். ‡ புரம் - உடல்.

மனமிகவுருகவெய்தியானந்தமயமாய்நாளுங்
கனவினுமறவாராகிக்காதல்கொண்டிருந்தார்மன்னோ. (உ௬)

சனனகாதியர்களியாருஞ்சாற்றுபுச்சரிதங்கேட்டும்
மனனஞ்செய்ததிசயித்துமருவியேமுத்திசேர்ந்தப்
பனவனூர்சென்னமற்றும்பகர்தரவிரிவாச்சூதர்ப்
புனைமலர்க்கழலிரண்டும்போற்றினர்புகல்வார்பின்னும். (உ௭)

ஒருவடபெண்ணையின்பா * லொப்பனையாகவோங்கும்
பிரவடதேவராயபுரமெனும்பட்டணத்திற்
றாவடவேதவங்கதன்மசாத்திரங்களியாவுங்
கரவடமின்றிகற்றோனெக்கியச்சர்ம்மன் † காலே. (உ௮)

பெட்புறும்பிரம்மசர்ம்மாவெனும்பெயர்கொண்டோன்பேதக்
‡ கொட்பொரிஇச்சைவபூசைக்கொளவிலிலருந்தல்செய்யான்
நட்புறுமெவர்க்குநல்லானவில்பலித்தவிராளுநாளுந்
§ தட்புறுவிஷுசங்கிராந்திபுண்ணியகாலந்தன்னில். (உ௯)

பிணுகினிநதியின்மூழ்கிப்பெருங்கடன்முடித்துப்பின்னு
மணுதரவாகும்பூசைமனித்துதிசெயவிரங்கி
யணுதரன்முன்புதோன்றியாம்வரங்கேளிங்கென்னப்
பணுகநின்பதமலர்ச்சேனாயிக்கியப்பலன்றாவென்றான். (௩0)

விரும்பியேகேட்டும்பிரம்மசர்ம்மனுக்கரன்விளம்பும்
அரும்பதவயிக்கியந்தானரிபுரியடைந்தாலங்ஙன்
றருமரித்தளிமுன்வாய்வுச்சந்தியின்மணங்கொள்வேட்டை
வரும்பொழுதுனக்குமுத்தித்தெரிசனத்தெனமறைந்தான். (௩௧)

மறைந்தபினரியூர்மேய்விமணிச்சிவசோதிதன்னைத்
திறங்கொடுதெரிசனந்தான்செய்துறுமெய்யன்மெய்யிற்
பிறந்திடுசோதிதானுங்கலந்ததிப்பெற்றியெல்லா
மறைந்தனமுன்னமின்னையிக்கியமிதுவேயென்றான். (௩௨)

சோதியுளைக்கியஞ்செய்யுற்சவத்தெரிசனந்தான்
நீதிலாச்சவியூர்தன்னிற்காண்பவர்பவங்கடீர்ந்து
மாதவமுளராய்ஞானமருவுவரொன்று || வாணிக்
காதலாய்ப்புகலக்கேட்டுக்கருணைகொண்டிருந்தான்மன்னோ. (௩௩)

---

* ஒப்பனை - அலங்காரம். † கால் - மகன். ‡ கொட்பு - திரிபு.
§ தட்பு - குளிர்ச்சி. || வாணி - ஆகாயவாணி.

புண்ணியவிருடியோர்க்குச்சந்தனபுரத்தின்றேவைத்
திண்ணலத்தினத்தினெய்தித்தெரிசனஞ்செய்துளார்க்கும்
நண்ணுபுவரங்களியாவுநல்குமிவ்விதிகாசத்தை
யெண்ணுவர்தமக்கும்பாவமிலையெனச்சூதர்சொன்னார். (௧௪)

சொன்னவர்தமைவணங்கியிருந்தனர்முனிவரிப்பால்
பன்னுபுமைந்தாநாளினுற்சவமுடித்தான்பண்பாத்
துன்னுபுமாறுநாட்சேர்காலையிற்றேர்விமான
மன்னியமாலையானைவாகனத்தினுமேற்கொண்டே. (௧௫)

கருதுபுயேழாநாளின்காலையிற்கைலாயப்பேர்
மருவுவாகனத்தின்மேலுமாலையின்மேருவாகம்
திருவுறவெட்டாநாளின்காலையிற்சேகிலிக்கொண்
டருமறைபுகலுமந்தியசுவவுற்சவமுஞ்செய்தான். (௧௬)

ஒன்பதாந்தினத்தின்காலையோடுந்தேர்நடத்தியுன்னித்
துன்பிலாதந்தியுத்தியானவுற்சவம்புரிந்தும்
நன்மையாய்மறுநாட்காலைநவினடராசசேவை
யன்பொடுசெய்துமுச்சியதனினும்வசந்தங்கொண்டே. (௧௭)

உடன்கொளிச்சலக்கிரீடையுற்சவம்புரியக்கூர்ந்துங்
கட * னவபிருதநானங்கருதிக்கஞ்சரிதீர்த்தத்திற்
றிடனுறச்செய்வித்தானபிறகரன்றன்னைநோக்கி
வடமதிற்றுயில்கொள்கின்றவனசலோசனனுரைப்பான். (௧௮)

முன்னிலக்குமியினோடுமொன்சலக்கிரீடைசெய்யப்
பன்னியேவிரும்பியன்றுளென்றளச்சக்கரத்தால்
மன்னியுண்டாக்குமிந்தப்பதுமைசக்கரதீர்த்தத்தின்
இன்னலில்கங்கைசாரவழைத்திடுமெனப்பணிந்தான். (௧௯)

பணிந்தவன்றன்பால்மோனப்பரசிவமருள்பாலித்துப்
பிணிந்ததோர்பினல்வாழ்கங்கையதனைக்கஞ்சரிதீர்த்தத்தி
லணைந்திடுமாறுசெய்துமன்பொடுகவியைநோக்கித்
தணந்திலிவருடந்தோறுமுளரிச்சக்கரநீர்தன்னில். (௨௰)

பாற்குனமதியிற்றேயும்பௌரணைத்திதியிற்கங்கை
யேற்குமாவிதனினின்றுமெழில்பெறுங்கெடிலமெய்தி

* அவபிருதநானம் - உற்சவபூர்த்தி செய்தபின்பு செய்யும் ஸ்நானம்.

மாற்கு * சங்சயங்கொள்வேலேமருவுங்காமினியாயத்தாற்
கோற்குணவாலிதீர்த்தமெனும்பெயர்குலவுமென்றே. (சுக)

சக்கிரித்தனையனுக்குஞ்சங்கரர்புகன்றார்பின்பு
மிக்கவபிருதமென்னும்நானமுஞ்செய்துமேவி
தக்கவுற்சவமும்பூர்த்தியாக்கியத்தகைமலர்த்தாட்
புக்கிநற்றுதியாலின்பப்புணரியாழ்ந்திருக்கும்வேலே. (சுஉ)

பின்னுமெம்பெருமான்வாலிபூசையின்பெருக்கங்கண்டு
நின்னகரடைந்துநாயநீதியைப்புரிவாயென்ன
மன்னியபுலவன்சேயும்றுத்துநான்பலிசெய்திங்ஙன்
றுன்னுதல்வேண்டுமென்றான்றாயவன்பத்திமெச்சி. (சுரு)

இவ்விடந்தன்னினின்போற்பூசையுமியற்றல்வேண்டிப்
பவ்வமிற்சங்குகர்ணப்பூதமும்விடுத்தேன்பண்பாய்
திவ்வியபலியுஞ்செய்யுஞ்செல்லெனமறைந்தானெந்தை
அவ்விடந்தனிறன்பேராலிங்கமைத்திடம்போய்ச்சேர்ந்தான். ()

வேறு.

அரியசந்தானமாபுரியீசனாலயந்தனிலருணுல்வார்க்
குரியசந்தானத்தெக்கணாமூர்த்தியோங்குசந்நிதிக்குக்கீட்டிசைப்
பெரியசந்தானவாலிராவணனாற்செய்பிரதிட்டைலிங்கமுமே [பாற்
தெரியுஞ்சந்தானந்திரிபுரர்செய்யச்சேர்ந்ததிப்பெயரிரண்டினையே

ஈசனோவற்படிசெயுஞ்சங்குகர்ணனுங்காமிகவிதியாற்
பூசனைபுரிந்தான்பிறகவன்பிள்ளைச்சுகர்ணனும்பூசித்துப்போனான்
வாசமாக்கண்டாகர்ணனுஞ்சேயின்வழிவருஞ்சந்ததியாரும்
நேசமாயரன்றன்பலியினையியற்றநின்றனர்நாளுமித்தலத்தே. (சுசு)

கலிவிருத்தம்.

ஆதலாலிவர்போற்செயிற்காமிகப்
போதபூசையைக்கொள்ளும்புராரிபாற்
சாதகங்கொளவேண்டித்தனிப்பரோல்
மாதவம்பலமாகியேவாழ்வரோ. (சுஎ)

திருவாலி சிவபூசாவிதி யத்தியாய முற்றுப்பெற்றது.

---

* சங்கமம் - கலத்தல்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது

# பிரமனூர்சிவபூசாவிதி

அத்தியாயம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

வலந்திகழ்வாலிபூசைவரன்முறையாய்வகுத்து
நலந்திகழ்தரவுமெய்பானவிஸ்தரக்கேட்டோநண்ணிப்
பலந்திகழ்பிரமனூர்தம்பலிதனைச்சொலவும்பாதந்
தலமிசைக்கொண்டோமென்னச்சாற்றுவர்சூதர்தாமே. (க)

கலிவிருத்தம்.

திரிபுரமெரிதரத் * திணையின்றேரின்மேற்
பரிபவமொன்றிலாப்பிரமன்பண்பொடுந்
தெரிதரச்சாரதிச்செய்துக்கொண்டுமே
வருகையிற்குயவசையாதிருக்கவே. (உ)

யாதெனநோக்கினனயனுமங்கன
மாதுமைபாகரோடவுணர்மன்னியே
தீதுளிஇயுத்தமுஞ்செய்யக்கண்டுமெப்
போதொருவதிசயம்புகுதநின்றனன். (௩)

நின்றனனென்றுதோன்றுமனீனெறித்
துன்றுசாரத்தியந்தவறித்தொல் † லரி
யன்றுசாய்ந்திடவிடையாகியச்சுதன்
சென்றிரதத்தொடுஞ்சிவனைத்தாங்கினான். (ச)

வஞ்சிவிருத்தம்.

கொஞ்சகோரஞ்சாரத்தியங்
கஞ்சன்றப்பவுங்கண்ணுதல்
எஞ்சலிற்பிழையெய்தவு
மஞ்சியோவென்றரற்றுவான். (ரு)

---

* திணை - புவி. † அரி - தேர்.

வள்ளலுன்பதமறியநான்
கள்ளமாப்புரிந்தேனலேன்
எள்ளல்முப்புரர்போரினால்
உள்ளுகைத்த * லுடைந்தவே. (சா)

† உகைத்தல்நிற்கவுமையனே
திகைத்துநின்றனன் ‡ பிழையினைச்
§ சகித்தல்கொண்டுச்சரண்டனிற்
புகுத்தல்செய்யப்புரிமினே. (எ)

என்றுசிற்சதானந்தங்கொள்
கின்றபோதன்கிளர்க்கக்கீழ்
நின்றபூதக்கணங்கணீர்
துன்றமற்றுந்துதிக்கவே. (எ)

மாலோனுதிபசுக்களைக்
காலமேய்க்கும்பதிச்சொலும்
மூலபாசத்தளையற
|| வாலமாதவமதியினில். (அ)

பூர்வபட்சத்திதியைந்திற்
சீர்பிறுகினிமூழ்கியே
நேர்கொணித்தியகன்மமும்
ஏர்பெறப்பின்முடித்துமே. (சு)

ஆதிமாபுரிவந்தருட்
சோதிதன்னைத்துகளிலா
தோதுமாபலிகொண்டுடன்
¶ சாதகப்புனலாட்டியே. (க0)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

வேதங்க ளியம்பு + மாகனி யாச விதிப்படி யரன்றிரு முடி மேற், சாதகத் திதியிற் பாறயிர் பஞ்ச கவ்விய முதற்றிர வியமுங், கோதிலாக் கங்கைத் தீரமுங் கலந்துக் குளிர்தர வாட்டிக் கொய்

---

* உடைதல் - கெடுதல். † உகைத்தல் - செலுத்தல். ‡ பிழை-அபராதம். § சகித்தல் - மன்னித்தல். || வால் அம்மாதவன் - சுத்தவைகாசிமாதம். ¶ சாதகப்புனல் - அஃது திதிசிலே முதலிய ஏழ்வகை யுறுப்புகளி னிலையையுஞ், சோதிடநூலாலுணர்ந்து அவற்றால் வரும்பயன் கூறுவது. + மாகன்னியாசம் கக - தரம் உருத்திர மந்திரத்தை செபித்தல்.

மலராற், றீதிலா வமுதிட் டருச்சனை புரிந்தாற் றீர்ந்திடும் பிழை யெனத் தெரித்தான். (கக)

உரைத்தபின் கமல யோனிவை காச வொண்மதிப் பஞ்சமத் திதியிற், றிரைப்பினு கினியிற் செபதப கன்ம மியாவையுஞ் செய் தூநற் றெளிவாய்ப், பரைத்தளத் தோங்கும் பரசிவக் கனியைப் பகர்மறை யாகம விதியால், * விரைப்புன லாட்டித் துகின்மலர் நீறும் விதிகொடு புனைந்துடன் விரைந்தே. (கஉ)

பற்பல வாகுங் கனியொடு பண்ட வகைகளு மமுதுமற் றதுவுந், தற்பரன் றிருமுன் வைத்தெழிற் றூப தீபமுஞ் செய்துசங் மார்க்க, விற்பனர் துதிகள் விளம்பி யர்ச்சித்து விழியினீர் பெருக வீழ்ந் திறைஞ்சிக், கற்ப கற்பங்க ளழியினு மழியாக் கமலனும் பூசைகள் செய்தே. (கங)

ஏகமாத் விதமாந் துதியினுஞ் சவியூ ரெங்கையே பத்ம நாயகி தன், பாகமார் சிவமே நின்மலா னந்தப் பரசிவ பூரண வெளியே, † நீகம்போற் கருணைமேய நிற் குணவ நிராமயச் செல்வமே நிகள, போகமே யோக போனகா வென்றன் புன்பழி யொழியெனப் பணிந்தான். (கச)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பணிந்தவன்றன்னைநோக்கிப்பரசிவமிகவும்பண்பாய்ப்
பிணிந்ததோர்பிழையுநீங்கிப்பிறங்கிறைவ்விதியேபெட்டாய்த்
துணிந்துநின்னுலகமெய்திச்சுகங்கொளென்றணிகளியாவும்
அணிந்தவன்புகலத்தீர்த்தலிங்கமுமமைத்துப்போனான். (கரு)

திரிபுராந்தகர்க்குவையத்தேர்விடறப்புந்திமைப்
பிரிதராவிதத்தயப்பேர்லிங்கபூசனையானீக்கிக்
கராசலவுரியான்பாதங்கண்டனனண்டரெல்லாந்
தராதலத்தவரோடேற்றிச்சாபமுந்தவிர்த்தார்மன்னே. (கசா)

அயன்பெயராலுண்டாக்கு மற்புதத்தீர்த்தந்தன்னிற்
பயன்கொளமூழ்கிப்பிரம்மலிங்கமும்பணிவார்க்கெல்லாம்
‡ வயமுறவளிக்கமன்னும்வடபுரத்தெல்லைதன்னிற்
றயவுளார்காணலென்றுந்தகுதியென்றுரைத்தார்தாமே. (கஎ)

பிரமனூர் சிவபூசாவிதியத்தியாய முற்றுப்பெற்றது.

---

* விரை - கலவைச்சாந்து முதலியவை. † நீகம் - மேகம். ‡ வயம் - வலி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஆறாவது

# சூரியபகவான் சிவபூசாவிதி

## அத்தியாயம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பெருஞ்சிவபூசைதன்னாற்பிழையொழித்தடிமலர்ச்சேர்
வரந்தனையெய்திவாழ்ந்தமலரவன்காதைமுன்னந்
திருந்தவுஞ்சொலத்தெளிந்தோந்தினகரன்பலியைக்கேழ்க்க
விரும்பினம்புகலென்சூதர்விருடியர்க்குரைப்பதானார். (௧)

ஆதியிற்காதியீன்றகோசிகவரசனென்பான்
நீதியும்வழுவாச்செங்கோனிகழ்த்துதல்புரிந்தறத்தாற்
றீதிலாவுயிர்களியாவுஞ்செழிக்கரட்சித்துவந்த
போதொருநசையால்வேட்டைப்புரிதரவெண்ணங்கொண்டான் ()

நால்வகைச்சேனையோடுநவில்வனம்புகுந்துநண்ணிக்
கால்வழிச்செல்லும் * பல்லங்கேசரிப் † பாய்மாவோடப்
பால்வழிப்பறவையாவும்பயமுறவேட்டம்பண்ணி
நூல்வகையுளவசிட்டனுண்பள்ளியடைந்தான்மன்னன். (௩)

மன்னவன்சிரமம்நீங்கிவணங்குறவசிட்டனோக்கிப்
பன்னுபுகாதிமைந்தோய்பரங்கொளுமதிதிபூசைக்
கென்னிடமிருந்துநாளையேகுமென்றுரைக்கவொவ்வா
துன்னுபுதானையோடுமடைதலால்விடைதாவென்றான் (௪)

கோசிகன்குறிப்பறிந்துங்குலவுபுநீங்களியாரும்
பேசுபுவதிதிபூசைப்பெற்றுடன்செல்லுமென்ன
வாசிலான்வற்புறுத்தவொப்பினர்காமதேனை
நேசமாய்வரவழைத்துநிகழ்த்தினன் ‡ நிசிதமாயே. (௫)

பெரும்படையாவினுக்கும்பெருந்தகைதனக்கும்நல்ல
விருந்திடவேண்டுமென்றுவிருடியர்கோன்விளம்பப்
பொருந்துமாற்குறைவொன்றின்றிப்புண்ணியத்தேனும்புக்கி
யருந்திடத்தகும்படிக்குமவரவர்க்களித்ததன்றே. (௬)

---

* பல்லம் - கரடி. † பாய்மா - புலி. ‡ நிசிதம் - கூர்மை.

இவர்களோர்நாளுங்காணாவினியதாம்பலகாரங்கட்
டுவர்ப்புவர்ப்பினிப்புக்கார்ப்புப்புளிப்புக்கைப்பாறினான்காய்த்
தவிர்தலிலுண்டியாவுந்தந்திடவுண்டுந்தக்கோ
ணவர்களோடுவகையெய்தியதிசயித்திருநினைந்தான். (௭)

காட்டினில்வாசஞ்செய்யுங்கடுந்தவர்க்கேவலாளர்
நாட்டியசாமா * னெங்ஙன் † னணைரபதியதாகம்
மாட்டொரு ‡ வகையுமெஞ்சலுளதிவர்பாற்கிடைக்குந்
தேட்டமத்தேனுவாலென்றறிவினிற்றெளிவுகொண்டே. (௮)

§ வரமுறும்வசிட்டர்தம்பான்மருவிகோன்சுரபிதன்னைக்
கரமுறக்கொடுக்கினிற்கேயாயிரம்பசுக்களோடுங்
|| தரமுறுமென்றனாட்டிற்பாதியுந்தருவேனென்னப்
¶ பரமுறப்பலவிதத்துங்கேட்கவுமளிக்காதாலே. (௯)

கொலைமுதலளிக்குங்கோபக்குறிக்கொடுங்கோசிகப்பேர்
சிலைதனிற்சரந்தொடுத்துத்தெறிக்கவன்பிரமதண்டம்
+ உலைதரத்தடுக்கயாவுமுள்ளுடைந்துருகிச்சோர்வாற்
கலையெலாமுணர்ந்தோன்றன்னைக்கருதியேயுரைக்கலுற்றான். (௧௦)

மறைவழிப்பூசுரர்க்கேமனும்பலன்பலன்கண்மற்றைத்
துறைவழிமன்னர்க்காதல்நிட்டபலன்றுல்லபந்தான்
× நறையனல்மூட்டியத்தைச்சுடினுநன்றென்றுநூலோர்
நிறைவழிப்பலனேவேண்டுமென்றுநேர்யாமஞ்சென்றான். (௧௧)

சென்றருந்தவங்கள்செய்யத்திருச்சங்குமன்னன்வந்தும்
நின்றென்கோறிக்கையாவுநீர்நிறைவேற்றிப்பின்னர்
துன்றுநின்வினைமுடிப்பேனெனச்சொலுமவனைச்சொர்க்கம்
நன்றுசெல்லெனவிடுத்துக்கோசிகன்மேனடந்தான். (௧௨)

மேற்றிசையடைந்துநோற்குமெய்யன்பாற் ∴ பகினிமைந்தன்
√ தேற்றமாச்சென்றெனுவித் | திறம்பலிலருடாவென்ன
= ஊற்றமாயவற்குமீந்துமுத்தரத்தெய்தியுன்னி
o யாற்றவுந்தவம்பணுங்காலரம்பையும் ÷ தடைகள்செய்தாள். (௧௩)

---

* எங்ஙன் - எவ்விதம். † நணல் - கிடைத்தல். ‡ வகை - தினுசு. § வரம் - மேன்மை. || தரம் - வகை. ¶ பரம் - செயல். + உலைதரல் - அழிதரல். × நறை - குற்றம். ∴ பகினிமைந்தன்=விசுவாமித்திரனோடுடன் பிறந்தாள்மகன். √ தேற்றம் - தெளிவு. | திறம்பல் - தவறல். = ஊற்றம் - புகழ். o ஆற்றல் - மிகுதி. ÷ தடை - விக்கினம்.

செய்தவடன்னைக்கல்லாச்செபித்துக்கிட்டிசையடைந்து
மைதவிழ்களனைநோக்கியுக்கிரத்தவமமைக்கக்
கைதவமில்லாத்தேவரியாவருங்கமலனோடு
மெய்திநீபிரம * லிங்கியாயினுயெனப்புகன்றே. (கச)

நல்வரமருளிச்சென்றார்வசிட்டர்பாணண்ணியநன்
வெல்தபாக்கினிக்கும்வீடாதிருக்கவும்விஸ்வாமித்திரன்
†பல்கலோடயனைநோக்கிப்பின்றவம்புரிந்தான்பற்றி
‡வல்கநான்முகனுந்தோன்றவடைவுடன்புகல்வதானன். (கரு)

உன்மகன்வசிட்டனார்க்குமெனக்குறும்வேறுபாட்டின்
றன்மைகளெடுத்துரைத்துத்தக்கதுபுரிவாயென்னப்
பன்மையும்விளக்கிநிற்கும்பருதிநற்கும்பயோனிச்
சின்மயச்சேடனோடும்மூவரைவரவழைத்தே. (கசு)

இருவர்க்குமத்தியாகவியம்புதறெரிந்துயானு
மருவியன்னவரோடின்னார் § மதியுளாரெனவகுப்பேன்
¶ றெரிநிலையுணர்ந்துசெல்லுமென்றயன்றெரித்தல்கேட்டச்
செருவிலிக்குரிசின் √ மேட்டிச் ∴ செலவிடல்கொண்டுசென்றான்

சென்றினனுலகமெய்திச்செங்கதிர்தனக்குச்செப்பி
யொன்றியென்னுடன்வாவென்னவோங்கலுமுரைத்தல்கேட்டு
இன்றுநான்வருவனாகிலிருள்கொளுமுலகமெல்லாம்
நன்றலச்செலுநீரநனன்வரக்கூடாதென்றான். (கஎ)

இறைவனுமிருடியென்பானிருள்வலியுலகைநீங்கிக்
குறைவிலிப்பொதிகையெய்திக்குறுமுனிதனக்குரைத்துத்
× திறவொடென்பானீ + செல்லல்வேண்டுமென்றிடவுங்கேட்டு
மறைவனான்வரிற் | கிடக்கையதமுறுங்கூடாதென்றான். (கஅ)

அங்ஙனமிருத்தல்நீங்கியதலபாதலத்தையெய்திச்
சங்கடமனைத்துமாதிசேடனுக்குரைத்தென்பாலு
மிங்ஙனம்போதல்வேண்டுமென்றனன்சிந்தின்மூழ்கி
||மங்குமிவ்வுலகமியாவுமியான்வரற்கூடாதென்றான். (உ0)

* - இருடி. † பல்கல் - வெகுநாள். ‡ அல்கல் - இராநாள். § மதியுளார் - ஞானி. ¶ தெரிநிலை - விளங்கிநிற்பது. √ மேட்டி - பரமேட்டி. ∴ செலவிடல் - அனுப்புதல். × திறவு - வழி. + செல்லல் - நடத்தல். | கிடக்கை - பூமி. || மங்கல் - கெடுதல்.

மூவருமியம்பல்கேட்டம்முனியரசெய்தியங்ஙன்
றேவர்சூழவையிற்போதன்றிருமுனஞ்செப்பலோடு
மாவலமுளவசிட்டர்தமையழைத்துணர்த்திநீர்போய்க்
காவல்கொள்மூவர்சேரக்கருதியே * கொணர்தியென்றான். (உக)

† வயவுளவயன்மொழிக்கொண்வசிட்டனுமனலியூர்க்குத்
தயவொடுபுகுந்தென்பாலுஞ்சவியேநீவரல்செய்யென்னப்
பயமொடுமுலகமல்லாற்பாழ்படுமெனவும்பன்னேன்
குயவனிக்கலையைவைக்கிற்கொளுமொளியெனக்கொடுத்தான். ()

வாங்கியத்தேரினிட்டும்வார்சுடரொழுக்கண்டேங்கிப்
பாங்குறியதிசயித்துப்பற்றிலானோடும்பண்பா
யாங்குறும்பொதிகையெய்தியகத்தியற்குரைத்தப்பாலும்
தீங்கிலாமுனிவர்முன்னந்தினகரனிருந்தகாலை. (உ௩)

தெள்ளுமுத்தமிழும்வல்லோன்றிருமுகந்தன்னைநோக்கி
வள்ளன்மையுளவசிட்டன்வகுத்தெலாமுரைத்தென்பாலு
மெள்ளவேவருதல்வேண்டுமென்றனன்கும்பயோனி
பள்ளமேடாகிப்பூமிப்பாழ்படநிற்குமென்றான் (உ௪)

என்றவன்றனக்குநீத்தோனெழில்கொடுபுகல்வானென்றன்
பொன்முடிக்கலசந்தன்னைப்புல்லுமாவிருக்கவைக்கில்
மன்புவிதனையழுத்தநிற்குமென்றிடச்செய்தன்னான்
நின்றதன்மகிமைகண்டுநிமலனோடடைந்தான்மன்னோ. (உ௫)

அடைந்தவன்பாதலத்தினாதிசேடனையழைத்துத்
தொடர்ந்தென்பால்வருதல்வேண்டுமென்றிடத்துகளொன்றில்லான்
படர்ந்துன்பாற்செல்வனாகிற்பாதலங்கடலின்மூழ்கி
‡ உடைந்திடுமிதற்கென்செய்வதென்னுமுன்னுரைப்பதானான். ()

எத்தனைவிதமுமென்றன்யோகதண்டக்கோல்செய்யப்
பெற்றுளதிதனைவாங்கிப்பெரும்புவிதாங்கவைத்துச்
சித்தினைக்கண்டென்பாலுஞ்செல்லுமென்றுரைக்கச்சேடன்
அத்தனைப்பலமுஞ்சித்துமறிந்தவருடனுஞ்சென்றான். (உஎ)

தவறிலாமூவர்தம்மைச்சத்தியலோகஞ்சேர்த்துப்
பவனநாயகனைப்போற்றிப்பரமஞானியிருக்கக்

---

* கொணர்தல் - கொண்டுவரல். † வயவு - ஆசை. ‡ உடைதல் - கெடுதல்.

கவனமாப்பருதிச்சேடன்கனகக்கும்பனையுநோக்கி
* யிவறலாய்க்கௌசிகன்றனியம்புவனிதனைத்தானே. (உஅ)

வசிட்டனார்தமக்கெனக்கிருக்கும்யோக்கியத்தாழ்வோடு
† விசிட்டமும்விதியாயென்பால்விளுமெனமுனியியம்ப
‡ நசிட்டவில்விதத்தாலுன்னிநவில்வர்நீர்கதமேற்கொண்டு
§ மசட்டையாற்றவமுநட்டமடைந்தனையிதுவேயென்றார். (உகூ)

சாந்தமேபதிக்மாகத்தவிசினைவிருத்திசெய்ய
|| வாய்ந்தவன்வசிட்டனென்றும்மன்னியவிருவர்தம்மிற்
றேய்ந்திடுமேற்றந்தாழ்வுஞ்சொல்லியற்பயனாலுன்னித்
தேந்தந்தநிலையினிற்கற்றெளிவெனத்தெரித்துச்சென்றான். (௩௦)

இடியெனமுழங்கிவிசுவாமித்திரனின்பமெய்த
வடியொடுகோபந்தன்னையகன்றுபோய்வடக்குத்திக்கிற்
கடுமையாத்தவங்கள்செய்யக்கருதினன்சென்றபின்னர்
நடுமையார்சேடன்றானும்நான்முகனுறவுகொண்டே. (௩௧)

இடந்தனைவிட்டுமீசனுணைக்குமிகலாய்வந்த
மடந்தனையொழிக்கவேண்டிக்காளத்திமருவிவள்ளற்
றடமலர்ப்பதம்பூசித்துத்தன்னுலகடைந்தான்கும்பன்
றிடமுறச்சுந்தரேசன்சேவைகொண்டிடம்போய்ச்சேர்ந்தான். ()

ஆதிமாபுரியையெய்தி ¶ யாதவன்றந்திரத்தின்
× வீதியாலாடிமாதப்பூரணையதனின்விள்ளாப்
÷ பூதியாற்சிவனையுன்னிப்பூசனைபுரிந்துநோக்கி
நீதியாற்கரங்கள்கூப்பிநிகழ்த்துவன்றுதிகடானே. (௩௩)

கொச்சகக்கலிப்பா.

நான்மறையின்முடியோங்குஞானமணிச்சுடரொளியே
வான்மறையுநாளுந்தவும்வளலேசந்தானபுரிப்
பானிறைவேபத்மதளநாயகிதன்பக்கலில்வாழ்
கோனறவேசைவக்குணவிதியேயென்மதியே. ()

---

* இவறல் - ஆசை. || வாய்ந்தவன் - பொருந்தினவன். † விசிட்டம் - மேன்மை. ‡ நசித்தல் - நசிட்டலெனவந்து அழித்தலெனப் பொருள்தந்து நின்றது. § அசட்டை - பராமுகம். ¶ ஆதவன்றந்திரவிதி - அம்சுமதந்திர விதி. அஃது இரணப்பிரகாசத்தினுற் செயுமோராகமவிதி. × விதி - வீதியெனமருவியது. ÷ பூதி - சித்திமகத்துவம்.

என்றொளிகொண்டெவ்வுலகுமெவ்வுயிருமெப்பொருளுந்
தன்னிருளைநீக்கித்தழைத்தோங்குஞ்சந்ததமும்
நின்றொளிகொண்டோர்கண்ணாய்நிகழ்கின்றோனின்மலனை
பொன்றொளியேஞானபூரணனென்றடிபணிந்தான் (௧௫)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

பணிந்தருண் மருவி யனற்றிசை யதனிற் பருதிபுட் கரணி யொன் றமைத்துத், துணிந்ததின் மூழ்கித் தன்னுல கடைந்தான் சோதியுந் தொல்விதி யதனால், அணைந்ததிற் படிந்து மருட்பர சிவத்தை யர்ச்சனை புரிந்தவ ணிருந்துத், தணந்திடாச் செபஞ் செய்திறைஞ்சிடி லெவருஞ் சவியென விளங்குவர் தாமே. (௧௬)

சூரியபகவான் சிவபூசாவிதி அத்தியாய முற்றுப்பெற்றது.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஏழாவது

# சரஸ்வதி சிவபூசாவிதி அத்தியாயம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மன்னிருவிருடியர்க்கும் * நடுநிலைவழங்கல்வேண்டித்
தன்னுலககன்றரன்றனனுமதிதவிர்த்தலாலே
பன்னியசாபமேவிப்பருதியுமொழித்தகாதை
முன்னமேயுணர்ந்தீர்வாணி † மொய்ம்பலிக்கொளலுரைப்பாம். (௧)

ஆதியிற்சுசிலனென்னுமந்தணனருந்தவத்தாற்
காதலாயீன்றரூபவதியினாட்கவினையுள்ளாள்
‡ நீதமாம்பொருளின்மிக்காணித்தலும்நிவப்பையுன்னி
யோதுவள்கர்வமாய்த்தற்கொப்பிலையொருவரென்றே. (௨)

இவடனக்கெதிரியாகியெவர்களும்புகழ்வதாகிக்
$ கவனமாக்கலைகள்யாவுங்கற்றளித்துரைப்பதாகுந்
தவநிலைச்செல்வமிக்கவித்தியாவதியும்வந்தாள்
அவளையுமழகின்மிக்கா || ளனுசிதம்புகல்வதானாள். (௩)

---

* நடுநிலை - நியாயம். † மொய்ம்பு - வலி. ‡ நீதம் - பாக்கியம். $ கவனம் - கருத்து. || அனுசிதம் - தகுதியின்மை.

இருவருழயர்வுதாழ்வென்றியம்புபுவிகளுந்தீர்ப்பார்
ஒருவருமமையமின்றிவாதமுமுறுதிகொள்ளத்
திருவருட்குறுகப்பத்மநாயகித்திருமுன்ஞானத்
துருவளர்மண்டபத்திஞெங்குறுமவையோர்முன்னே. (௪)

வாதமிட்டவரின்ருபவதியெனுமடந்தைவைய
மீதினிற்பொருண்மேலாகுமாதலால்வெறுக்கையில்லோர்
பாதகத்தாழ்வுமுள்ளார்பகர்மிடிகொள்வார்பன்னும்
தோதகப்பொய்கடுக்கந்தோய்ந்திளைத்தென்றுந்துன்னி. (௫)

கட்டமாபத்துமேவிக்கலங்குவர்கலங்கலாலே
கெட்டிடுமறிவுங்கெட்டாற்கிளரறங்குன்றுங்குன்றில்
மட்டிலாவிபசாரத்தால்மங்கையர்புதல்வரின்றி
நட்டமாவமிசமாறிநரகத்திலழிவர்தாமே. (௬)

ஆகையாற்றனிகன்மிக்கானறம்பொருளின்பம்வீடும்
பாகமானவைகளியாவும்பெறுவனிப்பொருளாலென்றும்
வாகையாமறைமனுக்கள்வகுத்ததிவ்வணநும்பாற்சந்
தேகமுமுளதேலின்னுந்தெரிப்பக்கேடெளிவிஞலே. (எ)

கல்வியிற்றேர்ந்துஞானங்கருதியகருணையோடும்
பல்விதநிலையினின்றுபயின்றுபுசமர்த்தனோனுந்
தொல்வினைப்பொருளிஞைச்சூழ்ந்தனுசரியாராகி
னல்விதநாற்றமில்லாவலரொனநண்ணுவாரே. (அ)

முன்னஞ்சீராமருக்கும்முனிவனுருபதேசிக்கு
மன்னியகதையினுன்கினத்தமேலெனவகுக்கல்
நின்னினைவதற்கொண்டாடிநிலத்தினிற்பொருளைத்தேடிப்
பின்னிடையாதிருக்கற்பெற்றியத்தனமேலென்றாள். (௯)

என்றவடன்மேற்போகமெய்துபுநிலையிற்புல்லி
நின்றவர்புலங்களெல்லாநிவப்பினிற்கிடந்துமாழ்கி
யொன்றுதோன்றுமலுத்திக்குதவினரிருக்கநோக்கி
நன்றலவெனமறுத்துநாட்டுவனெனவெழுந்தே. (௧௦)

வித்தியாவதியுங்கல்விவிரும்புவர்தமக்குநல்லப்
புத்தியோடொழுக்கம்வாய்மைப்பொறைபுகலடக்கங்கீர்த்திப்
பத்திமெஞ்ஞானசித்திப்பலவுங்கொண்டழிவிலாத
நித்தியமுத்தியெய்திநிலத்தினினிகழ்வரொன்பால். (௧௧)

* ஊதியமில்லாவொன்றுமுணர்விலாவூமையாவர்
† நீதியுமிழப்பர்நீடுமரணமுஞ்செனனநீங்கா
வாதனைமிகவுமுள்ளார் ‡ மனநியாயத்தின்வாய்மைச்
சாதனையறியார்பொல்லாச்சழக்கராயழிவர்தாமே. (கஉ)

எண்ணரும்பிறவிதன்னின்மானிடப்பிறவிதானு
மண்ணினிற்கிடைத்தும் § மானராதருல்லப || மடுத்தாற்
றண்ணருட்கல்விவேண்டுங்கற்கினச்செல்வந்தன்னாற்
புண்ணியப்பிறவிநீங்குஞ்ஞானத்தாற்புகழ்கொள்வாரோ. (கங)

வித்தையேமுத்திநல்கும்வெறுக்கையுமகங்காரத்தின்
சித்தியையளிக்குமத்தாற்சகலமுநசித்துப்போகும்
புத்தியுள்ளவர்கட்கல்விப்பொருடனையீட்டற்போத
முத்தியென்றுரைக்கும்வேதமிருதியைமொழிவதானுள். (கச)

ஈட்டலுந்துன்பமாகுமீட்டியபொருளையெல்லாம்
நாட்டலுந்துன்பமாதைநாட்டிடிற்சோராதி
கூட்டத்தாற்றுன்பமிக்கற்குறைபடிற்கெடினுந்துன்பம்
வாட்டத்தையுண்டுபண்ணுஞ்செல்வமுங்கொள்ளார்நல்லோர். ()

தனிகரும்புலவராசீர்வாதத்தைத் ¶ தலைக்கொள்ளாரோற்
பனுமமாவாசையிந்துபோனசித்தொழிவர்பண்பார்
+ அனிகமாங்கல்விச்செல்வமகிலமெங்கண்சென்றாலுங்
× கனிகையாக்கொள்வர்கள்ளார்கனகமுமதுபோலன்றே. (கசு)

உயர்ந்திடுங்கரையுணீர்போலுருளுறுஞ்சகடைக்காற்போல்
அயர்ந்திடநடிக்குங்கூத்துமவையகன்றழைத்தல்போலும்
பெயர்ந்திடல்வருதலொக்கும்பெருஞ்செல்வம்பேய்த்தேர்ஞாலப்
பயன்றருமறிவகற்றுமுறுதியுமழியாப்பண்பே. (கஎ)

எழிற்கல்விப்பெருக்கையுந்தானெவருமென்றுங்கொள்ளும்
வழிப்படுங்கீர்த்திநல்குமன்னரைவணங்கச்செய்யு
முழிப்படுந் ÷ தவறுளோரையும்பரின்வைக்கு §§ மூத்தைப்
பழிப்படும்வெறுக்கைக்கோப்பாவிஞ்சையைப்பகரலாமோ. (கஅ)

---

* ஊதியம் - கல்வி. † நீதி - முறைமை. ‡ மனநியாயம் - பகுத்தறிதல். § மானர் - மானவர், அஃது ஆன்மாக்கள். || அடுத்தல் - இட்டல். ¶ தலைக்கொள்ளல் - ஏற்றுக்கொள்ளுதல். + அனீகம் என்பது - அனிகமென இடைக்குறைந்து யின்மையெனப்பொருள்தந்தது. × கனிகை கனிதல். ÷ தவறு - தாழ்வு. §§ ஊத்தை - அழுக்கு.

ஆகையாற்கல்விமேலென்றறைவரெல்லோருமன்பாய்ப்
* போக † போக்கியங்கணல்கும்பொருளொரு ‡ பொருட்டாயெ
யோகிகளதனுலுன்னியொப்புஞ்ஞாயங்களாலும் [ண்ணுர்
பாகமாயெனக்குரைப்பீரவையுளீரெனப்பகர்ந்தாள். (க௯)

பகர்ந்தவள்பாற்றனத்தைப் § படிறர்மேலெனப்புகழ்ந்தார்
தகுந்தயோகியர்கண்விஞ்ஞைத்தனமுயர்வெனச் || சரித்தார்
புகுந்தொருமுடிவுங்காணுப்புன்மையாற்பலருஞ்சேர்ந்து
நகந்தருமுளரியம்பாள்முனந்துதிநவின்றுசொல்வார். (உ௦)

கொச்சகக்கலிப்பா.

எமையாளும்பத்மதளநாயகிப்பெண்ணேந்திழையா
முமையாளேயாதிபுரியோதிமமே ¶ யோவழக்குத்
தமையாளல்கொண்டு + தகவுரைத்துச்சார்பகற்றும்
அமையாளேஞானவம்பிகையென்றடிபணிந்தார். (உக)

பணிந்தவர்கடமைநோக்கிப்பத்மதளநாயகியார்
திணிந்திடுவர்தம்வழக்கின்றெளிவுரைத்துத்தீர்ப்பதும்யாம்
அணைந் × தறிவின்மண்டபத்தினமர்ந்திருமினென்றருளி
மறைந் ÷ திருசீருறுமளகைமன்வரவென்றுன்னினளே. (உஉ)

கலிவிருத்தம்.

அம்பிகையழைத்தலுமளகைவேந்தனுர்
உம்பரின்வந்தடிவணங்கவோதுவாள்
இம்பரினுறும்வழக்கினுக்குந்நீதியைப்
$ பம்புதல்செயுமெனப்பகர்ந்துசென்றனள். (உ௩)

செல்வமுங்கல்வியுஞ்சிறந்துமன்னிவாழ்
∴ எல்லையுமுளவளகேசனென்பவன்
பல்வளமுளவிவர்தமையுநோக்கியே
சொல்வனித்தனத்தினிற்கல்விமேலென்றுன். (உ௪)

வித்தைமேலெனவளகேசன்விள்ளலும்
புத்தி 0 ஞேயந்தனிற்பொருந்திநின்றனர்

* போகம் - விளைவு. † போக்கியம் - அனுபவம். ‡ பொருட்டு - காரணம். § படிறர் - பொய்யர். || சரித்தல் - நடத்தல் அதாவது இயற்றல். ¶ ஓ - இழிவுசிறப்பு. + தகவு - நீதி. × அறிவு - ஞானம். ÷ இருசீர் - இரண்டுசெல்வம். $ பம்புதல் - ஆரவாரித்துரைத்தல். ∴ எல்லை - காலம். 0 ஞேயம் - அறியப்படுவது.

சித் * தரிதீர்த்தமுஞ்செய்துபோயினான்.   (உரு)

ஆக்கரியம்புலிதீர்த்தத்தாடுவோர்
நீக்கருஞ்செல்வங்களியாவுநண்ணுவார்
பாக்கியவதிக்குறுந்தாழ்மையெண்ணியே
ஏக்கமும்பிடித்துப்பின்னியம்புவாள்முனே.   (உசு)

வித்தியாவதியுனக்கமைந்தமேன்மையைப்
பத்தியென்மனமிகப்பகைக்கும்பண்புளச்
சித்தமுமலைதரச்செய்ததாலினிப்
பித்துளப்பேயுருவாகவென்றனள்.   (உஎ)

என்றிடும்பாக்கியவதியையேர்பெற
நின்றிடும்வித்தியாவதிநோக்கியே
நன்றுணர்த்தெளிவிலிநடுநிலைப்பயனிலி
இன்றென்பாற்சாபமுமிடலுந்தோடமே.   (உஅ)

அறிவிலாமூடியம்புயத்தினாயகிப்
† பிறிதிலாமன்னனழைத்துணைத்துநன்றம்பாற்
‡ செறிவினையளித்தலைத்தெளியிலாயவள்
பிறிதினையன்றியோர்பெற்றிவேண்டுமோ.   (உகூ)

வருத்திடும்பொய்யிறுமாப்பும்வன்மையும்
பகுத்தறிவறிதராப்பிடிறும்பற்றியே
தொகுத்தெனக்கிட்டிடுஞ்சாபந்தோடம்யான்
உகைத்தலுங்கொளுமென § வுறுதியோதுவாள்.   (௩0)

மருவுறுமூடமதாந்தகாரமும்
பிரிவிலித் || தவறுமாசாரவீனமுஞ்
சுருதிசொன்னிலையிலித்தொடர்பும்பெற்றலைந்
¶ துருவிலிபோன்றெங்குமுலவுமென்றனள்.   (௩க)

இப்பெருங் + கேள்வியாளியம்புசாபமும்
ஒப்பிலாமூடிகொண்டோடிப்போயினள்
அப்பெருஞ்சபைகலைந்தறிஞர்யாவருந்
× திப்பியமகிமைக்கண்டேற்றிச்சென்றனர்.   (௩உ)

* அரி - சக்கரம். † பிறி - பிரீதி. ‡ செறிவு - நிறைவு. § உறுதி - கல்வி. || தவறு - குற்றம். ¶ உருவிலி - மன்மதன். + கேள்வி - கல்வி. × திப்பியம் - விளக்கம்.

## சிவசின்னமனுவிதி.

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

முத்தியே யளிக்குந் தெக்கணா மூர்த்திக் கீட்டிசைப் புறத்த
ரன் முகப்பின், வித்தியா வதிகொ ணினவினை நொடியின் விலக்கி
யுள் வெருவுற விருள்போல், பித்துறு பாசம் பிடிக்கவுந் தவிக்கப்
பெருங்கலை வாணிதேர்ந் ததனைச், சுத்தஞ்செய் திடத்தன்னேதி
சேர்புரியிற் றெல்விதிக்கொடு மடைந்தனளே. (௧௩)

அடைந்தவ ளூறுதிக் கறைவளிப் பாச மகல்தரு மஞ்சல்நீ
யன்பாய்த், தொடர்ந்தெனக் கரளு ரிருடிகட் குரைக்குந் தொன்
மறை யாகமத் துணிவிற், படர்ந்திடும் மணிநீ றெழுத் தெனும்
விதியைப் பகர்தரக் கேட்டுளேன் பலியை, மிடைந்தினிக் கெடி
லங் குடைந்துடல் புனைந்து மியற்றிடிற் றகுதியென் றிசைத்தே.

தன்பெய ரதனாற் றீர்த்தமொன் றமைத்துச் சதுர்மறை யாகம
விதியா, லெம்பிரான் றனக்கும் பத்மநா யகிக்கு மெடுத்தினி தாட்
டிடக் கெடிலத், தின்பொடு மூழ்கி விஞ்சையோ டெழுந்து மோர்
மணி நீறெழுத் திவைகள், முன்புறு மிடங்க ளணிபவர் பலர்கள்
முறைகொடு மவட்கியம் புவளே. (௧௫)

---

## விபூதிமகிமை.

உண்மையை யளிக்குஞ் சின்னங்கண் மூன்றி லுறுதியே நீறு
றுமிடந்தான், வண்மைகொ *ளடிகள் கோவிலின் யாக சாலையின்
வருமிதை மறையோர், திண்மைசேர் மன்னர் வசியர் சூத்திரரொன்
றல்வருந்தெளி வொடு தரிக்கி, னண்மையாம் பதவி யடைவ
† ராச்சிரமத் தவர்பொடி யணிவது மவரோ. (௧௬)

விறகினு லயத்தின் மடப்பளி யடிகள் வீட்டினில் விளைந்
திடும் நீற்றைப், புறமுறு மனிய சாதியர் பெண்கட் பொலிவுறத்
தரித்திடிற் பொருந்து, மறுவிலாப் பொடியை வடித்தெடுத் தன்
பர் மறையவரொடு முதனல்வர், அறமுறும் விதியாற் காலமூன்
றினிலு மணிதலு மருந்தவ மறியே. (௧௭)

---

* அடிகள்கோவில் - பெரியோர்மடாலயம். † ஆச்சிரமம் - பிரமசாரி, கிரக
த்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி இவர்களி லெவ்வாச்சிரமத்தரால் விபூதி
யமைக்கப்படுகிறதோ அவ்வாச்சிரமத்தாரோ தரிக்க.

பெண்கள்சந்யாசிப்பூசுரர்வானப்பிரத்தனர்வீடுமர்மனைவி
பண்கொளும்பூதிகுழைத்திடலாகாப்பகருபதேசமிற்படிவர் [இன்
விண்கொளவிமிர்ந்துமன்னிமூவிரலால்விதியொடுபுனையிற்றீர்ந் தத்
மண்முதற்றானங்கொடுத்திருநூறுமகஞ்செயும்பலனடைகுவரோ.()

உச்சிம ணெற்றிக் கண்டமார் பிருதோ ளுனுமுழங் கையும
ணிக் கட்டும், நச்சுபுச் சுழிய னன்விலாப் புறமே னவின்முழந் தா
ட்பல விடனும், துச்சின் மெய்யதனும் நான்மறை யசித காமிகத்
தொல்விதிப் பயனால், மெச்சியன் னீற்றைக் குழைத்தும்நாற் குல
த்தோர் மீவிர லங்குலப் படியே. (௩௯)

சொல்லியவிடங்கண்மூவிரற்படவுந்தொன்மனுவுரியணியவர்க
டல்லியசிவமாஞ்சதுரம்பொட்டோடுருளமூந்துன்மலயசமுங்
கல்லியமண்ணுந்தரிப்பவர்நரகக்காட்சியர்கடவுடல் வேலும்
புல்லியவரியின்சங்குசக்கரமும்புகலழற்காய்ச்சிப்பின்புறமே.(௪௦)

அந்தணர்தோளிற்சுடினுமப்பனவனடிமையாச்சூடுண்டானேனுஞ்
செந்தழனரகின்வீழ்வரான்றளிற்சிவசினமுளக்கெளதமனைச்
சந்தமார்மணணைப்பூசியமறையோர்தப்புரைசெயத்தவமுனிவன்
இந்தணிமுடியானடியர்பூதியினையிழிவுரைபுகன்றநீங்களுமே.(௪௧)

வெவ்வினை யுளராய் நரகத்தின் வீழ்வீ ரெனப்பெருஞ் சாப
மும் விடுத்தான், அவ்வினை யெய்தும் வைணவர்க் கின்னு மகந்
தைக ணீங்கிலை யந்தோ, செவ்வினை யுளர்பா னற்றழ கறிந்தாற்
செப்பிடார் வெப்பநோ யோடு, பவ்வினை யொழித்து ஞானமு
மளிக்கும் பூதியைப் பகர்ந்தணி பவர்க்கே. (௪௨)

ஆதலாற் பிரம னரியரன் முருக னம்பிகை நந்தி * யந்தணர்க,
ளதிலாக் கணங்க ளியாவரும் புனையுந் திருவெண்ணீ றதனையுந்
தெரிந்தே, காதலாய்ப் புகல்வார் பிறவிநோய் தீர்ப்போர் கற்பங்
கள் செலுந்தவக் கதிக்கும், பாதக மனைவகும் ஞானமெய் துவர்
க்கும் பகர்பொடி யன்றிமற் றிலையே. (௪௩)

சிவந்தது முறுக வெந்ததுங் கருமை யாகிய நீறுகொண்
டணிவோர், பவந்தனை யளவிட் டுரைக்கவு முடியாப் பான்மை
யாற் பரசிவப் பலிசெய், தவந்தனை யுடையார் தவளவெண் ணீற்

* அந்தணாகள் - அத்திரி, ஆங்கிரசன், கௌதமன், சமதக்கினி, பரத்துவாசன், வசிட்டன் விசுவாமித்திரன் என்னும் இவரெழுவாகளாம்.

றைத் தரிப்பது தகுதிபொய் தணந்துந், துவந்தமென் போகச் சுகந்தரும் பூதி ரட்சையின் றொல்விதி யிதுவே. (சச)

முத்தியை யளிக்கும் நீறுமேற் றிசையின் முத்தெனப் புவியி னில் விளையு, மத்தையா ரொடுத்து மணிகின்றார் முன்ன மறைவு றும் பூதியா மதனின், சித்தய னறியுஞ் செப்பிய கற்பத் தெய் வதப் பப்பத்தி னென்று, மித்தையும் புனைவா ரொன்றுபின் னுறு திக் கெழின்மணி யியலுமோ துவளே. (சரு)

## உருத்திராக்ஷமகிமை.

திரிபுர னென்னும் பெயருள வசுரன் செய்துறுங் கொடுமை யாற் றிகைத்துப், பரிபவ முளரா யயனரிச் சுரர்கட் பரசிவந் தனைப்பணிந் தேற்றி, யரியதாந் தவங்க ளாயிரம் வருட மாற்றவும் விடையி னம்பிகையோ, டிரியதுன் பறிந்து வந்துமுக் கணினு மொண்டுளி விழவுநோக் கினனே. (சசா)

நோக்கியே யுறுத்து முருத்திர னுர்க ணுண்டுளி யுருத்திராக் கமதா, யாக்கிய திரவி யிந்துன லக்கத் தருண்மணிப் பேதவன் னங்கள், போக்குநீக் கனைத்தும் புகரிலக் கதிர்க்கண் பொன்னிற மீராறு பிரிவாம், நீக்கமில் மதிக்கண் வெண்மையீ ரெட்டாய் நிகழ் தரத் தோன்றுமா மணியே. (சஎ)

தின்மைகொ ளனற்கண் டனிற்கரு நிறமாந் தெசவிதப் பே தமுந்திகழும், வெண்மணி மறையோர் வணிகர்க ளணிதல் விதிய தாம் பொன்மணி வேந்தர், வண்மையாப் புனைத றகுதிநற் கருமை மாமணிச் சூத்திரர் மகிழ்ந்தும், ஒண்மையாத் தரித்த லாகம நெறி யென் றோதினர் யாவையு முணர்ந்தோர். (சஅ)

கண்மணி முப்பத் தெண்விதமாகக் காய்க்குமத் துளிமரக் கிளையி, னுண்மணி முகமொன் றிரண்டரன் சொரூப * மும்பர் கோ வதைப்பழி யினையும், மண்மிசை புனைவார் தமக்கெளி தொ ழிக்கு மன்முக மூன்றுள மணியும், பெண்பழி யகற்று மதிகமாத் தரிக்கிற் பேரனல் வடிவமென் றறியே. (சகூ)

நான்முக மணியும் பிரமனுர் வடிவம் நவினர வதையறு மணி யின், வான்முக மைந்து மாமணிக் கால வனலுடற் பிணியெலா

* உம்பர் - பிராமணர்.

மகற்றும், வேன்மலிப் பகவ னறுமுக மணியும் * வேதியி னத்தியை விலக்கும், மேன்மலிச் சேட னெழுமுக மணியும் வெறுக்கையின் களவொழித் திடுமே. (௫0)

எண்முக மணியு மானைமா முகனு மெக்குரு மனைப்பழி யொழிக்கும், விண்முகத் தரிய † மோக்கமு மளிக்கு மெழினவ மணியிடக் கரத்திற், ‡ பண்முகமாக வணிபவர் கோடிப் பனவரின் கொலைப்பழி யொழிப்பார், மண்முகத் திதனை வயிரவ தேவாய் வழிபடின் மதியுந் தந்திடுமே. (௫க)

தசமுக மணியு மாயனும் விலங்காற் பேயினும் பெருந்துயர் தடுக்கும், பசுபதி ரூபம் பதினொரு மணியாம் பன்மக மோக்கமும் படைக்கும், இசைகொ ளீராறு முகமணி ரவியா மெண்ணிலா மகப்பலன் கொடுக்கும், § வசைகொளு மங்கம் வெட்டிய பழியு மாற்றிநல் வளமளித் திடுமே. (௫உ)

மன்பதின் மூன்று முகமுள மணியும் வள்ளிதெய் வானை நாயகனும், இன்புற விதனை யணிப்வர்க் கட்ட சித்தியச் செல்வமுமளிக்கும், துன்புற வொக்க ருய்மனைத் தாதைச் சோதரர் சுதர்க் கருதொலைத்த, வன்பழி யகற்று மிதற்குமேன் முகங்கொள் மணிகளு மிலையரி தென்றார். (௫ங)

கடவுண் முச்சடர்க்கண் டெளிவிறப் புவியிற் கருவுறிக் காய்க்குங் கண்மணியின், றொடர்பிது மணியும் விதிகளு மியமுஞ் சொலிற்சிகைக் கோர்மணி சிரத்திற், பழமணி முப்பத் தாறதாங் கழுத்திற் பகமொழு பத்திரண் டாகு, மடல்கொளு மார்பி னூற்றெட்டுங் கரங்கட் காறிரு மணிகளா மறிமே. (௫ச)

வாகுவி னைம்பான் மணிகளுந் தரிக்கி னுயிர மகப்பல னளிக்குங், கோகுமுன் மணியின் பொதியினைச் சுமந்துங் குறுகியவ் விங்கமு மடைந்துத், தேகமும் விடுத்துங் கைலையை மருவிக் கற்பமு மழிவிலாச் சிவமாய்ப், போகமு மகற்றும் பதவிவாழ்ந் திருத்தற் || கீதையும் புகலுமேற் கொண்டே. (௫௫)

வெள்ளி பொன்றாளம் பவளமா மணியி னிடையிடைக் கோத்ததின் முகங்க, ளுள்ளுறப் பொருந்த வைத்துமெக் குலத்தோருயர்குலத் தவர்களு முடன்மேல், விள்ளொணு வெழுத்தைந்

* வேதியினத்தி - பிர்ம்மஹத்தி. † மோக்கம் - சாயுச்சியம். ‡ பன்னதகுதி. § வசை - இழிச் சொல். || கீதை - சூதசங்கீதை.

தோதிமெய்த் தலஞ்சேர் விரதநற் பூசை யாசாரங், கொள்ளுநா ளலதெப் போதுமே யணியிற் கொடும்பவக் கோதகன் றிடுமே.()

மலசல விசர்க்க மங்கையர் முயக்கம் வருந்துத லருந்துதல் மயங்கல், பலவிதச் * சுதகத் தெண்ணெய்தேய்த் † துதகம் படி தலாங் காலமுந் தரிப்பார், நலசிதப் பெரியோர் விதியுளார் மணி யொன் றணிதலு நன்கதா மெவர்க்குந், தலமொடு மூர்த்தித் தீர்த் தமார் பலனுந் தந்திடுந் தரணியிற் றுனே. (ருஎ)

இறக்குமுன் மணிக ளாயிரமெடுத்து மெழிற்சிரங் கண்ட மார் பிருதோள், நிறக்குபு முழங்கைக் ‡ கிலுத்த § மங்குட்டம் நீள்செவி யதனினு நிறைப்போர், சிறக்குமுக் கண்க ளுறுஞ்சிவ மவரே செல்லிடம் யாவு நற்றலமாங், துறக்கரா மவரைச் சேவிப் போர் சுணங்கள் சூடினு ஞானமெய் துறுமே. (ருஅ)

அரிய கண்மணிக் கொப்பொன் றிலையதுபோல் யாணராற் செய்துமே யணிவார், உரியரு மல்லார் சாபமார் பிருந்தைத் தாம ரைக் கொட்டையு முகந்து, பெரியதா மணியாச் செய்தணிச் சம யப் பேய்க்குலப் பிறவிவை மாற்றுந், திருவளர் சைவந் தியற்கை மா மணியைச் சிவமெனப் புனைதலுந் தெளிவே. (ருகூ)

---

## திருமந்திரவியல்.

ஏர்பெறும் வாணி ருத்திராக்கத்தி னியல்விதி யாவையு மெடு த்துப், பேர்பெறும் வித்தைக் குறைத்துப் பின்மறைக ளாகமமனு க்களும்பிறங்கும், சீர்பெறுஞ் சைவஞான சித்தாந்தத் திருவெழுத் தைந்தையுந் திரட்டிப், பார்பெறும் படிக்குப் பிரணவத் துடனும் பலிசெய்வா டனக்கியம் புவளே. (சூ0)

எண்ணிலா மனுக்க ளியாவினுந் தலையா மெழிற் பிரணவ மனு விமையோர், மண்ணுளார் மறைகளாகமக் கலைகள் வளர்புவ னுதி தத்துவங்கண், நண்ணுபுச் சமய தெய்வங்க ளெவைக்கும் நவில்பெருந் தாரக மாகிப், புண்ணிய சைவப் பூரணஞான வெ ழுத்தைந்திற் பொருந்தியுட் புகுமே. (சூக)

புகுமறை விதியு மிருதிகள் விதியும் புகல்புரா ணங்களிற் பொருந்தத், தகும்விதியுறு முப்பத்து முக்கோடிச் சுரர்களும் பிர

* சுதகம் - சூதகம். † உதகம் - மழை. ‡ கிலுத்தம் - மணிக்கட்டு.
§ அங்குட்டம் - பெருவிரல்.

ணவத் தடங்கும், குகனரிக் கதிரோன் கணபதி யுமைகோன் குடி கொளு மனுவினிற் குலவி, யகங்கொளு மெழுத்து மறுபத்தெண் கோடி சத்தமா மனுவதிற் றலையே. (கூஉ)

மன்பர சிவகாயத் திரியிரண்டின் மணியொளி யினைப் பரம னுவுஞ், சின்மய வரனைச் சிவமனு வதுவுந் தெளிவுற வகுக்கும் நான்மறைக, டன்விதி சைவத் தருமிணி யிரண்டிற் கிரியைஞானி த் தருந் திக்கைப், பொன்னவுத் திரியா மதனினிற் பிசம் புகல் சபீ சப்பொருள் பலவே. (கூ௩)

பலகொணிப் பிசங் காமியப் பலனே பண்ணு நைமிகப் பலன துவுஞ், சிலவதிகாரத் தன்மையு முளதாற் றிருச் சமயங்களிற் சிற ந்தும், நலவிசேடத்தி னென் றெனப் பிறங்கி ஞான நிர்வாணத்தி னிரண்டாய், வலமிலா வசந்துச் சத்தெனவாகி மன்னிருவித மளி த்திடுமே. (கூச)

உடல்கெடு மீற்றின சந்தியமாகு முன்னுமப் பொழுது சத் தியந்தான், றிடம்பெறு முத்தி யளிக்குஞ் சபீசத் திருவகை மிணி யு நற்றெளிவாய்ப், படும் பௌதிகமா நைட்டிக மெனவும் பகர்பரி யாயமும் மொன்றும், விடுதலி லுலக தர்ம்மிணி யோக காமிக்கு முதவல்மேல் வருமே. (கூ௫)

வருந் திரோதான சத்திரு பத்தின்மன் சிகைச் சேதமு மில தாய்த், தருமிணன் முத்திக் காமிக்கு * மறைவு தஞ்சத்தி ரூபமாத் தழுவி, பொருசிகைச் சேதந் தொடுநல னுதவு மொன்சிவ தரு மிணி யிதுவே, பெரும்பர முத்திப் பயக்குமே லபரப் பதமுத்தி யம்மிணி தருமே. (கூகூ)

சமையவாசாரசுத்திகளின்றித்தருநிருவாணதிக்கைகளு
மமையதற் கங்கமாச்செயுஞ்சமயமன்விசேடங்களுமகலா
தமையாப்பிசந்தரும்பரவபரந்தபுபதமுத்திநிர்ப்பிச
மிமையதிகாரமின்றியேபயக்குமிப்பெருந்தீக்கைமாமனுவே. (கூஎ)

---

## சிவலிங்கவியல்.

ஆகமச்சமய † சைவசித்தாந்தமியாவினுமசிதங்காமிகத்தும்
பாகமாத்தெரிந்தீரொண்விதச்சைவம்பகர்விதியொடு‡மெழுவாயால்

---

* மறைவு - திரோதாயி. † சைவசித்தாந்தம் - சைவசமயத் தெளிவுண்மை. ‡ எழுவாயால் - ஆதிசைவ விதியால்.

ஏகமாத்விதமென்றியம்பிதையத்தோடேழிரண்டாறைந்துபலியில்
மோகமுநீக்குஞ்சிவபலியதனைச் *சிதபுகல்கொடுசெயற்றெளிவே.

## பொதுவியல்.

வேதமந்திரங்க ளாகம மனுக்கள் விதியினைத் தேர்ந்தருட் சத்திப், பாதம்வந் தணையுந் தாண்டவச் சிலம்பிற் பகரெழுத் தைந்துமொன்றாகும், போதசித் தாந்தப் பூசனைபுரியப் புகன்மணி பூண்டரு ணீற்றைக், காதலாயணிந்து மாதிமா புரியின் கருணையைப் பலிகொளற் கடனே. (௬௯)

## சிவபூசைமகிமை.

பூசனைக் குரிய நீறுமா மணியும் புனைந்தெழுத் தைந்துணிப் புகுந்து,வாசனை மலரான் விதிவழாச் சைவ வள்ளலைப் பலிசெயல் வகையென், றுசிலாக் கெடிலந் தோய்ந்தருட் சினங்கொண டரிபுரி யடையுங்,கேள்வியர்க்கும், பேசுவா ளின்னும் பூசையின் பெருக்கைப் பேரன்பால் வாணிப்பெண் கிளியே. (எ0)

குணங்குறி யிதுவென் றளவைகொள் மனத்துங் குறைக்கும் வாக்கினுக்கு மெட்டாத, வணமுள விலிங்கஞ் சிவவடிவாகு மாலயன் முதற் பெருந்தேவர், எணமுளா ரெனினுந் தத்துவச் சுரர்க ளெந்தையத் தத்துவ நியதிக், கணமதிற் புரிவார்க் கருளுஞ் சந்நிதிசேர் கடவுளக் கருணை வானவனே. (எக)

---

* அசிதமென்பது சிதமெனத் தலைக்குறைந்து வந்தது.

சைவம் பதினாறுவிதமாவன.-ஊர்த்தசைவம், அநாதிசைவம், ஆதிசைவம், மகாசைவம், பேதசைவம், அபேதசைவம், அந்தரசைவம், குணசைவம், நிர்குணசைவம், அத்துவாசைவம், யோகசைவம், ஞானசைவம், அணுச்சைவம் கிரியாசைவம், நாலுபாதச்சைவம், சுத்தசைவம் என்பவைகளாம். இவற்றுள் ஆதிசைவ விதிப்படி:-சிவபூசை இருபத்தாறு வகைப்படும்.

அவைவருமாறு:—சோமன், சூரியன், அக்கினி, இருதயம், பிரம்மரந்திரம், திருமுறை, மணல், மண், மா, நீறு, பூரணகலசம், கொன்றை, வில்வம், சலம், தருப்பை, பால், வேதிகை, சுவர் சித்திரம், படச்சித்திரம், சாணம், ஆரிடலிங்கம், தேவலிங்கம், ராக்ஷசலிங்கம், படிகலிங்கம், தீர்த்தலிங்கம், சுயம்புலிங்கம் ஆகிய இவைகளைப் பூசிப்பதாம்.

இவையன்றி மலைகளையு மிலிங்கமாகப் பூசிப்பாருமுளர், ஆரிடலிங்கமென்பது இருடிகள் பூசிக்கும் லிங்கமாம். இப்பூசைகளில் சிவபூசையே மிகமேலானது. இதன் பெருக்கம் காமிக வசிதமறைகளிற் கண்டுகொள்க.

இகத்தினிற் பரிதி முதற் பெருந்தேவ ரியாவரு மினுமவன் பதத்தா, ளகத்தினிற் கொளவு மலேகின்ருர் பரத்தி னயனரிச் சுரர்களு மனுகிப், புகத்திற மின்றித் திருமல ரடிக்கும் * புலர்கின்ருர் விஞ்சை புண்ணியமே, சகத்தியல் பூசைக் கொன் றனந்தமதா மெனச்சொலிப் பலி நடத்துவளே. (எஉ)

வாணி தீர்த்தத்தை மகிழ்வுட னெடுத்து மறைமனு வாகமவிதியைப், பேணி யன்பொடு பால் தயிர்முதலாகும் பெருந்திரவியங்களும் † பிறங்கத், தாணுவோ டுமைக்குஞ் செய் தபிடேகஞ் சாற்றிப் பீதாம்பர மலர்கள், பாணியாற் றூப தீபமுங் கொடுத்துப் பழியெலா மகற்றிடப் படிப்பாள். (எஙு)

கொச்சகக்கலிப்பா.

என்றன்மணவாளனயனரிமுதலாந்தேவரெல்லாம்
பொன்றலுளாரின்றன்ஞர்பொருட்டொன்றும்புரியாமற்
சென்றிவள்பால்நின்பூசைச்செயலாஞேஞுதிபுரித்
துன்றளத்திநாயகியார்சோதிஇயென்றடிபணிந்தாள். (எச)

பணிந்தெழுந்தபாரதிக்கும்பரசிவஞர்தாம்பகர்வார்
எணந்தவிழும்ருபவதியிட்டபெருஞ்சாபமெனும்
திணிந்தபிசாசம்பிடிக்கச்சேர்ந்திளேக்கும்வித்தையென்பால்
அணேந்திலிங்கபூசைசெய்வாளகல்விப்போமஞ்சலென்றே. (எரு)

கலிவிருத்தம்.

வாணியைநோக்கிமேல்வள்ளல்சொல்லுவார்
பேணிநின்றீர்த்தத்துன்பெயர்கொள்வித்தையை
‡ ஏணிலாமுழுக்கொடுமென்னேயேற்றிடக்
காணிலாதோடுமாற்களைந்துசென்றனர். (எசு)

§ தோச்சியுந்தோயமுந்தோய்ந்துபோற்றியே
|| ஓச்சலுங்கொண்டனள்பாசந்தன்னேயும்
¶ பேச்சுமித்தீர்த்தத்திஞடிப்பேணுவோர்
மூச்சுறும்வினேகள்போய் + மோனியாவரே. (எஎ)

* புலர்தல் - வாடல். † பிறங்க - நிறைய. ‡ ஏணிலா - எல்லேயிலா. § தோச்சி - வித்தை. || ஓச்சல் - ஓட்டல். ¶ பேச்சு - சொல்லல். + மோனி - முனி.

என்றியன்வாணியுமியம்பியெய்திறு
டுன்றியகேள்வியுஞ்சுருதியாகமத்
தன்றுகொடோல்விதிப்படியென்னையன்பா
னின்றயன்பூசையும் * நிகழ்தல்மேவினாள். (எஅ)

மேவியவுறுதியின்பலிக்கிரங்கமென்
றுவியுநீங்கியேயருளடைந்தனள்
பூவினில்யாவரும்போற்றிசைத்துமவ்
வாவியுளீசனைவணங்கிப்போயினர். (எகூ)

போயபின்மதுரையெம்புனிதனுனையான்
மேயமன்சேகரமாறன்மேருவிற்
றாயபொன்கொடிவரிப்புரியைச்சேர்ந்தா
னேயமாமலரிணைப்பதநினைந்துபின். (அ0)

ஆலவாயெய்தியந்தணர்களின்புறச்
சாலவேமந்தனுற்றருவசெய்தபின்
சீலமெஞ்ஞானசம்பந்தமூர்த்தியுங்
கோலமாணிக்குழிக் † கோடுவந்தனர். (அக)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

வந்து சந்தான புரியினின் மகிமை மன்னுறத் தீர்த்தமு மமை
த்து, நிந்தைகொ ளமணர் தமைச் சயஞ்செய்ய நிமலனை யுமையை
யர்ச் சித்துச், சிந்தையா னினைந்து ஞானமண் டபமுஞ் செய்ததி
னிருந்துசின் னாளிற், பந்தமி லால வாயினை யடைந்தார் பாலரு
வாயவெம் பரனே. (அஉ)

இன்பினை யளிக்குந் தெக்கணா மூர்த்திச் சந்நிதிக் கீட்டி
சைச் சுவர்ப்பான், முன்புறத் தோன்றும் ராஜசே கரப்பொன்
னேதியி னுருவமு முறையாத், துன்பெலாந் தவிர்த்துப் போக
போக்கியமுந் துன்னுமப் புரியுங் கண்டவர்க்குப், பன்னுமிச் சரி
தங் கேட்டவர் தமக்கும் பரசிவந் தருதலும் பலவே. (அங)

சரஸ்வதி சிவபூசாவிதி அத்தியாய முற்றுப்பெற்றது.

---

* நிகழ்தல் - நடத்தல். † கோடு - பக்கம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

எட்டாவது

# பத்மதள நாயகியார் திருநாம

## அத்தியாயம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

வளங்கொளும் ரூப வதியினு லுருதி மருவிய பாசமு மகற்ற,
வுளங்கொளிச் சைவ புரியொளி யடைந்திங் கோதியுஞ் சிவபலி
யுரைக்க, களங்கமு நீங்கிக் கனம்பெறல் முன்னங் கணாதரக் கேட்
டுளோங் கருணைத், துளங்குமை முளரி நாமமுங் * கோடற் சொ
லுமெனச் சூதனுர் மொழிவார். (க)

மாழையுந் தளிர்த்துக் கோங்குக ளரும்பி மந்தரஞ் சந்தனம்
பூத்துத், தாழைகள் விரித்துக் கன்னியை முறுக்கச் சண்பகம் வெ
றியிலி குசத்தின், வாழை நாரத்தின் னுடுமரீஇக் கமழ்க மதலை
யும் நாகத்தை மறைக்க, ஏழையர் விழிக்காம் பிண்டியுஞ் செழிக்
கு மிண்டையெற் புனல் மருங்கினுமே. (உ)

தளவஞ் செவ்வந்தி மாலதி முதலாந் தண்மலர் தரும்விரைச்
சவியூர், கொளவிருஞ் சுனைக ளியாவினுங் குவளை † யகவிதழ்
முளரியும் பூர்க்க, ‡ வளவளா வியதம் மணமுடன் பொழிலு
மளிப்பிகங் கூவலா லனங்கள், நளினமே லாடும் பிரமரம் பாடும்
நவிறென்ற லுலவுமந் நாளில். (௩)

கலிவிருத்தம்.

நாரணன்றனச்சக்கரத் § தைங்கரன்
|| மாருதாசை ¶ நளினப்புனலினில்
காரணிக்குங்கருதிக்கிரீடையைப்
பூரணத்தவன்செய்யப்புகுந்தனன். (௪)

---

* கோடல் - கொள்ளல். † அகவிதழ் - அல்லி. ‡ அளவளாவல் - கலத்தல். § ஐங்கரன் - வரசித்திவிநாயகன். || மாருதாசை- மாருதம் ஆசையெனப் பிரிந்து காற்றுத்திசையெனப் பொருள்தர வந்தது. ¶ நளினப்புனல்- பதுமப்புனல். (பதுமன் - சூரியன்.)

புகுந்தபோதுமைப்புட்கரம்மூழ்த்தலுந்
தகுந்தகுமெனத்தாணுவுக்கோகையா
லகந்தனிற்பலிசெய்துமர்ச்சிக்கவன்
றுகந்தலீலைக்கிடருமலுன்னியே. (ரு)

பத்மமாந்தளநாயகிபாவனை
வைத்தல்போதும்வரக்கிரீடைக்கென
வுத்தமீயுமந்நாண்முதலிப்பெயர்
பெற்றனளரனாலும்பிறங்கியே. (சு)

செய்யும்லீலைசமயத்தெழுவயர்
பொய்யிற்றருகக்கானம்புகுந்தினன்
அய்யன்சேவைக்கடைந்தனரங்கிலா
துய்யுமாடலுகத்தலுணர்ந்துமே. (எ)

தங்கித்தம்பெயராலொருதீர்த்தமு
மங்கமைத்ததின்மூழ்கியர்ச்சிக்கவிப்
புங்கவனெதிர்தோன்றியருளலும்
திங்கள்போலொளியாலுந்திகழ்ந்தனர். (அ)

எழுசீரடி யாசிரியவிருத்தம்.

என்றுமே காண்க விருடிக ளெழுவ * ரெல்விமானக் குடத் தருகிற், † றுன்றியே யிருப்ப ராதலாற் றலங்க ளியாவினுஞ் சிற ந்ததிப்பதியே, சென்று மாதவருந் தேவரும் பலியே செய்தருட் கொண்டனர் தெளியார், பொன்றுநாட் சேவை புரியினும் பெரி யோர் புண்ணிய மளிக்குமிப் புரியே. (கூ)

பார்முதற் றலங்க ளியாவும்போய்த் தருமம் பண்ணிநற் பலி செய்வார் பலன்க, ளூர்வழிச் செல்வோர் தங்கியிப் பதியி னுணி ‡ மிச்சி லளித்தலுக் கொவ்வாத், தேர்வழி கொடுக்கு மரிபுரி யுள் ளோர் சிவகணந் தெரிந்தவ ரோனுஞ், § சீர்முதற் புரியி னவரொய் தும் பயன்கள் சேடனுஞ் செப்ப வஞ்சுவனே. (க0)

பத்மதளநாயகியார் திருநாமவத்தியாய
முற்றுப்பெற்றது.

---

* எல் - ஒளி. † துன்றல் - பொருந்தல். ‡ மிச்சில் - எச்சில். § சீர் முதல் - பொன்முதலியவை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாவது

# பிரதக்ஷணவிதி அத்தியாயம்.

எழுசீரடியாசிரியவிருத்தம்.

மாதவ முடைய விருடிகள் பலரும் வணங்கியச் சூதமா முனியின், பாத தாமரைநீ ருட்கொளும் பூசைப் பணிப்பினும் பகர்வரப் பனைக்கும், போதளப் பதும நாயகி யெனும்பேர் வாய்த்ததும் புகலமுன் னறிந்தோம், காதலாய்ப் பிரதக்ஷணஞ் செயும் விதியைக் * கட்டுரை யெனக் † கழைத்தனரே. (க)

சிவபெருமானைத் தரிசனை புரியுந் திருமறை விதியினைத் தெரிந்துப், பவமிலா ருதைய முச்சி மாலையினும் பகர் பிரதோட காலத்துந், தவ செப முடித்து நீறு கண்டிகையுந் தரித்திநனாலயந் தன்னைக், கவனமா யெண்ணி யாகுவி னிர்த்தக் கணபதிப் பூசை முன் புரிந்தே. (உ)

மெய்யுறப் பணிந்து நந்தியீச்சுரன் றன் மென்குறி யிடைக்கரம் புகுத்திச், செய்யகொம் ‡ பூடு மிருகணை யிருத்தித் தரிசன $ வனுக்கைகொண் டெழுந்து, சைவநாயக வோ மரஹர வெனவுஞ் சதுர்மறை முறையினாற் சவியூர், அய்யனைத் துதித்தும் ¶ விடைநடு விருந்து மப்பெருங் காட்சியை யடைந்தே. (ங)

தெளிவருண் ஞானத் தக்கண முர்த்திச் + சித்திதன் கணபதிச் சிவத்தி, ஒளிவளர் ஞான வறுமுகப் பரனுர் தன்னையும் வணங்கிநல் வலங்கொண், டளிதரு மிரண்டாம் பிரகாரத் துமை

* கட்டுரை - பொருளுள்ளசொல். (அதாவது உறுதிச்சொல்.) † கழைத்தல் - சொல்லுதல். ‡ ஊடு - நடு. $ அனுக்கை - விடை. ¶ விடைநடு - இடபக் கொம்பினடு. + சித்திதன் கணபதி - வரசித்தியாம் விநாயகர்.

யை யருந்துதி புரிந்துமம் மூன்றிற், களிகொள விருக்குஞ் சைவ லக்குமியின் கணவனைத் தொழுது கண்கொண்டே. (ச)

எங்குமாய் விளங்கு மீசனைப் பலகா லேத்தியங் கெழுதரம் வலங்கொண், டங்குறும் ஞானத் தக்கணு மூர்த்திச் சந்நிதிக் கெதிரி னேந்தெழுத்தாற், செங்கை மாலையினாற் செபமொரு நூறுஞ் செய்துபின் சண்டி யீச்சுரன்பாற், கங்கை வேணியனூர் கருணையு முளராய்க் * கருதும்வான் பலியினைப் புரிந்தே. (ரு)

பலிகொளுந் தேவர் தங்களைப் பரமன் சந்நிதிக் கனுப்பியும் பரிவால். மலிவுறத் திருமுன் னொருபுறங் காட்டி மகிழ்வொடு தரிசன மருவிற், † கலியிலிப் பூதி யாவையு முளராய்க் கடையினிற் கணங்களாய் வாழ்வார், நலிவுள வொருகாற் சிவவெனிற் பெரிய நன்மைக ளளிக்குமிச் சிவமே. (சு)

உரைக்குந் திக்குணங்க ளீரைந்து மகன்று முண்மைசேர் நற்குணம் பத்தின், கரைக்குமோர் தவத்தா னுசையை யறுத்துக் கருதுபு வருளினிற் கலப்போர், புரைக்கொளி னொருக்காற் றவிர்க்கவித்தலத்திற் புந்தியைச் செலுத்திற் போக்கடிக்கும், தரைக்கணைத்தலத்தும் நீங்குறுப் பவமுந் தணக்குங் கண்டிடுமவர் தமக்கே.

இத்தல மதனில் வசித்துளோர் தமக்கு மிருவினைத் துடர்பறுத் தெழிலார், சித்த சுத்தியினாற் சிவனருள் கலக்குந் தெளிவினை யளிக்குஞ் சின்மயத்தாற், பத்திசெய் பவர்க்கு மொன்றிரண் டென்னும் பான்மையை யொழித் தருண்மயமா, முத்தியை விளக்கு மரிபுரிச் சிவத்துக் கொப்பிலை யெனப்பினு மொழிந்தான். ()

மகிமைகொ டலத்தின் கதையினைக் கேட்டு மனனஞ்செய் தொழுகுவர் வளலாய்த், தகமைகொ ணிதியம் பெருகிச் சந்தானந் தழைந்து மித்தரணி வாழ்ந்திருப்பர், ‡ வகமைகொள் சைவச் சுருதியென் றிதனை வகுத்தனு தினம்வழிப் படுவோர், பகைமைகோ யில்லாப் புலமையும் பெறுவர் பாக்கிய வான்களு மிவரே.

புண்ணியக் கதைக ளியாவுங்கேட் டுணர்வார் பெறும் பலன் சரிதமொன் றருளுங், கண்ணுதற் பூசை யாவுமிப் புரியைக் கரு

---

* கருதும் வான்பலி - துவாரபாலகர் கேத்திரபாகர் பூசை. † கலியிலிப்பூதி - வறுமையிலாச் செல்வம். ‡ வகமை என்பது வகம் - ஐ எனப்பிரிந்து வழிநுண்மையெனப் பொருள்தந்தது.

துவர்க் களிக்கு நற்கருணை, வண்ணமிச் சோதி வடிவங்கண் டொருக்கால் வழிபடுவோர்முடி வதனின், விண்ணவர் தாங்கும் * வாகமே லெய்தி விரிகணத் தலைவராய் வாழ்வார். (௧௦)

என்று சந்தானப் புரிமகிமைகளு மியம்புபுச் சூதனு ரிணைத்தாட், சென்றுற வணங்கி யச்சிவ மணியைச் சிந்தை யேமந்தனிற் பதித்துத், துன்றிய வொளியா னிறைவுறத் தருமன் வைதிகக் கருமஞ்செய் துறவும், அன்றுமா முனிவ ரவனில மடைந்தே யருங்கதை புகன்று வாழ்ந் தனரே. (௧௧)

பிரதக்ஷணவிதி அத்தியாய முற்றுப்பெற்றது.

---

அறுசீரடியாசிரியவிருத்தம்.

மாதமும்மாரிபெய்யவையமும்வானுமல்கச்
சாதகப்பெரியோர்பூணுஞ்சாதனம்பொலிகச்சான்றாய்
வேதகச்சவியூரோங்கும்வித்தகப்பரம்பரைத்தன்
பாதப்போதனையுமென்றன்பனுவலும்வாழ்கமாதோ.

எயினனூர், சந்தானபுரியென்று வழங்கும்

ஆதிபுரஸ்தலபுராணம்

முற்றுப்பெற்றது.

---

* வாகம் - விமானம்.

---

இ ஃ து

தி ல் லை க் க டு த் த

தெம்மூர் - வைத்தியநாததேசிகரால்

இயற்றப்பட்டது.

பூமேவுசெழுங்கமலமுகைவிரியுமுறுந்தேனும்புனல்கொள்வாவித்
தேமேவுமுறுந்தெரியல்துளவணிவோன்கரத்துவளைத்தினமுங்கூர்
தூமேவுவளம்புனைந்ததொண்டைநாட்டினையடுத்துத்துலங்குமேன்மைத்
தேமேவுகடிபொழில்சூழ்செய்யதிருமுனைப்பாடிச்சிறந்தநாட்டில். (௧)

நறைவீற்றிருந்துமணங்கமழுநறுமென்கமலக்கயற்றிருந்து
சிறைவீற்றிருந்தமடவன்னந்தெரிவைமாரின்னடைகற்கு
மறைவீற்றிருந்ததிருமாணிக்குழியென்றுரைக்குமாநகர்க்கு
நிறைவீற்றிருக்குமெய்ததனூரொன்னுநெடியதிருப்பதிக்கு. (௨)

சந்தானபுரியென்றுந்தருமாதிபுரமென்றுந்தவத்தோர்வைகுங்
கொந்தாருமலர்ச்சோலையெயினனூரெனுமூன்றுகோதில்நாமம்
வந்தேறும்புவிவழக்கில்நெசனூரொன்றேமருவிவழங்குமூரில்
பந்தேறுமுலைமங்கைபதுமதளநாயகியும்பரனும்வைகும். (௩)

சீதரனுந்திசைமுகனுஞ்செய்யதிறல்வாலியுஞ்செங்கதிருநாளு
மாதிபுராதனரைவழிபட்டுபதமடைந்தகதையனைத்துமுன்ன
மாதவத்துச்சூதனுரைவடமொழிமான்மியத்தைமதிவல்லோராய்ந்து
பூதலத்திற்றென்மொழியிற்பனைமடலில்வரைந்திருந்தபுராணந்தன்னை. (௪)

அரியமாதவநகரிலாதிசைவகுலத்துதித்துமணியார்கங்கை
திரைபடிந்தும்விசுவேசன்செய்யமலர்த்தாளிணையைச்சிந்தித்தேற்றும்
பெரியமாதவப்பேற்றான்றருசுப்பராயகுருபெற்றோனன்பு
விளைவுபுகழ்படைத்தோங்குவிசுவநாதப்பேர்கொள்மேன்மையோனே. (௫)

பொன்பூத்தநறைவிதழிப்புரிசடையுமழுமானும்புணர்முன்னூலு
மின்பூத்தவெண்ணீறும்விழிமூன்றும்வரதபயம்விளங்குகையுங்
கொன்பூத்தபுலியுடையுங்குறைகழலுமால்விடையுங்குளிர்மென்றேருக்கு
மன்பூத்துமாதிபுராதனர்பணியேயெப்போதுமகத்துளோனே. (௬)

சந்திரனைமுடிக்கணிந்துதன்னடியார்க்கிடர்தீர்ப்பான்றன்னைப்பாடுஞ்
சுந்தரனேமீட்டுமிந்தத்தொல்லுலகிலவதரித்துத்தோன்றினானே
மந்தரமேகடல்நாட்டிமத்தெரிந்துசுரர்க்கமுதம்வழங்கிநின்ற
செந்திருவாழ்மணிமார்பன்சிவனடியார்வடிவெடுத்துச்சிறந்திட்டானே. (௭)

என்றுபுவியகத்துள்ளோரொண்ணிமயங்கிடவெண்ணீறிலங்குமெய்யே
கன்றுமான்மழுவுடையான்கண்மணியேபுனைந்திருக்குங்கவினார்தோளே
மன்றல்கமழ்புரிகுழலாள்மலைமகளுமயனுமைத்தமறைசொல்நாவே
சென்றுமலர்தெரிந்தாய்ந்துசிவனடியேபூசிக்குஞ்செம்பொற்கையே. (௮)

காமிகமேமுதலானவாகமங்கள்பலவுணருங்கருத்துளோனற்
றேமலியுநறுங்கொன்றைச்சிவன்கோயில்விதியனைத்துந்தெரிந்துளானே
தாம்விதிகள்விலக்கினையுந்தெரிந்தாய்ந்துவினைசெய்யுந்தக்கோன்மிக்க
காமலியுநந்தனமுமலர்த்தடமுந்திருப்பணிசெய்கருத்துளானே. (௯)

இத்தகையோர்தான்றேன்றுமெழிற்றலத்தின்மான்மியத்தையெவருங்கண்டு
சித்தமகிழும்படியேசென்னைநகர்பாவலர்க்குச்செம்பொனல்கி
சுத்தமுறும்படிபழுதுமுழுதகலவாராய்ந்துதுலங்குமச்சிற்
புத்தகமாப்பதிப்பித்துபுவனியுள்ளோர்க்காரமுதாய்க்கொடுக்கின்றானே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.